
# கோகுலம்

GOKULAM | பிப்ரவரி 2000 | ரூ. 6/-




## பட்டணத்துத் தம்பியும் பட்டிக்காட்டு டிராக்டரும்!

## ஏழு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



விடை: 1. சூரியன் 2. பறவை 3. உச்சி மரம் 4. பழங்கள் 5. மரத்தின் அடிபாகம் செடி 7. கீழுள்ள பழம்

## பிருந்தாவனம்







''நல்ல பலம் பெற டானிக் எழுதிக் கொடுத்தேனே!''

''அந்த டானிக் பாட்டில் மூடியைத் திறக்க முடியலை டாக்டர்!''

– எஸ். மோகன்

ராஜா வெளியே செல்ல வழிகாட்டுங்கள்!





# கோகுலம்

**2000**

**பிப்ரவரி**

**மலர் : 18**

**இதழ் : 1**



உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

***அன்புள்ள சிறுவர் சிறுமியரே,***

**ஹை**ஜாக் சம்பவம் காரணமாகக் கவலையில் ஆழ்ந்து போயிருந்த நமக்கு புத்தாண்டின் தொடக்கத்தில் நல்ல செய்தி கிடைத்தது. விமானப் பயணிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர். இதற்கு விலையாக நமது சிறைச்சாலைகளில் இருந்த மூன்று பயங்கரவாதிகளுக்கு விடுதலை அளிக்க நேர்ந்தது என்பது ஒரு பின்னடைவுதான்; என்றாலும் தவிர்க்க முடியாததாகி விட்டது. எதிர்காலத்திலாவது விமான நிலையங்கள் மட்டுமின்றி, விமானப் போக்குவரத்து நிறுவனங்களும் விழிப்புணர்ச்சியுடன் செயல்பட்டு, இது போன்ற அசம்பாவிதங்கள் நிகழாமல் தடுக்க வேண்டும். முன்னெச்சரிக்கையாகச் செயல்படுவது குறித்து வள்ளுவர் பெருமான் என்ன சொல்லியிருக்கிறார், தெரியுமோ?

**வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்**
**பகைவர்கண் பட்ட செருக்கு.**

அதாவது, 'செய்யும் வகையை அறிந்து, தன்னை வலிமைப்படுத்திக் கொண்டு, தற்காப்புத் தேடிக் கொண்டால், பகைவரிடத்தில் ஏற்பட்ட செருக்கு தானாகவே அழியும்.'




திருவள்ளுவர் காட்டும் வழியில் ஆட்சி நடக்குமானால் மக்களும் நடந்து கொள்வார்களானால் எவ்வித துன்பமும் நேராது. தேசமும் சுபிட்ச மடையும். இது நமக்கு மட்டுமா? இல்லை. உலக நாடுகள் எல்லாவற்றிற்கும் வள்ளுவர் கூறியிருப்பன அனைத்தும் பொருந்தும். அதனால் தான் வள்ளுவரை 'தெய்வப்புலவர்' என்றும் திருக்குறளை 'உலகமறை' என்றும் போற்றுகிறோம்.

**இ**ப்படி உலக மக்களுக்கெல்லாம், ஆட்சியாளர்களுக்கெல்லாம், தொழில் நிர்வாகிகளுக்கும் கூட, எளிதில் பின்பற்றி பயன்பெற வசதியாக திருக்குறளை இரண்டு இரண்டு வரிகளில் அழகாக எழுதிய வள்ளுவரை, 'உலகுக்கே வழிகாட்டுகிறவர்' என்று வர்ணித்தால் தப்பில்லை. அதனால்தான் தமிழக முதல்வர் அவருக்குப் பெருமிதத்துடன் குமரிமுனையில் மாபெரும் சிலை எழுப்பியிருக்கிறார்.

வரும் கோடை விடுமுறையில் சுற்றுலா கிளம்பும் நீங்கள், குமரி முனையில் வள்ளுவர் சிலையைப் பார்க்க ஆர்வமுடன் இருப்பீர்கள். உங்கள் ஆசை நிறைவேறட்டும். அத்துடன் தினம் ஒரு குறளாவது படிப்பது, படித்தபடி நடப்பது என்று உறுதி பூண்டால் வள்ளுவர் உயரத்துக்கு நாமும் வளர்வோம்!

கோகுலத்துக்குப் பிறந்த நாள் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகள் கூறிய அனைவருக்கும் நன்றி.

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.

# கோகுலம்


## பிப்ரவரி 2000 இந்த இதழில்...





## மீண்டும் ஹபுள் தொலைநோக்கி!

**வி**ண்வெளிக்கு அமெரிக்கா அனுப்பிய ஹபுள் தொலைநோக்கியில் பழுது ஏற்பட்டது. அதில் பழுது நீக்க டிஸ்கவரி ஓடத்தில் 7 விண்வெளி வீரர்கள் சென்றனர். மூன்று முறை விண்ணில் இறங்கி பழுதை சரிசெய்தனர். 12 டன் எடையுள்ள ஹபுள் தொலைநோக்கியின் ஒரு புறம் சூரிய ஒளி பட்டுக் கொண்டே இருக்கும். இதற்காக புதிய வெப்ப பாதுகாப்புப் படலம் தொலைநோக்கியில் பொருத்தப்பட்டுள்ளது. இப்போது மீண்டும் ஹபுள் பூமியின் சுற்றுவட்டப் பாதையில் உலா வருகிறது.



## பலூன் வீடு!

**ஹெ**லிகாப்டர் வழிநடத்திச் செல்ல, வெப்பக் காற்று பலூன் ஒன்று மிலெனிய கொண்டாட்டங்களுக்காகப் பறக்க விடப்பட்டுள்ளது. இந்த பலூன், வீடு போன்ற வடிவமைப்பைக் கொண்டது. வீட்டின் கூரையில் இரண்டு பொம்மை பூனைகள் அமர்ந்திருக்கின்றன. பிரிட்டனில் உருவாக்கப்பட்ட இப்பலூனின் உயரம் 20 மீட்டர்.

## இன்னொரு டைட்டானிக்!

**660** பேருடன் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து இலாய்லோ தீவிற்கு ஒரு கப்பல் புறப்பட்டது. கிறிஸ்துமஸ் பண்டிகையை உற்சாகமாகக் கொண்டாட கிளம்பியவர்








## கோகுலம் நியூஸ்

கள் மறுநாள் பெரும் சோகத்தில் மூழ்க வேண்டியதாகி விட்டது. மழை பெய்து கொண்டிருந்தபோது திடீரென கப்பல் கடலில் மூழ்கியது. இதுவரை 190 பேர்களை மீட்டுள்ளனர். 470 பேர்களைத் தேடும் பணி தொடர்ந்து வருகிறது. உரிய பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்காமை, பழமையான கப்பல்களை பயன்படுத்தியது போன்ற செயல்களே விபத்திற்கான காரணம் என்று கூறப்படுகிறது.


### மக்காவ் தீவில் மகிழ்ச்சி!

சீனாவின் ஒரு பகுதியாக இருந்த மக்காவ் தீவு இதுவரை போர்ச்சுகீசியர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. ஆசியாவின் கடைசி காலனி ஆதிக்கப் பகுதியாக இருந்த இந்தத் தீவு நூறாண்டுகளுக்குப் பிறகு சீனாவிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. மக்காவ் தீவு மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கின்றனர். இதேபோல் சில ஆண்டுகளுக்கு முன் ஹாங்காங் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. புதிய நூற்றாண்டில் ஆசியாவில் காலனி ஆதிக்கம் இல்லை என்பது மகிழ்ச்சியான விஷயம் தான்!





மோதிரம்
மூர்த்தி, மளிகைக் கடையில் சாமான்கள் வாங்கிவிட்டு~
எவ்வளவு ஆச்சுப்பா?
ஐநூற்றி இருபது ரூபாய்.
என்னது பணத்தைக் காணோம்?
சரிதாம்போ!
சரி.. சாமான்களைத் திருப்பிக் கொடுத்துட்டுப் போங்க சார்..
அப்படின்னா கடைக்காரரின் உழைப்பு வீணாகும்!
கதை : வெ.அ.கார்த்திகேயன்
இந்த மோதிரத்தை வச்சுக்குங்க. நாளைக்கு வந்து பணத்தைக் கொடுத்துட்டு திரும்ப வாங்கிக்கறேன்.
சரி.. பொருளை எடுத்துட்டுப் போங்க.
வீட்டுக்கு வந்த மூர்த்தி~
அடடா, இங்கேயே பணத்தை வச்சிட்டுப் போயிருக்கேன்!
படம்:


மறுநாள் கடையில்…
இந்தாங்க பணம். மோதிரத்தை எடுங்க.
மோதிரமா? எப்ப கொடுத்தீங்க!
நேற்று கொடுத்தேனே!
நம்பிப் பொருளைக் கொடுத்தா— கதை விடறீங்களே!
சரி விடு. அது வெறும் கவரிங் மோதிரம்தான். நீயும் சம்மதிச்சு வாங்கி வச்சுக்கிட்ட. இப்போ நீ ஏமாத்த நினைக்கிறதனால நான் பணத்தையும் தரப்போறதில்லை!
மோதிரமும் கவரிங், பணமும் கிடைக்காது!
ஆங்... இதானே உங்க மோதிரம்... பணத்தைக் கொடுங்க.
இதுதான்.
இந்தா பணம். ஐந்நூற்று இருபது ரூபாய்...ம்...இது தங்க மோதிரம் தான்!

# மேடைகளில் அசத்தப்போகிறாள்



'கொடிது, கொடிது; வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்று சொல்வார்கள். என் குழந்தைப் பருவத்தைப் பற்றி ஒரே வரியில் சொல்வதென்றால் இப்படித்தான் சொல்ல முடியும். மற்ற சராசரி சிறுவர், சிறுமியருக்குக் கிடைத்த சின்னச் சின்னச் சந்தோஷங்கள் கூட எனக்கு எட்டாத் தொலைவில் இருந்தன. அப்படியென்றால் நான் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்திருப்பேன் என்று தானே நினைக்கிறீர்கள்? அது தவறு. நான் பிறக்கும்போது என் தந்தை மிக உயர்ந்த நிலையில் இருந்தார் என்று என் தாய் சொல்லியிருக்கிறார். அவர் சாலைகள் போடும் காண்ட்ராக்டர். ராஜமன்னார்குடி என்றழைக்கப்படும் தஞ்சை மாவட்ட மன்னார்குடியில்தான் நான் பிறந்தேன். (இப்போது நாகப்பட்டினம் மாவட்டம்). எனக்கு இரண்டு மூத்த சகோதரர்கள். என் தாய்க்கும் தந்தைக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், என் தாய், தந்தையை விட்டுப் பிரிந்து செட்டிநாடு என்றழைக்கப்படும் காரைக்குடி பக்கம் உள்ள பள்ளத்தூருக்கு வந்து விட்டார். பத்து மாதக் குழந்தையான என்னையும் கையோடு எடுத்துக் கொண்டு வந்து விட்டார்.

பள்ளத்தூரில் என் தாய்க்கு உறவினர்கள் என்று சொல்ல யாரும் கிடையாது. தெரிந்தவர் ஒருவர் மூலம், வீடுகளில் வீட்டு வேலைகளைச் செய்து வாழ்க்கையை ஓட்டினார். நான் குழந்தையில் மூக்கும் முழியுமாக இருப்பேனாம்! என் அன்னை தாம் வேலை செய்யும் வீடுகளில் முற்றத்தில் உள்ள தூணில் என்னைக் கட்டிப் போட்டு விடுவார்! பெரியவர்கள், சிறியவர்கள் என்று என்னைக் கடந்து போகும் பலரும் மூக்கைப் பிடித்தும், கன்னத்தைக் கிள்ளியும் என்னைச் செல்லமாகக் கொஞ்சி விட்டுச் செல்வார்கள். எனக்கு மூன்று வயது இருக்கும்போது என் அம்மா என்னை 'திருநீலகண்டர்' என்ற திரைப்படத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார். 'உன் அழகைக் காண இரு கண்கள் போதாதே' என்று ஒரு பாட்டு அதில் வரும். அந்தப் பாடலை மழலை மொழியில் நான் பாடிக் காட்டுவேன்.

"அடியே ராமாமிர்தம் (என் அம்மாவின் பெயர்) பாப்பாவுக்கு குரல் மிக நன்றாக இருக்கிறதே. பிற்காலத்தில் மேடைகளில் அசத்தப் போகிறாள்" என்று தெரிந்த பெண்கள் அம்மாவிடம் சொல்வார்களாம்.

நான் மூன்றாம் வகுப்பு படிக்கும் போது பள்ளிக்கூட நாடகங்களில் என்.எஸ். கிருஷ்ணன் போல நடிப்பேன். 'சாவித்ரி' படத்தில் எம்.எஸ். அவர்கள் செய்த நாரதர் வேடத்தையும் போட்டிருக்கிறேன். 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற பாரதியின் பாட்டை எந்த ராகத்தில் பாட வேண்டுமென்று அப்போது எனக்குத் தெரியாது. அதனால் அந்தச் சமயம் மிகவும் பிரபலமாக இருந்த 'காற்றினிலே வரும் கீதம்' பாட்டின் மெட்டில் பாருக்குள்ளே நல்ல நாட்டையும் பாடி பரிசு பெற்றிருக்கிறேன்.

மிக முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்து

விட்டேனே! எனக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் கோபி சாந்தா. ஆனால் 'பாப்பா' என்று செல்லமாக அழைக்கப்பட்ட பெயரே மனோரமா என்று மாறும் வரை நிலைத்திருந்தது. என் அம்மா கடைசி வரை பாப்பா என்றுதான் என்னை அழைத்து வந்தார்.


என்னை நான்காம் வகுப்பில் சேர்ப்பதற்காக என் அம்மா வேலை செய்த வீட்டின் எஜமானர் பள்ளிக்கு அழைத்துச் சென்றார். கூடவே அவரது மகளையும் (மீனா என்று பெயர்) சேர்ப்பதற்காக அழைத்து வந்தார். எங்கள் தகுதியை சோதனை செய்வதற்காக பள்ளியில் பரீட்சை வைத்தார்கள். அதில் நான் தேர்ச்சி பெற்று விட்டேன்; ஆனால் மீனா தவறி விட்டாள். அந்த வயதில் எனக்கு நீக்குபோக்கு தெரியாததால், மிகவும் சந்தோஷத்துடன் எல்லோரிடமும், 'புதுப் பள்ளியில் சேரப் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தேன். என் அம்மாவுக்கோ மிகவும் சங்கடமான நிலை.



• அம்மாவுடன் மனோரமா

என்னைப் படிக்க வைக்க வேண்டுமென்று அழைத்துப் போன எஜமானரின் குழந்தை பரீட்சையில் தவறி விட்டதே என்று அவருக்கு வருத்தம். ஆனால் என் சந்தோஷம் நீடிக்கவில்லை. அம்மாவுக்கு உடல்நலம் மிகவும் மோசமாகப் போய் உடனே ராமநாதபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். நானும் அம்மாவை கவனித்துக் கொள்வதற்காக மருத்துவமனையிலேயே தங்கி விட்டேன். நான்கைந்து மாத காலம் அம்மா அங்கு இருக்க வேண்டியதாகி விட்டது. அம்மாவின் துணிகளைக் குளத்திற்கு எடுத்துச் சென்று துவைப்பது, அம்மாவுக்குப் பணிவிடைகள் செய்வது என்று காலம் கழிந்தது. என் படிப்பு தடைபட்டுப் போயிற்று.

உடல்நலம் சரியானதும் மீண்டும் பள்ளத்தூருக்கே வந்தோம். அம்மாவால் நிறைய வீடுகளில் வேலை செய்ய உடல்நலம் இடம்கொடுக்கவில்லை. ஒன்றிரண்டு வீடுகளோடு நிறுத்திக் கொண்டார். என்னையும் ஒரு வீட்டில் வேலையில் சேர்த்து விட்டார். இந்த வீட்டு வேலையில் என்ன வசதி யென்றால் வேலை செய்யும் இடத்தில் நமது உணவுத் தேவையும் பூர்த்தியாகிவிடும்!



நான் வேலை செய்த செட்டியார் வீட்டில் இருபது மணி நேரம் அடுப்பு எரிந்து கொண்டேயிருக்கும். இரு சமையல்காரர்கள். முதலில் அந்த வீட்டுக் குழந்தையைத் தான் என்னைப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்கள். ஆனால் அந்தக் குழந்தை என்னிடம் வராமல் அழுது அடம்பிடித்தது. எனவே நான் பெருக்குவது, பாத்திரங்கள் துலக்குவது போன்ற வேலைகளை எடுத்துக் கொண்டேன்.

அவ்வப்போது என் தாய் வேலை செய்த வீட்டுக்குச் செல்வேன். என்னைப் பார்த்தவுடன் அவர், 'என்ன பாப்பா... ரொம்ப வேலையா.. களைப்பா இருக்கியே... கையெல்லாம்



புண்ணா இருக்கே' என்று என்னை அணைத்துக் கொண்டு புலம்புவார். அதைப் பார்க்கும் என் அம்மாவின் எஜமானி, 'ஏண்டி பாப்பா... நீ அடிக்கடி இங்கு வராதடி... நீ வந்து போனா உன் அம்மாவுக்கு வேலையே ஓடாது. அப்புறம் எனக்குத்தான் பிரச்னை' என்பார். அதைக் கேட்டு என் அம்மா ஆற்றாமையால் துடிப்பார்.

நான் வேலை செய்த வீட்டில் சோலச்சி என்ற சிறுமி ஒருத்தி இருந்தாள். என்னுடன் படித்தவள். பள்ளியில் கணக்கு மற்றும் வேறு பாடங்களை அவளுக்கு நான் சொல்லித் தந்திருக்கிறேன். செட்டிநாட்டில் வீட்டு வேலை செய்யும் சிறுமிகளைக் 'குட்டி' என்றழைப்பார்கள். 'ஏய் குட்டி' என்று அதிகாரக் குரல்கள் கேட்டுக் கொண்டேயிருக்கும். ஆனால் எனக்கேற்பட்ட வேதனை என்னவென்றால் என் பள்ளித் தோழியான சோலச்சியும் அதிகாரத் தொனியுடன் 'குட்டி' என்று கூப்பிட்டதுதான். வேலையை விட்டு விடலாமா என்று கூடத் தோன்றி விட்டது. அதற்கான நேரமும் வந்தது.

என்னைப் பார்ப்பதற்காக நான் வேலை செய்த வீட்டிற்கு என் அம்மா வந்தார். என் முன்னால் ஏகப்பட்ட பாத்திரங்களைப் போட்டு நான் தேய்த்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு பாத்திரமும் என்னை விட உயரமானவை. பார்த்ததும் அம்மாவுக்குப் பொறுக்க முடியவில்லை. 'இனிமே இங்கே வேலை செய்ய வேண்டாம்' என்று கூட்டிக் கொண்டு வந்து விட்டார்.

என் அம்மாவுக்கு மிகவும் நெருங்கிய தோழி ஒரு முஸ்லிம் பெண்மணி. அந்தப் பெண்மணி என் அம்மாவிடம், 'உன் பெண்ணுக்குப் பாட்டு கற்றுக் கொடுக்கலாமே... குரல் நன்றாக இருக்கிறதே... எனக்குத் தெரிந்த பாகவதர் ஒருவர் காரைக்குடியில் இருக்கிறார். அவரிடம் சேர்த்து விடலாமே' என்று சொல்ல அம்மாவும் என்னைக் காரைக்குடியில் உள்ள பாகவதர் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டு விட்டார். அந்தப் பாகவதர் முதல் நாள் என் அம்மாவின் எதிரில், 'சரிகம பதநிச' என்று சொல்லித் தந்ததோடு சரி, அடுத்த நாளிலிருந்து முற்றிலும் வீட்டு வேலைகளுக்கு என்னைப் பயன்படுத்திக் கொண்டார். பள்ளத்தூரிலிருந்து ஒருமுறை பார்க்க வந்தார் அம்மா. நான் அருகிலுள்ள குளத்திலிருந்து பெரிய குடத்தை தலையில் சுமந்து தண்ணீர் கொண்டு வருவதைப் பார்த்து விட்டார். அப்படியே வந்து என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு குடத்தை இறக்கி வைத்தார். 'நீ பாட்டு கற்றுக் கொண்டது போதும்' என்று பள்ளத்தூருக்கே அழைத்து வந்து விட்டார்.

அப்போது எனக்குப் பன்னிரண்டு வயதிருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு தீபாவளி நாள் – நன்றாக ஞாபகம் இருக்கிறது. என்னிடம் இருந்த கொஞ்சம் கிழிந்து போன பாவாடையை அம்மா சவுக்காரம் போட்டு வெளுத்து காயவைத்து மறு நாள் தீபாவளிக்குப் போட்டுக் கொள்ளக் கொடுத்தார். நல்ல குரல்வளம் இருந்தபடியாலும் ஒரு துறுதுறுப்போடு இருந்தபடியாலும், சுற்று வட்டாரத்தில் போடும் நாடகங்களில் நடிக்க அழைப்பு வந்தது. அம்மா முதலில் தயங்கினார். கோட்டையூரில் வைகுந்த ஏகாதசியை முன்னிட்டு நாடகம் ஒன்றைப் போட்டார்கள். நாடகத்தின் பெயர் 'அந்தமான் கைதி' என்று நினைக்கிறேன். ஜிப்ஸி நடனம் வேறு ஆடச் சொன்னார்கள்.

கோட்டையூரில் எலெக்ட்ரிசியன் பால்ராஜ் என்று ஒருவர் இருந்தார். என் குரல் வளத்தைப் பார்த்து புதுக்கோட்டையில் உள்ள நாடக சபாவில் சேர்த்து விட்டார். 'விதியின் விளையாட்டு' என்று ஒரு நாடகம். அதன்பின், 'யார் மகள்?' என்ற நாடகத்தில் கதாநாயகியாகவே நடித்தேன். நாடகம், சினிமா என்று வாழ்க்கை மாறிப் போனது. 'மனோரமா' என்று பெயர் சூட்டியவர் பால்ராஜ்தான். வாழ்க்கையில் கொஞ்சம் பசுமை தெரிந்தது. கிட்டத்தட்ட நாற்பது வருடங்களாக நடித்துக் கொண்டிருக்கிறேன். இளமையில் பட்ட கஷ்டங்களை இன்றளவும் நான் மறக்கவில்லை. ஆனால் முயற்சி செய்தால் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்பதற்கு நான் ஒரு எடுத்துக் காட்டு.

— ப்ரியன்



# யானை

**பொ**துவாக யானைகள் புத்தி சாதுரியமும் கூர்ந்து கேட்கும் சக்தியும் பெற்றவை. மோப்பம் பிடிக்கும் சக்திவாய்ந்தவைகளாகவும் அதே சமயம் திருப்திகரமான கண் பார்வை இல்லாதவைகளாகவும் காணப் படுகின்றன.

யானைகள் எப்படிப்பட்ட உயரமான இடங்களிலும் மேடுகளிலும் ஏறும் திறன் கொண்டவை. நீந்தும் வல்லமை பெற்றவை. ஆண் யானைகளுக்கு நீண்ட, பருமனான தந்தங்கள் உண்டு. பெண் யானைகளுக்கு வாய்க்குள்ளே சிறிய தந்தங்கள் அமைந்திருக்கும்.

தந்தங்களே இல்லாத ஆண் யானைகளும் உண்டு. அவை 'மக்நாஸ்' என்று அழைக்கப்படுகின்றன.

யானைகளின் ஆயுட்காலம் சராசரியாக எழுபது வருடங்கள். பதினெட்டி லிருந்து இருபத்திரெண்டு மாதங்கள் யானைகளின் கர்ப்ப காலம். ஆண் குட்டிகளுக்கும் பெண் குட்டிகளுக்கும் கர்ப்ப காலம் மாறுபடும். சில சமயங்களில் பெண் யானைகள் இரண்டு அல்லது மூன்று குட்டிகளைக் கூட ஈன்றெடுக்கும். ஆனால், பிழைப்பதோ ஒன்றுதான்.

பர்மாவிலுள்ள 'மையன்மார்' என்ற இடத்திலும் தாய்லாந்திலும் வெள்ளை யானைகள் காணப்படுகின்றன. அவை அங்குள்ள மக்களால் கடவுளாகப் பாவிக்கப்பட்டு வணங்கப்படுகின்றன.

**— எஸ். ராஜகோபால்,**
**திருச்சி - 16.**



# அதிர்ஷ்ட

**வீ**ரமுத்து அதி சாமர்த்தியசாலி. அதனால் அரசாங்கத்தில் மளமளவென்று முன்னேறி தலைமைப் பொறுப்புக்கு வந்து விட்டான். அது அவனோடு வேலைக்குச் சேர்ந்த தாண்டவராயனுக்குப் பொறாமையைத் தந்தது.

தன் பெற்றோரிடம் சொல்லிப் புலம்புவான். தாண்டவராயனின் தாய் மிகவும் பொல்லாதவள். வீரமுத்துவை ஒழித்துக் கட்டி விடுவதாகத் தீர்மானித்தாள்.



ருசியுள்ள தின்பண்டங்களை நெய்யில் தயாரித்தாள். வீரமுத்துவை விருந்துக்கு அழைத்து வரும்படி மக னிடம் கூறினாள். விருந் துக்கு வந்தான் வீரமுத்து. சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தபின் சாப்பிட அமர்ந்தனர்.

அந்தச் சமயம் அரண்மனையிலிருந்து ஒரு காவலன் வந்து, "அவசர விஷயமாய் அரசர் கையோடு அழைத்து வரச் சொன் னார். தங்கள் வீடு சென்றேன். தாங்கள்

# ராஜா!

இங்கு வந்திருப்பதாகக் கூறினார்கள்" என்றான்.

"அடாடா, இப்போதே தாமதமாகி விட்டதே" என்று வேகமாய் எழுந்த வீரமுத்து, "தாண்டவா! கவலைப் படாதே! அரசர் ஆணை. உடனே போகாவிடில் உத்யோகம் போய்விடும். அம்மா! வாசனை மூக்கைத் துளைக்கும் இப் பலகாரங்களை நான் இழக்க விரும்பவில்லை! கட்டிக் கொடுத்து விடுங்கள். இரவு ஒரு கை பார்க்கிறேன்" என்றான். இதைக் கேட்டதும், 'திட்டம் பாழானதே' என்று அதுவரை முகம் சுருங்கிய தாண்டவனும் அவன் தாயும் இப்போது சந்தோஷமாகப் பட் சணங்களைக் கட்டிக் கொடுத்து வழி அனுப்பினர்.

**வீ**ரமுத்துவுக்கு ஒரு அக்காள் மகன். அவன் கொஞ்சம் அசடு; கோழை. அவன் பெயர் கோவிந் தன். யார் சொன்னாலும் நம்பி விடு வான். அவனைப் புத்திசாலியாக்க படாதபாடுபட்டு வந்தான் வீரமுத்து. அவன் தமக்கை அருகிலுள்ள கிரா மத்தில் வசித்து வந்தாள்.

வேகமாகச் செல்லும் வீரமுத்துவின் எதிரே வந்தான் கோவிந்தன்.

"மாமா! அம்மாவுக்கு உடம்பு சரியில் லையாம். பார்க்கணும் போல இருக்கு. போகட்டுமா? கையிலென்ன பட்சணமா? வழிக்குக் கொண்டு போகட்டுமா?" என்று கேட்டான்.

"இந்தா" என்று அவனிடம் பலகாரப் பொட்டலத்தைக் கொடுத்த வீரமுத்து, "ஜாக்கிரதையாகப் போய் விட்டு வா. மசமசன்னு நிற்காதே" என்றான்.

கோவிந்தன் உற்சாகமாக வழி நடந்தான். வெய்யில் உக்கிரமாகத் தாக் கவே ஒரு பெரிய ஆலமரத்தடியில் படுத் தான். படுத்தவுடன் தூங்கியும் விட் டான்.

**கொ**ள்ளையர் கூட்டமொன்று அருகிலுள்ள மலைக்குகையில் வசித்தது. உணவு தானியங்கள் வாங்க ஒருவன் பிச் சைக்காரன் வேடத்தில் வெளியே வந் தான். கோவிந்தன் பக்கத்திலிருந்த பலகார மூட்டையின் வாசனை அவன்

**மாலதி**

மூக்கைத் துளைத்தது.

எடுத்துக்கொண்டு குகைக்குத் திரும்பினான். எல்லாக் கள்வர்களும் ஆசையாய் உண்டார்கள். உண்ட வேகத்தில் மயக்கம் வந்தது.

தண்ணீரில் மூழ்கினால் மயக்கம் தீருமென்று அருகிலுள்ள சுனைக்கு நடந்தார்கள். சுனையை எட்டு முன் அனைவரும் மாண்டனர்.

தூங்கி எழுந்த கோவிந்தன் பட்சண மூட்டையைக் காணாது திகைத்தான். சரி, தண்ணீராவது குடிக்கலாம் என்று நீர் நிலையைத் தேடியவன், சுனைக்கு அருகில் இறந்து கிடப்பவர்களைக் கண்டு நடந்ததை ஊகித்து அறிந்து கொண்டு திரும்பினான்.

திருடர்களைக் காப்பாற்ற முடியுமா என்று முயற்சி செய்து பார்த்தான். பிறகு ஊரை நோக்கி நடந்தான். ஊர் எல்லையில் ஒரு பெரிய பலகையில் கொள்ளையர்களின் படத்தை ஒட்டி, 'இவர்களை உயிருடனோ, பிணமாகவோ கொண்டு வருபவர்களுக்குப் பாதி ராஜ்ஜியத்தைக் கொடுத்து அரச குமாரியையும் திருமணம் செய்து கொடுக்கப்படும்' என்ற வாசகமும் கீழே கொடுக்கப்பட்டிருந்தது.

கோவிந்தன் பெரிய தடிமனான கயிறு ஒன்று வாங்கினான். காட்டுக்கு ஓடிச் சென்று இறந்து கிடந்த கொள்ளையர்களை இணைத்துக் கட்டினான். வண்டியில் போட்டுக் கொண்டு வந்தான்.

ஊருக்குள் நுழைந்ததும் மக்கள் அவனைப் பின்தொடர்ந்தனர். ஊரெங்கும் இதே பேச்சு.

"இவர்கள் எப்படி இறந்தார்கள்? நீ யார்? உன் பெயரென்ன?" யார் கேட்ட கேள்விக்கும் கோவிந்தன் பதிலே சொல்லவில்லை.

அரசரே செய்தியறிந்து வெளியே வந்து பார்த்து ஆச்சரியப்பட்டு இதே வினாக்களைத் தொடுத்தார்.

"அரசே! என் அன்னை இருப்பது மகிழாபுரி. அங்கு புறப்பட்டவன் உங்கள் ஊரிலுள்ள விளம்பரப் பலகையைப் பார்த்தேன். திரும்பி காட்டுக்குள் சென்றேன். கொள்ளையர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானேன். இன்று உணவில் விஷம் கலந்து கொடுத்து விட்டேன். வேண்டுமானால் இவர்களைச் சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்" என்றான் கோவிந்தன்.

அரண்மனை வைத்தியர் பரிசோதித்து விட்டு கொள்ளையர் வயிற்றில் நஞ்சு கலந்த பலகாரங்கள் ஜீரணமாகாமல் இருப்பதைத் தெரிவித்தார்.

அரசர் சொன்னபடி பாதி ராஜ்ஜியத்தைக் கொடுத்தார். ஆனால் மகளைத் திருமணம் செய்து கொடுக்குமுன் ஒரு சோதனைக்கு ஆட்பட வேண்டும் என்றார்.

இப்போது பின்வாங்கினால் அவமானம் என்று, "சோதனையைச் சொல்லுங்கள்" என்றான் கோவிந்தன்.

"இந்த ஊர் எல்லையில் பெரிய ஏரி இருக்கிறது. அதிலுள்ள நீரும் ஸ்படிகம் போல இருக்கும். அந்த ஏரியில் உள்ள பெரிய முதலையின் அட்டகாசத்தால் நீரை மக்கள் உபயோகிக்க முடியவில்லை. அந்த முதலையை எங்கள் கண்ணெதிரே கொன்றால் உன்னை வீரனென்று ஏற்றுக் கொண்டு என் மகளை உனக்கு மணமுடித்து வைப்பேன்" என்றார் அரசர்.

"நான் கேட்



காமலே அரசாளும் பாக்கியத்தைத் தந்த இறைவன் இதையும் நிறைவேற்றித் தருவார். அப்படியே முதலைக்குப் பலி யானாலும், விஷமுள்ள பட்சணத்திற்கு செத்திருக்க வேண்டியவன்தானே" என்று சமாதானம் சொல்லிக் கொண்டான். கூரிய குத்தீட்டிகளையும் கத்திகளையும் கொடிய நஞ்சைப் பூசி கீழ்நோக்கி இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டான்.

ஏரிக்கரையில் ஒரு பெரிய நாவல் மரம் இருந்தது. அதன் மேலேறி ஏரியில் குதித்து விடத் தீர்மானித்தான். "முதலை தன்னைத் தாக்கும் சமயம் விஷம் தோய்ந்த குத்தீட்டிகளால் காயம் படும். அந்தக் காயத்தில் படும் நஞ்சு அதன் உடலில் பரவி அதைக் கொன்று விடும். சாகுமுன் நம்மால் முடிந்த நன்மையை இந்த ஊருக்குச் செய்யலாம்" என்று முடிவு செய்தான்.

மன்னனும் அமைச்சர்களும் தளபதியும் மக்களும் வெகு தூரத்தில் நின்றிருந்தனர். 'முதலை திசை மாறி தங்களைத் தாக்க வந்தால் என்ன செய்வது' என்று எல்லோரும் பயந்தனர்.

முதலை வாலை வீசியபடி நீந்திக் கரையேறியது.



மரத்தில் ஏறிய கோவிந்தனின் உடல் பயத்தில் நடுங்கியது. அந்த நடுக்கத்தில் சரியாகக் கட்டப்படாதிருந்த குத்தீட்டி நெகிழ்ந்து கரையேறிய முதலையின் திறந்த வாய்க்குள் விழுந்தது. முதலை அப்போதே உயிரை விட்டது.

தொலைவில் இருந்தவர்கள் கோவிந்தன் குறிபார்த்து குத்தீட்டியை வீசி முதலையைக் கொன்றதாக எண்ணி கரகோஷம் செய்தனர். ஓடி வந்து கோவிந்தனைக் கட்டிக் கொண்டு கூத்தாடினர்.

'முதலையின் மறலி' என்று விருது வழங்கி கௌரவித்த அரசன் தன் மகளை விமரிசையாகத் திருமணம் செய்து கொடுத்தார்.

அடுத்த நாட்டு மன்னன் பெயர் அப்பய்யன். அவன் திடீரென்று படையெடுத்து வந்து விட்டான்.

"மருமகனே! நீங்கள்தான் படைக்குத் தலைமைதாங்கி அப்பய்ய ராஜாவை வென்று வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் அரசர்.

நஞ்சுக்கும் முதலைக்கும் காப்பாற்றிய இறைவன் இப்போதும் கைகொடுப்பார் என்று நம்பிய கோவிந்தன், "வேகமாகச் செல்லக்கூடிய ஒரு குதிரையில் என்னை அசைய முடியாதபடி கயிறு கொண்டு கட்டி அனுப்புங்கள்" என்றான். வெற்றித் திலகமிட்டு வழி அனுப்பினாள் இளவரசி.

அரண்மனையில் யாருக்கும் அடங்காத ஒரு அரேபியக் குதிரை இருந்தது. அதில் கோவிந்தனை உட்கார வைத்துக் கட்டி, குதிரையின் வாலை முறுக்கி விட்டனர்.

'மாப்பிள்ளை எது செய்தாலும் அதில் ஒரு காரணம் இருக்கும்' என்று நம்பினார் அரசர்.

குதிரை பிய்த்துக் கொண்டு ஓடியது. படை வீரர்கள் பின்தொடர்ந்தனர்.



# முயன்று பார்!

அடியில் முட்கள் இருந்தாலும்
அடித்துக் குத்திக் கிழித்தாலும்
செடியில் பூத்து அழகாகச்
சிரிக்கும் ரோஜா மலரைப்பார்!

இடையில் கற்கள் கிடந்தாலும்
எதிர்த்து முட்டித் தடுத்தாலும்
தடைகள் தாண்டி நடைபோட்டுத்
தாவிச் செல்லும் நதியைப்பார்!

வெடிகள் வைத்துப் பிளந்தாலும்
வெட்டிக் கொத்திச் சிதைத்தாலும்
நெடிதாய் உறுதி குலையாமல்
நிமிர்ந்து நிற்கும் மலையைப்பார்!

படிகள் தட்டி விழுந்தாலும்
பலர்கை கொட்டி நகைத்தாலும்
முடியும் என்று திடமாக
முயன்று வெற்றி அடையப்பார்!

— தளவை இளங்குமரன்

எதிரில் கூடாரம் அடித்துத் தங்கி இருக்கும் பகைவர்களின் பாசறை தெரிந்தது. தாயையும் மாமன் வீரமுத்துவையும் பார்க்காமல் சாகப் போகிறோமே என்று மனம் வேதனைப்பட்டது.

வழியில் கரை புரண்டோடும் காட்டாறு. குதிரை அதில் இறங்கி நடந்தது. நீரில் நனைந்த கயிறு வயிற்றை இறுக்கியதால் கோவிந்தன் உடல் வலியால் துடித்தான்.

இரண்டு பனைமரங்களுக்கிடையே குதிரை ஓடியது. மரங்களை இறுகப் பற்றிக் கொண்டால் குதிரை நின்று விடும் என்று நினைத்தான் கோவிந்தன்.

ஆற்று நீரிலும் மழையிலும் நைந்திருந்த மரவேர்கள் இற்றிருந்ததால் மரங்கள் கோவிந்தன் கையோடு வந்து விட்டன. கையை விட்டால் மரங்கள் அவன் மீதோ, குதிரை மீதோ சாய்ந்து அதோகதிதான்!

வலியும், பாரமும் தாங்காமல் 'அப்பா, அய்யா' என்று கத்திக் கொண்டு வந்தான் கோவிந்தன். வாய் குழற, "அப்பய்யா, அப்பய்யா' என்று வார்த்தை வந்து விட்டது.

பாசறைக்கு வெளியே வந்து பார்த்த அப்பய்யராஜா கோவிந்தன் பனை மரங்களைப் பிடுங்கிக் கொண்டு சண்டைக்கு வருவதாக நினைத்து வெள்ளைக் கொடி காட்டி சரணடைந்தான்.

அரேபியக் குதிரையும் களைத்து வாயில் நுரை தள்ள நின்று விட்டது. நெருங்கி வந்த படை வீரர்கள்,

"அடங்காத குதிரையும் அடங்கி விட்டது! அப்பய்ய ராஜாவும் அடி பணிந்தான்! ஆக்ரோஷ முதலையும் மாண்டு போனது! அற்புதமாம் கோவிந்தரின் அணுகுமுறை!" என்று கொண்டாடினர்.

கயிற்றை அவிழ்க்கச் சொன்னான் கோவிந்த ராஜா. மகிழாபுரி சென்று நடந்ததை அன்னையிடம் சொல்லி அழைத்து வந்தான்.


மாமன் வீரமுத்துவிடம் அரசருக்குரிய பயிற்சிகளைக் கற்று அதிர்ஷ்ட ராஜாவாக மட்டுமில்லாமல் ஆற்றல்மிக்க அரசனாகவும் ஆட்சிபுரிந்தான்.

# பொழுது போகாத ராஜா!


கதை : ஜெ. சரண்யா, ஏழாம் வகுப்பு, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.
படம் : மகேஸ்




அரசருக்குப் பாடம் புகட்ட வேண்டும்.
என்ன யோசனை?
சரி ஒரு கதை சொல்கிறேன்.
கதையா! ம்... சீக்கிரம் சொல்லுங்கள்.
ஆயிரக்கணக்கான குருவிகள் உணவு தேடி அலைந்து ஒரு தானியக் கிடங்கைக் கண்டுபிடித்தன.
மேலே சொல்லுங்கள்.
ஆனால் அதற்குள் செல்ல சிறு துவாரம் மட்டுமே இருந்தது.
குருவிகள் உள்ளே செல்லவில்லையா?
ஒவ்வொரு குருவியாகச் செல்ல முடிவெடுத்தன. முதல் குருவி சென்று சாப்பிட்டு வெளியே வந்தது.


இரண்டாவது குருவி நுழைந்து சாப்பிட்டு வெளியே வந்தது.
நேரம் சென்றது...
முப்பதாவது குருவி...
அமைச்சரே எல்லாக் குருவி களும் சாப்பிட்டு வெளியே வந்தன. அப்புறம்?
இருங்கள் நூறாவது குருவி...
போதும்! சொன்னதையே சொல்ல வேண்டாம்.
உங்களுக்கோ பொழுதுபோகலை. நான் என்ன சொன்னாலும் கேட்க வேண்டியதுதானே?
இந்தக் கதையைக் கேட்பதற்கு நான் நாட்டுப் பணியைச் செய்யலாம்.
மன்னா, நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். நாட்டில் பிரச்னைகள் ஏராளம் இருக்கத் தாங்கள்...
நன்றி அமைச்சரே! தாங்களும் வேலையைக் கவனிக் கலாம். நானும் கிளம்பறேன்.

## புதிர் உலகம்



1. ஒரு குளக்கரையில் மூன்று பிள்ளையார் சிலைகள் இருந்தன. அக் குளத்தில் மாலைகளை மூழ்கி எடுத்தால் மாலைகள் இரு மடங்காகி விடும். அதாவது 2 மாலைகளை குளத்தில் மூழ்கி எடுத்தால் 4 ஆகி விடும். ஒருவர் சில மாலைகளைக் கொண்டுவந்து மூன்று முறை மூழ்கி மூன்று பிள்ளையாருக்கும் சம அளவில் போட்டுவிட்டு, மீதி மாலை இல்லாமல் வீட்டுக்குச் சென்று விட்டார்.

# பறித்த மாம்பழங்கள் எத்தனை?

எவ்வாறு?

– பெ. இராமசாமி,
பதினோராம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
செந்துறை.

11. ராபினும், வியோவும் மாம்பழங்கள் பறிக்கச் சென்றார்கள். வியோவிற்கு மரமேறத் தெரியாது. ஆகையால் ராபின் தான் மரமேறிப் பறிப்பதால் பறிக்கும் பழங்களில் இரண்டு பங்கு கொடுக்க வேண்டும் என்றான். வியோவும் அதற்கிசைந்தான்.

உடனே ராபின் மரமேறிப் பழங்களைப் பறித்தான். பறித்த பழங்களோடு இருவரும் வீடு திரும்பினர். வீட்டிற்கு வந்ததும் முன்பு திட்டமிட்டபடி பங்கிட்டுக் கொண்டனர். வியோ, "ராபின்! நீ இரண்டு பங்கு எடுத்துக் கொண்டதால் எனக்கு ஒரு பழம் கொடு" என்று கேட்டான். ராபினும் ஒரு பழத்தைக் கொடுத்தான். இப்பொழுது பார்த்தபொழுது இருவரிடமும் சம அளவு மாம்பழங்கள் இருந்தன என்றால் ராபின் பறித்த மாம்பழங்கள் எத்தனை?

– கே. விஜயலட்சுமி,
திருச்சிற்றம்பலம்,
மயிலாடுதுறை.

111. ***37037*** இந்த எண்ணின் சிறப்பு என்ன தெரியுமா? இந்த எண்ணை 3ன் மடங்குகளில் பெருக்கினால் வரும் விடையைக் கவனியுங்கள்.

37037 x 3 = 111111
37037 x 6 = 222222
37037 x 9 = 333333
37037 x 12 = 444444
37037 x 15 = 555555
37037 x 18 = 666666
37037 x 21 = 777777
37037 x 24 = 888888
37037 x 27 = 999999

— ஹாஜா பக்ருதீன் பாத்திமா,
காரைக்கால்.

1V. **ஒ**ரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். அதை இரண்டால் பெருக்கவும். அத்துடன் 5ஐ கூட்டவும். 50 ஆல் பெருக்கி 365ஐ கூட்டவும். அந்தக் கூட்டுத் தொகையுடன் உங்கள் வயதையும் கூட்டி, வரும் தொகையில் இருந்து 615ஐ கழிக்கவும். இந்த விடையிலிருந்து உங்கள் வயதையும் நீங்கள் நினைத்த எண்ணையும் என்னால் சொல்ல முடியும். எப்படி?

சு. கண்மணி,
மிட்டூர்

V. **அ**ந்தோணி தாஸ் என்பவருக்கு 20 ஏக்கர் அளவில் மிகப் பெரிய கொய்யாத் தோப்பு இருந்தது. அதைச் சுற்றிலும் 12 வாயில்கள் அடங்கிய சுவர் எழுப்பப்பட்டு இருந்தது. 12 வாயில்களுக்கும் 12 காவலர்கள் இருந்தனர். ஜான் பாலுக்கு அகோரப் பசி. ஏனெனில் அவன் இரண்டு நாட்களாகச் சாப்பிடவில்லை. அவன் அந்தத் தோட்டத்தைப் பார்த்துவிட்டு முதல் காவலனை அணுகினான். தன்னுடைய பசியைப் பற்றி எடுத்துக் கூறி உதவுமாறு வேண்டினான். காவலனோ முதலில் மறுத்தாலும் அவன் நிலை கண்டு மனமிரங்கினான். ஆனால் அதற்கு இரு நிபந்தனைகளை விதித்தான். அதாவது அவன் உள்ளே சென்று எவ்வளவு பழங்கள் வேண்டுமானாலும் எடுத்து வரலாம். ஆனால் வெளியே வரும் போது, அதில் பாதியை முதல் காவலனாகிய அவனுக்குத் தர வேண்டும். அவன் அதிலிருந்து ஜான்பாலுக்கு ஒரு பழம் தருவான். இது முதல் நிபந்தனை. இரண்டாவது நிபந்தனைபடி மீதி உள்ள பழத்தை இரண்டாவது காவலனிடம் கொண்டு செல்ல வேண்டும் அவனும் அதில் பாதியை வாங்கிக் கொண்டு அதிலிருந்து ஒரு பழம் தருவான். இவ்வாறு 12 காவலர்களையும் சந்தித்து விட்டு வெளியேறினான். அப்போது அவன் எடுத்து வந்த அதே எண்ணிக்கையுள்ள பழங்கள் அவனிடம் இருந்தன. அப்படியென்றால் அவன் எத்தனை பழங்கள் எடுத்து வந்திருப்பான்?

– ஏ. ஆனந்த் எபிரேம் நாத்,
பதினோராம் வகுப்பு, கடலூர் – 1.



**விடை:**


1. அவர் கொண்டு வந்த மாலைகள் 7. முதலில் குளத்தில் மாலைகளை மூழ்கி எடுத்தால் 14 ஆகி விடும். அதில் 8 மாலைகளை முதல் பிள்ளையாருக்குப் போட்டார். மீதி 6 மாலைகள் அதனை மீண்டும் மூழ்கி எடுத்தால் 12 மாலைகள். அதில் 8 மாலைகளனை மற்றொரு பிள்ளையாருக்குப் போட்டார். மீதி 4. அதனை மூழ்கி எடுத்தால் 8. இதனை மூன்றாவது பிள்ளையாருக்குப் போட்டு விட்டார். பின் மீதி மாலை இல்லாமல் வீடு திரும்பினார்.

11. ராபின் பறித்த மாம்பழங்கள் 6.

1V. விடையில் முதலில் இருப்பது நீங்கள் நினைத்த எண். அடுத்து இருப்பது உங்கள் வயது, சரிதானே!

V. இரண்டு கொய்யாப் பழங்கள்






# பின்னைத்துப் பூச்சிகளுக்குப் பூங்கா!

அரக்கு, 'லாக்கிபர் லாக்கா' என்ற ஒருவகைப் பூச்சியின் உடலிலிருந்து கசியும் திரவமே. இத்திரவம் உலர்ந்தால் அரக்கு ஆகிறது. இப்பூச்சி மூட்டைப் பூச்சிகளின் வகையைச் சார்ந்தது. மரங்களின் சாற்றை உறிஞ்சி வாழ்கின்றன. தமது பாதுகாப்பிற்காக உடலிலிருந்து ஒட்டும் தன்மையுள்ள திரவத்தை வெளியிட்டு தம்மைச் சுற்றிலும் கூடுபோல கட்டிக் கொள்கின்றன. இதுவே அரக்கு. பெரும் பகுதியான அரக்கு, பெண் பூச்சிகளின் உடல்களில் இருந்தே கிடைக்கிறது.

ஆதாரம்: **பொது அறிவுக்கு 1008 கேள்வி பதில்கள்.**
**– ஏ.எல். சாதிக், காரைக்கால்.**



சிம்பென்சி குரங்கு மரக்குச்சியால் எறும்புப் புற்றில் குத்தி அதை வெளியே எடுக்கும். குச்சியில் ஒட்டிக் கொண்டிருக்கும் எறும்புகளை நாக்கினால் நக்கிச் சாப்பிடும்.




**அதிசய உண்மைகள்**
**– பி. ராஜசேகர்**

நமது நாக்கின் நீளம் 10 செ.மீ.தான். எடையும் சுமார் 55 கிராம் மட்டுமே. உப்பை உணரும் சுவை மொட்டுகள் நாக்கு நுனியில் உள்ளன. உள் நாக்கில் கசப்பை உணரும் தன்மை உள்ளது. நடு நாக்கு இனிப்பையும் நாக்கின் இரு ஓரங்களும் காரத்தையும் உணரும் தன்மை பெற்றுள்ளன.

ஆதாரம்: **தெரிந்த செய்திகள் தெரியாத விபரங்கள்.**
**– நாகூர் ஆர். லோகநாதன்**





# பிருந்தாவனம்

**போ**லந்து நாட்டில் நவம்பர் முதல் தேதியை இறந்தவர்கள் தினமாகக் கொண்டாடுகிறார்கள். அந்த நாளில் இறந்தவர்களின் கல்லறைகளைச் சுத்தம் செய்வதற்காகவே அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் கூட விடுமுறை எடுத்துக் கொண்டு பல நூறு மைல் தூரத்தில் இருந்தும் கல்லறைகளுக்கு வந்து விடுகிறார்கள். போலந்தில் வாகன விபத்தால் மக்கள் அதிக எண்ணிக்கையில் இறப்பதும் இந்த நேரங்களில்தானாம்!

க. பூங்கொடி,
சித்தோடு.






**ல**ண்டனில் உள்ள ஃபாயில் என்பவரது புத்தகக் கடை உலகப் புகழ் பெற்றது. புத்தக அலமாரிகள் மட்டும் 40 மைல் நீளத்திற்கு இருக்கின்றன. 600 பேர் இதில் பணி புரிகின்றனர். உலகின் பல மூலைகளில் இருந்து வரும் ஆர்டர்களுக்கு உடனடியாக புத்தகங்களை அனுப்பி வைக்கிறார் ஃபாயில். இந்தக் கடையின் முக்கிய வாடிக்கையாளர்களில் ஒருவராக இருந்தவர் வால்ட் டிஸ்னி!

– ஆர். ஆர். பூபதி

**வ**ண்ணத்துப் பூச்சிகளுக்குக்கென்றே ஒரு பூங்கா உள்ளது. இப்பூங்கா சிக்கிம் மாநிலத்தின் தலைநகர் காங்டாக்கில் உள்ளது. அங்கு சென்றால் பூக்களோடு வண்ணத்துப் பூச்சிகளைக் காணலாம்.

– பாளை பசும்பொன்

**இ**ந்தியாவின் நுழைவு வாயில் இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் வருகையை கவுரவிக்கும் நினைவாக டெல்லியில்



1911ல் கட்டப்பட்டது. இது இப்போது பெரிய சுற்றுலாத் தளமாக விளங்குகிறது.

**க. பூங்கொடி,**
**சித்தோடு**

**ப**ர்மாவில் மண்டாலே என்ற இடத்தில் உள்ள மின்கன் என்னும் மணிதான் உலகிலேயே பெரிய மணியாகும். 200 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்டது இந்த மணி. 12½ அடி உயரமும் 16¼அடி சுற்றளவும் கொண்ட இந்த மணியின் எடை 90.52 டன்.

ஆதாரம்: **பொது அறிவுப் பெட்டகம்**
**– டி.எஸ். பாலு**

**1816**-ம் ஆண்டு லென்னெக், ஸ்டெதாஸ்கோப் கருவிக்கான அடிப்படை ஒன்றைக் கண்டுபிடித்தார். பின்னர் அதனைப் பல விதத்திலும் சீர்திருத்தி மிகவும் ஆற்றல் கொண்டதாக அமைத்தார். ஸ்டெத் இன்று மருத்துவ பரிசோதனைத் துறையில் இன்றியமையாத ஒன்று என்று ஆகி விட்டது. இதயத் துடிப்பை மிகவும் துல்லியமாக அறிந்து, நோயின் நிலையை மிகவும் சரியாக இதன் மூலம் யூகிக்கலாம்.

**– எஸ். மோகன்ராஜ்,**
**சீர்காழி**

**வி**ண்வெளி வரலாற்றில் அதிக வீரர்களைப் பலி வாங்கிய பயணம் எது தெரியுமா?

மைக்கேல் ஸ்மித், பிரான்சிஸ் ஸ்கார்பி, ரோனால்டு மக் நாயர், எல்லிசன் ஒனிஸுகா, கிறிஸ்டா மக் ஆலிஃப், ஜூடித் ரஸ்னிக், கிரிகொரி ஜார்விஸ் ஆகிய எழுவருடன் 28.1.1986 அன்று விண்ணிற் கிளம்பிய 'சாலஞ்சர்' நடுவானில் வெடித்துச் சிதறிய உக்கிர நிகழ்ச்சிதான்!


ஆதாரம்: **விண்ணியல்,**
**– எம்.எஸ். உம்மு அம்மாரா,**
**பன்னிரண்டாம் வகுப்பு,**
**இமாம் கஸ்ஸாலி பள்ளி,**
**லால்பேட்டை.**

**மி**க அதிகமான பொருட்களை கண்டுபிடித்து பேடண்ட் ரிஜிஸ்தர் செய்தவர் தாமஸ் ஆல்வா எடிசன். 1069 பொருட்களை ரிஜிஸ்தர் செய்துள்ளார்.

ஆதாரம்: **தெரிந்த செய்திகள்**
**தெரியாத விபரங்கள்**
**– நாகூர். ஆர். லோகநாதன்**

**வெ**ப்பம் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் 'கானல் நீர்' காணப்படும். பொதுவாக பாலைவனங்களில் வெப்பம் அதிகமாக இருக்கும். அங்கு தூரத்திலிருந்து பார்க்கும் போது குளங்களில் தண்ணீர் நிறைந்து இருப்பது போன்று தெரியும். அருகில் சென்று பார்த்தால் ஒன்றுமே இருக்காது. இதுதான் 'கானல் நீர்' என்பர். மதிய நேரத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும்போது தார் சாலைகளில் தூரத்திலிருந்து பார்த்தால் கூட கானல் நீர் தெரியும். கோடை காலங்களில் நன்றாகத் தெரியும்.

***– அன்னை பாக்யா***





# குறுக்கெழுத்துப் புதிர்

## இடமிருந்து வலம்

1. நிலநடுக் கோட்டுக்கு வடக்கில் அல்லது தெற்கில் தூரத்தைக் கணக்கிடும் முறையில் பூமியைச் சுற்றி கிழக்கிலிருந்து மேற்கில் செல்வதாக அமைத்துக் கொண்ட கோடு (5)

10. தோழனுக்குப் பெண்பால் (2)

11. கிரிக்குப் பாம்பு ________ (2)

13. பாடல்களில் உள்ள சீர்களில் இரண்டாவது எழுத்து அதே இனமான எழுத்தாகவோ அல்லது அதே எழுத்தாகவோ இருப்பதற்குப் பெயர் (3)

## வலமிருந்து இடம்

3. மல்யுத்தம், சிலம்பம் போன்ற வீர விளையாட்டுகள் நடக்கும் இடம் அல்லது மேடை (3)

5. பொதுவாகத் தாவரங்கள் இதிலிருந்தே உருவாகின்றன (2)

6. வஞ்சகத் திட்டம் (2)

7. நோயை உண்டாக்கும் கண்ணுக்குப் புலப்படாத மிகச் சிறிய உயிரினம் (3)

9. நம் வீடுகளில் சுவற்றில் வாழும் ஊர்வன வகைப் பிராணி (3)

15. பாத்திகளில் தேக்கப்பட்ட கடல் நீர் ஆவியாகி உப்புப் படிவதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்ட இடம் (5)

## மேலிருந்து கீழ்

1. இறுமாப்பு, அகங்காரம் என்பதன் இன்னொரு பெயர் (4)

2. நூறு என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

3. கோவலனின் மனைவி (4)

10. வீடுகளில் காய், கனி, பூக்களை விளைவிக்கும் இடம் (4)

12. ஆபரணங்களுக்கு மற்றொரு பெயர் (2)

## கீழிருந்து மேல்

4. தந்திரமான விலங்கு (2)

6. நடனங்களின் போது காலில் கட்டும் ஆபரணம் (4)

8. நெல்லின் மேலுள்ள இதை நீக்கினால் அரிசி கிடைக்கும் (2)

9. ________ போனால் சொல் போச்சு (2)

13. திரும்பி வரும் ஒலி (4)

14. யானைக்கு இது அதிகம் (3)

15. தானியங்களைக் கல் உரலில் போட்டு ________ யால் குத்துவார்கள் (4)

– மு. முஹம்மது நஸ்ருல்லாஹ்,
ஒன்பதாம் வகுப்பு,
இமாம் கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை.

விடை 64 ஆம் பக்கம்

# ஃபவுண்டன் பேனா!

இங்கிலாந்து நாட்டில் 1898 ஆம் ஆண்டு பிறந்து வளர்ந்த செல்வந்தர் ஒருவர் வீட்டில் வேலைக்காரச் சிறுவனாகப் பணிபுரிந்தவர் ராபர்ட் கெட்டில்பார்க்.

நாம் இப்போது ஃபவுண்டன் பேனா என்று அழைக்கும் ஊற்றுப் பேனா அக் காலத்தில் ஓர் அதிசயப் பொருளாக இருந்தது. விலையுயர்ந்த ஒரு வகை மரத்துண்டை எடுத்து கைகளினால் இழைத்து, குடைந்து ஃபவுண்டன் பேனா செய்வார்கள். மிகவும் நுணுக்கமான சித்திர வேலைப்பாடுகளுடன், முழுக்க முழுக்க கைவினைப் பொருளாக இருந்ததால் சாமானிய மக்கள் வாங்க முடியாத அளவுக்கு அதிக விலைமதிப்புக் கொண்டதாக இருந்தது.



பணக்கார வீடுகளில் மட்டுமே மேஜையின் மேல் அலங்காரப் பொருளாக அந்தப் பேனா இருக்கும். தான் பணிபுரியும் எஜமான் வீட்டு மேசையின் மேல் இருந்த அலங்கார ஊற்றுப் பேனாவை எடுத்து 'கெட்டில் பர்க்' ஒரு நாள் ஆசையுடன் எழுதிக் கொண்டிருந்தார்.

அதைப் பார்த்து விட்ட எஜமானர், செய்யத் தகாத தவறு செய்து விட்டதாகக் குற்றம் சுமத்தி வேலையினின்றும் விலக்கி விட்டார்.

கெட்டில்பார்க் தான் வேலையை விட்டு நீக்கியதை கௌரவப் பிரச்னையாகக் கொண்டு தன் சொந்த முயற்சியினாலேயே ஊற்றுப் பேனாவை தயாரித்து ஆசை தீர எழுதிப் பார்த்துக் கொண்டார்.

தன்னைப் போன்ற சாமானிய மக்களும் எளிதாக வாங்கும் அளவுக்கு தொழில்ரீதியாக பெருமளவிற்கு ஃபவுண்டன் பேனாக்களைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆவல் கெட்டில்பார்க்கிற்கு ஏற்பட்டது.



சிறுகடைசல் எந்திரம் ஒன்றைத் தயார் செய்து கொண்டு சாதாரண மரங்களைக் கடைந்து, குடைந்து ஃபவுண்டன் பேனாக்களைத் தயார் செய்து மலிவு விலையில் விற்பனை செய்தார். ஆனால் அவர் தயார் செய்த பேனாக்கள் வெகு விரைவில் ஒழுகத் தொடங்கி விட்டன. அதன் எழுது முனையும் சீக்கிரம் கெட்டு விட்டது.

அன்று 'கெட்டில்பார்க்' செய்த பேனா தயாரிப்பு முயற்சி தோல்வியடைந்தாலும் பேனா தயாரிப்பு தொடர்பாக முதலடி எடுத்து வைத்தவர் அவர்தான் என்பதை மறுக்க முடியாது.

ஆதாரம் : புகழ்பெற்ற உலக மேதைகள் என்ற நூல்

— சு. கண்ணகி, மிட்டூர்.

# பட்டணத்துத் தம்பியும் பட்டிக்காட்டு டிராக்டரும்!

ஹரி பள்ளி விட்டு வந்து கொண்டிருந்தான். பின்னால் ஒரு லாரி, சத்தம் எழுப்பியபடி வருவதை உணர்ந்தவன் சட்டென சாலை ஓரம் ஒதுங்கினான். அவ்வளவுதான்! செருப்பெல்லாம் ஒரே சகதி.

எரிச்சல் பட்டுக்கொண்டே சாலையில் காலைத் தேய்த்தபடி நடந்தவனுக்கு சாலையின் ஓரத்தில் ஒரு புத்தம்புது டிராக்டர் நிற்பது கண்ணில் பட்டது.

அவன் காரில் போயிருக்கிறான். ரயில், பஸ்களில் போயிருக்கிறான். ஆனால் இந்த டிராக்டரில் மட்டும் ஒரு தடவைகூட ஏறியது கிடையாது. சுற்றும் முற்றும் பார்த்தான். அருகில் யாரும் இல்லை.

வேகமாக நடந்து டிராக்டரை அடைந்தான். ஆசையாகக் கால் வைக்கப் போனான்.

"தம்பி நான் ரொம்பப் புதுசு. சகதி செருப்பைக் கழற்றி வச்சிட்டு மேலே ஏறு" என்ற குரல் கேட்டது.

ஹரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. வேகமாக சுற்றிப் பார்த்தான். ம்...ஹூம். யாரும் இல்லை.

"தம்பி யாரைத் தேடறே? நான்தான் டிராக்டர் பேசறேன். என் மேல் ஏற ஆசைதானே! ம்... சீக்கிரம்"

"நீ பேசியதுல கையும் ஓடலை; காலும் ஓடலை" என்றான் ஹரி










பதட்டத்துடன்.

"நீ பிரமிக்கிறது இருக்கட்டும். முதலில் ஏறு. டீ சாப்பிடப் போன எங்க டிரைவர் வருவதற்குள்" என்றது டிராக்டர்.

ஹரி செருப்பைக் கழற்றி விட்டு ஏறி அமர்ந்தான். "இந்த வண்டி ரொம்ப வித்தியாசமா இருக்கு. ஆனால் ஒரே ஆள் உட்காருகிற மாதிரி வசதிதான் இருக்கு" என்றான் ஹரி.

"நான் ஜாலியா ஊர் சுத்தறதுக்கான வண்டியில்லே தம்பி. வேலைகளைச் செய்வதற்கானவன்."

"நான் டிராக்டரில் ஏறினதில்லையே தவிர எனக்கும் உன்னைப் பற்றிக் கொஞ்சம் தெரியும்" என்றான் ஹரி.

"என்ன தெரியும் சொல்லு?"

"ஆயிரக்கணக்கான வருஷங்களா மனிதர்கள் விவசாய வேலைகளுக்கு மாடு, குதிரைகளைத்தான் பயன்படுத்திட்டு இருந்தாங்க. ஆனால் இப்ப மாடு செய்யற வேலைகளை டிராக்டர் அதாவது நீ செய்யறே."

"பரவாயில்லையே! பட்டணத்துத் தம்பிக்கு பட்டிக்காட்டு டிராக்டரைப் பற்றி எங்கே தெரியப் போகிறது என்று நினைத்தேன். ஆனால் டிராக்டர் சமீபத்துல வந்ததில்லை. டிராக்டர் கண்டு பிடிச்சு நூறு வருடங்களுக்கு மேலாகி விட்டது."

"அப்படியா! நம்பவே முடியலையே" என்றான் வியப்புடன் ஹரி.

"1890 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள கோதுமை பண்ணையில் முதன் முதலாக டிராக்டர் பயன்படுத்தப் பட்டது. அந்த டிராக்டரில் நீராவி எஞ்சின் பொறுத்தப்பட்டிருந்தது."

"அப்புறம் என்னாச்சு?"

'ஆனால் அந்த டிராக்டரை அவ்வளவு எளிதாகக் கையாள முடியலை. அதில் நாற்பது கலப்பைகள் பொருத்தப்பட்டு பெரிய நிலங்களைத்தான் உழ முடிந்தது" என்று நிறுத்தியது டிராக்டர்.

"இதில் என்ன கஷ்டம். சீக்கிரமா வேலை முடியுமே!" என்றான் ஹரி.

"அதுதான் இல்லை. நீராவி எஞ்சினால் ரொம்ப நேரம் வேலைகளைச் செய்ய முடியலை. அதற்குப் பின் சிறிய டிராக்டர்கள் உருவாக்கப்பட்டு அதில் மண்ணெண்ணெய் எரிபொருளாகப் பயன்படுத்தப் பட்டது. அதற்குப் பிறகு பெட்ரோலில் ஓடும் டிராக்டர்கள் வந்தன. இப்ப டீசல்தான் பயன்படுகிறது."

"உன்னோட வேலை நிலத்தை உழுவது மட்டும்தானா?"

"1920 ஆம் ஆண்டிலிருந்தே நான் பல வேலைகளைச் செய்ய ஆரம்பிச்சிட்டேன். உழுதல், அறுவடை செய்தல், போரடித்தல், வைக்கோலைக் கட்டுதல் என்று அப்போதே வேலைகள் அதிகம். நான் இன்றைய அதி நவீன மாடல். நாற்றுகள் நடுவது; மருந்து அடிப்பது, தானியங்களைச் சுமந்து செல்வது என பல வேலைகளுக்கும் தனித்தனியான உதிரி பாகங்கள் விற்கப்படுகின்றன. இவற்றை வாங்கி இணைத்து விட்டால் போதும்."

"இரு, இரு. எனக்கு ஒரு சந்தேகம். முன் இரு சக்கரங்கள் சின்னதாக இருக்கு. பின் இரு சக்கரங்கள் இவ்வளவு பெரிசா இருக்கே. பயிர் நசுங்கிடாதா?"

"நியாயமான சந்தேகம்தான்! பயிர்களுக்கு ஒண்ணும் ஆகாது தம்பி!"

"நம்ம நாட்டில் நீ எப்ப பயன்பட ஆரம்பிச்சே?" என்றான் ஹரி.

"1950 ஆம் ஆண்டுகளில் டிராக்டர் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டது."

"நீ எந்த நாட்டில் இருந்து வந்தே?"

"நீ புத்திசாலின்னு நினைச்சேன். இப்படி ஒரு கேள்வி கேட்கறியே? நான் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவன்,

டாஃபேதான் என் கம்பெனி பெயர். இது போக, மகேந்திரா, எச்.எம்.டி. பிடிஎல். எஃப் டிராக்டர், எஸ்கார்ட்ஸ் போன்ற நிறுவனங்களும் டிராக்டர்களை தயாரிக்கின்றன."

"நம்ம நாட்டில் எந்த மாநிலத்தில் நீங்க அதிகமா பயன்படுத்தப்படறீங்க?"

"ராஜஸ்தான் மாநிலம்தான் எங்களை அதிகம் பயன்படுத்துகிறது. இரண்டாவது இடம் ஆந்திராவுக்கு. தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பிடிக்கும்."

"பட்டணத்துல உற்பத்தி செய்யப்பட்டாலும் உன்னோட வேலை பட்டிக்காட்டில் மட்டும்தானே!" என்றான் ஹரி.

"தம்பி நீ நினைக்கிறது தப்பு. நான் விவசாயத்திற்கு மட்டும் அல்ல. சாலைகளை அமைக்கவும் கரடுமுரடான நிலத்தைச் சமப்படுத்தவும் சுரங்கங்களில் தாதுப் பொருட்களை வலித்திழுக்கவும் இன்னும் பல்வேறு பணிகளுக்கும் பயன்படறேன்."

"அப்படியா! நீ மெதுவாகப் போறியே! உன் வேலையும் மந்தம் தானா?" என்று கேட்டான் ஹரி.

"மாடு ஒருநாள் செய்யும் வேலையை நான் ஒரு மணி நேரத்தில் செய்து முடித்து விடுவேன்" என்று பெருமையுடன் கூறியது டிராக்டர்.

"நேரம் ரொம்ப மிச்சமாகும்!"

"நேரம் மட்டுமில்லை தம்பி. பணம், உழைப்பும் கூடத்தான். மாடுகளை பயன்படுத்தினபோது விவசாய வேலை மிகவும் கடினமாக இருந்தது. அத்துடன் மாடுகளை ஆண்டுமுழுவதும் உணவு கொடுத்து பராமரிக்கணும்."

"நீ சொல்றது சரிதான்! ஆனால் உன் விலையோ ரொம்ப அதிகம். லட்சத்துக்கு மேலாகும்னு கேள்விப்பட்டேன். ஏழை விவசாயிகள் உன்னை எப்படி பயன்படுத்த முடியும்?"

"என்னை வாங்கிப் பயன்படுத்த முடியாவிட்டாலும் வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்தறாங்களே! சிறு விவசாயிகள் கூட வாடகைக்கு எடுக்க விரும்பறாங்க" என்றது டிராக்டர்.

"நீ இவ்வளவு உதவி செய்யும்போது எல்லோரும் உன்னை விரும்பத்தான் செய்வாங்க."

"ஆரம்பத்துல எங்கள் வருகையை நம் நாட்டில் நிறைய பேர் எதிர்த்தாங்க. வேலை வாய்ப்பு குறையும்னு பயந்தாங்க. ஆனால் இப்ப நிலைமை மாறி விட்டது. எல்லா துறைகளிலும் தொழில் நுட்பம் வளர்ந்ததை ஆதரித்த மக்கள் விவசாயத்தில் ஏற்பட்ட வளர்ச்சியையும் ஏற்றுக் கொண்டார்கள். இன்று டிராக்டரை இயக்க மட்டும் மனிதன் இருந்தால் போதும். அத்தனை வேலைகளையும் நாங்கள் பார்த்துக் கொள்வோம்!"

"ஏன் டிராக்டர்கள் சிவப்பு நிறத்திலேயே இருக்கின்றன?"

"பச்சை வயல்களில் சிவப்பு நிறம் சட்டென அடையாளம் தெரியும் அதற்குத்தான். தபால் பெட்டிகூட சிவப்பாகத் தானே இருக்கு. தம்பி, அதோ டிரைவர் வர்றார். நீ கிளம்பு" என்றது டிராக்டர்.



"சரி கிளம்பறேன். நீ இப்ப எந்த ஊருக்குப் போறே?" என்றான் ஹரி.

"சேலத்துக்குப் பக்கத்தில் உள்ள கிராமத்துக்கு."

"அவ்வளவு தூரம் நீ போவியா?"

"இப்ப ரொம்ப தூரம் போற அளவு சக்தி எங்களுக்கு இருக்கு. ஓரளவு வேகமாகவும் போவோம். என்னிடம் பேசிட்டிருந்ததுக்கு நன்றி" என்றது டிராக்டர்.

"நான்தான் உனக்கு நன்றி சொல்லணும். வரேன் டிராக்டர் அண்ணா" என்றவன் செருப்பை மாட்டிக்கொண்டு கிளம்பினான்.

நான்கடி நடந்தவன் திரும்பிப் பார்த்தான். டிராக்டர் இவனைப் பார்த்துச் சிரித்தபடி கிளம்பியது. ஹரியும் பதிலுக்குச் சிரித்து கையாட்டினான். டிரைவர் ஹரியை விநோதமாகப் பார்த்தார்.

அட்டையில்: **ஹரிராம்**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

## 8 கானகத்தில் விருந்து

அந்தக் காட்டுவாசிப் பையனை நித்யா - சத்யா இருவருக்கும் பிடித்துவிட்டது. என்ன காரணமென்று தெரியவில்லை - கபடமற்ற அவன் முகமா - சிரிப்பா அல்லது அவன் பேசும் பட்லர் இங்லீஷா? ஏதோ ஒன்று - அந்தக் கானகத்துப் பையனும் அவர்களுடன் கலகலப்பாகப் பழகினான். சத்யா, அந்த ஊதுகணைக் குழாயைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்பினான்.

''விஷ முள் சிறுத்தையைக் கொன்னுருக்குமா?'' என்று கேட்டான்.

''கொல்லாது. உயிரைப் போக்க வேறு வகை விஷ முள் இருக்கு. அதை அவசியமானால்தான் பயன் படுத்துவோம். நான் ஊதிய விஷ முள் காட்டு விலங்குகளை மயக்க முற வைக்கும். செயலிழந்த அதை நாங்கள் கட்டித் தூக்கிப் போவோம்... அது சரி... பட்டணத்துவாசிகளான நீங்க இந்தக் காட்டுக்கு எப்படி வந்தீங்க?'' என்று கேட்டான் அந்தப் பையன்.



''நீ எப்படி தப்பும் தவறுமா இங்கிலீஷ் பேசறயோ - அதுபோல நாங்களும் தப்பியோடித் தவறுதலா இந்தக் காட்டுக்குள்ளே வர வேண்டியதாப் போச்சு. நீ பாதிரியார் வீட்டுக்கு எப்படி போனே அதைச் சொல்லு'' என்றான் சத்யா.

''அதுக்கு முன்னால உன் பேரைச் சொல்லு!'' என்றாள் நித்யா.

''என் அப்பனும் ஆத்தாளும் வச்ச பேரு 'டிங்கு'. ஆனா சர்ச்சிலேயும் பாதிரியாரும் என்னை 'டிங் டாங்'குனுதான் கூப்பிடு வாங்க... என்று வெட்கத்தோடு சிரித்தான். அவன் கறுப்பு முகத்தில் வெள்ளைப் பல் வரிசை பளீரிட்டது.

''அது என்ன 'டிங் - டாங்?'

''சர்ச்சிலே உள்ள மணி ஒலிக்கிறாப்பலே என் குரல் கணீர்னு இருக்குன்னு அப்படிக் கூப்பிடறதாச் சொல்லுவாங்க...''

''நாங்கள் உன்னை டிங்குன்னு கூப்பிட றோம்.''

''எப்படியும் கூப்பிடுங்க... என் பேரைக் கேட்டீங்க, ஆனா உங்க பேரைச் சொல்லலியே?''

''என் பெயர் நித்யா. இவன் என் தம்பி, பெயர் சத்யா!!''

''உங்க ரெண்டு பேர் பேரும் நல்லா இருக்கு. உங்களைப் போலவே அழகாக வுமிருக்கு. என்று பாராட்டினான் டிங்கு. பிறகுதான் மிஷனரியில் வளர்ந்ததைப் பற்றிக் கூறலானான். ''நான் ரெண்டு வயசுக் குழந்தையா இருக்கும்போது கொழு கொழுன்னு குட்டிகையா இருப்பேனாம்.



வாண்டுமாமா

# தங்கச்சிலை!

அப்போ காட்டுப் பகுதியில் ஆராய்ச்சி செய்ய வந்தவங்க என் சேஷ்டைகளைப் பாத்துப் பிரமிச்சுட்டாங்களாம். அவங்களிலே இருந்த பாதிரியாருக்கு என்னை ரொம்பவே பிடிச்சுப் போச்சு. அவர் என் அப்பாகிட்டே கெஞ்சிக் கூத்தாடி, 'நான் இந்தக் குழந்தையை வளர்த்து, பெரிய ஆளாக்கறேன்'னு சொல்லி, தன்னோட கொண்டு போயிட்டாராம். நான் சர்ச்சிலே வளர்ந்தது இப்படித்தான்" என்றான் டிங்கு.

"சரி... ஆனா ஏன் சர்ச்சிலிருந்து ஓடி வந்துட்டே? அங்கே உன்னை ஏதாவது துன்புறுத்தினாங்களா?" கவலையுடன் கேட்டான் நித்யா.

பதறிப் போனான் டிங்கு. "ஐயையோ!

அப்படியெல்லாம் ஏதுமில்லே பாப்பா. பாதிரியார் தன் மகனைப் போல என்னிடம் அன்பு காட்டினார். அவங்களைப் போலவே எனக்கு உடையெல்லாம் அணிவிச்சு உணவெல்லாம் கொடுத்தாங்க. ஆனா எனக்குத்தான் அந்தக் கட்டுப்பாடான வாழ்க்கை பிடிக்கலே.... அவங்க சாப்பாட்டுச் சமாசாரமும் எனக்கு ஒத்து வரலே. இந்தக் காடும் இங்கு வாழும் பறவைகளும் மிருகங்களும் காற்றும் என்னை இங்கே 'வா.... வா... வந்துடு'ன்னு கூப்பிட்டுக்கிட்டே இருந்தன. ஒருநாள் யாருகிட்டயும் சொல்லிக்காம இங்கே ஓடி வந்துட்டேன். என் அப்பாவுக்கு நான் ஓடி வந்துட்டதிலே ரொம்ப சந்தோஷம். ஆனாலும் நான் பாதிரியாரை மறக்கலே...!'' என்று தான் சர்ச்சில் வளர்ந்த கதையைக் கூறி முடித்தான் டிங்கு.

அதன் பிறகு, நித்யா – சத்யாவைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினான். "இந்தக் காட்டுப் பகுதிக்கு பட்டணத்து சனங்க வர மாட்டாங்களே – நீங்க எப்படி – அதுவும் இந்தச் சின்ன வயசிலே – இங்கே வந்தீங்க?'' என்று கேட்டான். நித்யா, தாங்கள் இங்கு வர நேர்ந்தது எப்படி என்பதைச் சுருக்கமாக டிங்குவிற்குக் கூறினாள். இடை இடையே சத்யாவும் சில விளக்கங்களைச் சொன்னான்.

"எங்க அப்பாவை இங்கு எங்கோ ஓர் இடத்தில் சிறை வைத்திருக்கிறான் அந்த ஜெயராஜ் அயோக்கியன். அவரைத் தேடிக் கொண்டுதான் நாங்கள் இந்தக் காட்டுக்கு வந்திருக்கிறோம். அப்பா எங்கே இருக்கார் – அவரை எப்படி கண்டுபிடிக்கப் போறோம்னு தெரியலே'' என்றபோது நித்யாவின் கண்களில் நீர் திரண்டது.

''வருத்தப் படாதே பாப்பா. இந்தக் காட்டுப்பகுதிக்கு என் பாட்டன் ராஜா மாதிரி. அவருக்கு இங்குள்ள ஒவ்வொரு மூலை முடுக்கும் தெரியும். இங்குள்ள மலை மீது ஒரு புராதனக் கோயில் இருக்கு. வருசத்துக்கு ஒருமுறை எங்க சனங்க அங்குள்ள சாமிக்குப் படையலிடப் போவாங்க. நீங்க சொல்ற இடம் அதாத்தான் இருக்கணும். வாங்க, எங்க பட்டிக்குப் போகலாம். அங்கே என் பாட்டன்கிட்ட உங்களைப் பத்திச் சொல்றேன்'' என்று கூறி அவர்களைக் காட்டுவாசிகளின் குடியிருப்புக்குக் கூட்டிப் போனான். போகும் வழியில் சரசரவென்று மரங்களில் ஏறி நித்யாவுக்கும் சத்யாவுக்கும் பழங்களைப் பறித்துக் கொடுத்துச் சாப்பிடும்படி உபசரித்தான். அத்தகைய ருசியான



கனிகளை அவர்கள் அதுவரை சாப்பிட்டதே இல்லை. பாதையோரத்தில் சுருண்டபடி மயங்கிக் கிடந்த சிறுத்தையின் நான்கு கால்களையும் காட்டுக் கொடியினால் கட்டி, ஆட்டுக்குட்டியைப் போலத் தன் தோளில் போட்டுக்கொண்டான்.

''இதுக்கு நினைவு திரும்ப இன்னும் ரெண்டு மணி நேரமாகும். பயப்படாதீங்க'' என்றான் டிங்கு சிரித்துக்கொண்டே.

"விஷ ஊசியை ஊன்றி விரட்டினாயே அந்தச் சிறுத்தைதானா இது?'' என்று கேட்டான் சத்யா.

"அதேதான். இதன் கழுத்தைப் பார். விஷ முள் செறுகிய தானியமணி இருக்கும்...!'' நித்யாவும் சத்யாவும் அவன் கூறியபடியே அதன் கழுத்தில் முள் பதிந்திருப்பதைக் கண்டு வியந்தார்கள். நகரத்தில் ரங்குடு கிடைத்த மாதிரியே, கானகத்தில் டிங்கு தங்களுக்குக் கிடைத்திருப்பதை நினைத்து இருவரும் சற்றே ஆறுதலடைந்தார்கள்.

நெடிதுயர்ந்த மரங்களின் அடர்ந்த கிளைகள், பின்னிப் பிணைந்து, சூரிய ஒளி புகாதபடி பந்தலிட்டிருந்தது அந்தக் கானகத்தில். அவற்றினூடே புகுந்து ஒழுகும் ஆதவனின் ஒளி கண்களைக் கூச வைத்தாலும் அழகாக – ஆனந்தமாக இருந்தது. காட்டுக் கொடிகள் வேறு தங்கள் பங்குக்கு அக் கானகப் பாதையில் ஒரு மூட்டத்தை ஏற்படுத்தி இருளைத் தேக்கி வைத்துக் கொண்டிருந்தன. நித்யாவுக்கும் சத்யாவுக்கும் அந்த இருள் மண்டிய கானகத்தினுள்ளே நடந்து செல்வது புதிய அனுபவமாக, 'த்ரில்'லாக இருந்தாலும், மனதின் ஒரு பக்கத்தில் பயத்தின் கடி, வலியையும் கொடுத்தது.

டிங்கு, சர்வசாதாரணமாக, நெடுநாள் பழக்கப்பட்ட பாதையில் நடப்பது போல,

## ஓவியப் போட்டி

**இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: 'மழை.' மழை நேரத்தில் நீங்கள் ரசித்த காட்சிகளை வரைந்து, வண்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும். கடைசி தேதி: 20.2.2000**

மரங்களினூடே புகுந்து புகுந்து போய்க் கொண்டிருந்தான். தோளில் சிறுத்தையின் சுமையுடன். நித்யாவும் சத்யாவும் தட்டுத் தடுமாறியபடி டிங்குவைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தனர். வெகு நேரத்துக்குப் பின் – நித்யாவும் சத்யாவும், 'இனி நடக்க முடியாது போலிருக்கே!' என்று களைத்துப் போன போது – "அதோ தெரியுதே அது தான் எங்க கிராமம்! களைச்சுப் போயிட்டீங்க இல்லே!'' என்று கலகலவென்று சிரித்தான் டிங்கு, அவர்களுடைய மன நிலையைப் புரிந்துகொண்டவன் போல. ஆனால் அவன் காட்டிய திசையில் குழந்தைகளுக்கு எந்தக் கிராமமும் கண்ணில் படவில்லை.

"அதோ புகை... சத்யா! அதுதான் டிங்குவின் கிராமம்... அவர்கள் அடுப்புகளிலிருந்து கிளம்பும் புகைதான் அது" என்றாள் நித்யா. மூன்று பக்கம் கருமையான சுவர் போல எழுந்திருந்தன மலைகள். இப்போது அவர்கள் பாதையில் பெரும் மரங்கள் இல்லை – புதர்களும்கூட ஒதுங்கி வழி அமைத்துக் கொடுத்திருந்தன. தொலைவில் கொத்துக் கொத்தாகக் குடிசைகளின் முகடுகள் தெரிந்தன. டிங்குவின் கிராமத்துக்கு வந்து விட்டதை இப்போது உணர்ந்தார்கள் நித்யாவும் சத்யாவும்.


தன் கிராமத்தை நெருங்கியதும் டிங்கு விசித்திரமாகக் குரல் எழுப்பினான் – டார்ஜான் படத்தில், டார்ஜான் குரல் எழுப்புவது போல. உடனே குடிசைகளிலிருந்த குழந்தைகள் குதூகலத்துடன் ஓடி வந்தனர். டிங்கு தன் தோளிலிருந்து சிறுத்தையை, ஒரு மரத்தடியில் இறக்கிவிட்டு ஓடி வரும் குழந்தைகளிடம் ஏதோ கூறினான். அது நித்யாவுக்கும் சத்யாவுக்கும் புரியவில்லை. உற்சாகமாக ஓடி வந்த குழந்தைகள், டிங்குவோடு, வித்தியாசமாக உடை அணிந்த இருவர் இருப்பதைக் கண்டு அப்படியே நின்றபடி, நித்யாவையும் சத்யாவையும் மருட்சியும் சந்தேகமும் கலந்த பார்வையினால் மேய்ந்தார்கள்.

அவர்கள் பயப்படவோ – சந்தேகப்படவோ தேவையில்லை என்பதை டிங்கு அவர்களுக்கு விளக்கவே மெள்ள மெள்ளக் காட்டுவாசிக் குழந்தைகள் நித்யா – சத்யாவின் அருகில் வந்தனர். அவர்களுடைய உடைகளை – உடலைத் தொட்டுப் பார்த்துக் கிளுகிளுத்தனர். தங்களுக்குள் ஏதோ சொல்லிக் கொண்டு மகிழ்ச்சியோடு, உரிமையோடு நித்யா, சத்யாவின் கைகளைப் பற்றிக்கொண்டு குதித்துக் கும்மாளமிடலானார்கள்.

''உங்கள் உடல் நிறமும் உடைகளும் அவர்களுக்கு அந்நியம். அதனால்தான் முதலில் உங்களைக் கண்டதும் பயந்து ஒதுங்கினார்கள். 'இவர்கள் நம் சகோதர சகோதரிகள்' என்று அவர்களிடம் விளக்கினேன். இப்போது உங்களோடு விளையாடவே ஆரம்பித்து விட்டார்கள்!" என்று விளக்கினான் டிங்கு.

குழந்தைகளின் கும்மாளக் கூச்சலையும் டிங்குவின் குரலையும் கேட்டுக் குடிசைகளிலிருந்து பெரியவர்களும் வெளிப்பட்டார்கள். அந்தப் பட்டியின் தலைவர் மகன் டிங்கு. அவன் சில வருடங்கள் பாதிரியாரிடம் வளர்ந்து வேறு பாஷை பேசக் கற்றுக்கொண்டு வந்திருந்ததால் டிங்குவை அவர்கள் ஒரு ஹீரோவாக மதித்து அன்பு காட்டுவதை நித்யாவும் சத்யாவும் பார்த்தார்கள். தன் தந்தைக்கும் பட்டியின் பெரியவர்களுக்கும் நித்யாவையும் சத்யாவையும் டிங்கு அறிமுகப்படுத்தினான். அன்றிரவு அவர்களுக்கு விருந்து அளிக்கப் போவதாக டிங்குவின் அப்பா – பட்டியின் தலைவர் அறிவிக்கவே எல்லாரும் உற்சாகக் குரல் எழுப்பினார்கள்.

புதிதாக உருவாக்கப்பட்டிருந்த ஒரு குடிசைக்கு நித்யாவையும் சத்யாவையும் அழைத்துப் போய் "இது விருந்தினர்களுக்கான குடிசை. நீங்கள் இருவரும் இங்கு தங்குங்கள். விருந்து தயாரானதும் நான் வந்து உங்களை அழைத்துப் போகிறேன். கிராமத்தின் பொது மைதானத்தில்தான் விருந்தும் கேளிக்கையும் நடக்கும். உங்களுக்குப் புதுமையாக இருக்கும்" என்று கூறி விடை பெற்றுத் தன் குடிசைக்குப் போனான் டிங்கு. நித்யாவுக்கும் சத்யாவுக்கும் நடப்பது எல்லாமே ஆச்சரிய



மாக இருந்தது. காட்டுவாசிகளின் கள்ளங் கபடமற்ற முகங்களும் சிரிப்பும் அன்பும் அவர்கள் உள்ளத்தை நெகிழ வைத்து விட்டன!

பட்டியின் பொதுத்திடலில் வட்டமாக தரையில் நடப்பட்டிருந்த கம்பங்களில் தீவட்டிகள் எரிந்துகொண்டிருந்தன. நடுவில் பெரிய பெரிய காட்டு இலைகளைப் பரப்பி, அதில் மண்பாண்டங்களிலும் குடுவைகளிலும் மரத்தட்டுகளிலும் விதவிதமான உணவுப் பண்டங்களும் பழ வகைகளும் பானங்களும் வைக்கப்பட்டிருந்தன. பெரிய இலையில் நித்யாவுக்கும் சத்யாவுக்கும் உணவுப் பண்டங்களை வைத்து வழங்கினான் டிங்கு. அவர்களுடைய உணவு குழந்தைகளுக்கு வித்தியாசமாக இருந்தது. ஆனாலும் முகம் சுளிக்காமல் அவர்களுடைய அன்புக்கு மரியாதை கொடுத்து அவற்றை உண்டார்கள். டிங்குவின் அப்பா நித்யாவையும் சத்யாவையும் அவர்கள் பாணியில் அழைத்து உச்சியில் முத்தமிட்டது குழந்தைகளைப் பரவசப்படுத்தியது.

விருந்தும் காட்டுவாசிகளின் பாட்டும் கூத்தும் முடிந்து நித்யாவையும் சத்யாவையும் அவர்கள் குடிசையில் கொண்டு வந்து விட்ட டிங்குவிடம் நித்யா கேட்டான் - "டிங்கு உன் அப்பாவிடம் எங்கள் தந்தையின் நிலையைக் கூறினாயா? பாழடைந்த மலைக்கோயில் எங்கிருக்கிறது? எங்களை எப்போது அங்கு அழைத்துப் போவதாகக் கூறினார்?"

"எங்க ஆண்டைகிட்டே உங்க விஷயத்தையெல்லாம் கூறினேன். புதையல் விஷயம் நிசம்தானாம். அவருக்கேகூட ரொம்ப வருஷத்துக்கு முன்னால் ஒரு பானையிலே தங்கப் புதையல் கிடைச்சுதாம். அதோட ஒரு தாமிரப் பத்திரமும் இருந்துச்சாம்" என்றான் டிங்கு.

"புதையலா...! பத்திரம்னா... அதில் ஏதாவது எழுதி இருக்குமே. இப்போ அது உன் அப்பாகிட்டே இருக்கா?" என்று ஆவலோடு கேட்டான் சத்யா.

"இருக்கு... ஆனா அதிலே என்ன எழுதி இருக்குன்னு என் ஆண்டைக்குத் தெரியலை."

"பரவாயில்லே. புரொபஸர் புண்ணியகோடி கண்டுபிடிச்சுடுவார். உன் ஆண்டைக்குப் புதையல் கிடைத்த கதையைக் கூறு" என்றான் நித்யா.

டிங்கு அதைக் கூறலானான்.

(தொடரும்)

# முட்டை ஓடு பொம்மைகள்!



தேவையானவை : காலியான முட்டை ஓடுகள், கத்தரிக்காய் காம்புகள், பஞ்சு, பசை, ஸ்கெட்ச் பேனா மற்றும் வாட்டர் கலர், குச்சிகள்.

முதலில் காலியான முட்டை ஓடுகளைச் சுத்தம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். கத்தரிக்காயிலிருந்து காம்புகளை சிதைக்காமல் எடுத்துக் கொள்ளவும். முட்டை ஓட்டின் துளை இருக்கும் பகுதியில் காம்புகளை பசை கொண்டு தடவுங்கள். மூன்று நான்கு முட்டை ஓடுகளை இதே போல் செய்யவும். பிறகு வைலட், பச்சை, வெண்மை இழையோடும் வைலட் என ஓடுகளின் மேல் வண்ணம் தீட்டுங்கள். அசல் கத்தரிக்காய்களைப் போலவே இருக்கும்.

இதே முட்டை ஓடுகளை வைத்து வெண் தாடி தாத்தா செய்யலாம். முட்டை ஓட்டினை எடுத்துக் கொண்டு கறுப்பு ஸ்கெட்ச் பேனாவால் கண், மூக்கு, வாய், புருவம் என வரையுங்கள். பிறகு முட்டையில் துளையிருக்கும் பகுதியில் பஞ்சால் தாடி போல் ஒட்டுங்கள். தலைக்கும் சிறிது பஞ்சை ஒட்டி விடுங்கள். இதோ தாத்தா ரெடி.





முட்டை ஓட்டின் துளையில் குச்சியைச் செருகி ஏதாவது சிறிய டப்பாவில் மண் நிறைத்துக் குத்தி வைக்கவும். அலங்காரமாக இருக்கும்.

முட்டை ஓடுகளில் வரைவது கஷ்டமாக இருந்தால் வாட்டர் கலரால் பல வண்ணப் புள்ளிகளை வைத்து குச்சியில் செருகி வைக்கலாம். இந்த முட்டை ஓடு பொம்மைகள் பார்க்க மிகவும் அழகாக இருக்கும்.

— பூமா



## சாரு எங்கே?

அப்பா நிறைய ஆரஞ்சுப் பழங்களை வாங்கி வந்தார். பாட்டியிடம் ஆரஞ்சு ஜூஸ் பிழிந்து தரும்படி கேட்டேன். பாட்டி வேலையில் இறங்கினார். டியூசன் போன என் தங்கை திரும்பி வரவில்லை. அப்பாவிடம் சென்று, "அப்பா நம்ம சாருலதா இன்னும் வரலை" என்றேன். "என்ன சாரு வரலையா?" என்றார் அப்பா பதற்றத்துடன். உள்ளேயிருந்த பாட்டி, "சாறு நல்லா வருது. ரொம்ப அருமையான பழம்" என்றார். அப்போது சாருலதா உள்ளே நுழைய, "சாறும் வருது, சாருவும் வந்துட்டா" என்று நான் சொல்ல அனைவரும் சிரித்தனர்.

**– எஸ். கவிதா, ஏழாம் வகுப்பு, திருநெல்வேலி.**

## மணி என்ன?

ஊரிலிருந்து மாமா வந்திருந்தார். அவருக்குக் காது சரியாகக் கேட்காது. எந்தச் செய்தியையும் இருமுறை சொல்வோம். அன்று மாமா என்னிடம், "மணி என்ன?" என்று கேட்டார். "நான் பத்து – பத்து" என்றேன். உடனே முஹம்மது இப்ப எனக்கு காது நல்லா கேட்கும். காது கேட்கும் மிஷின் வச்சிருக்கேன். ஒரு தடவை சொன்னால் போதும்" என்றார். "மாமா நான் சொன்னது பத்து மணி பத்து நிமிடம்" என்றேன். "நான்தான் தப்பாப் புரிஞ்சிட்டேன்" என்று வருத்தப் பட்டார் மாமா.

**– எ.எல். முஹம்மது, காரைக்கால்.**



## எங்கே மீசை?

என் சித்தப்பா பெரிய மீசையை முறுக்கி விட்டிருப்பார். எனவே அவரது நண்பர்கள் 'மீசை' என்றே அவரைக் கூப்பிடுவார்கள். அன்று ஊரிலிருந்து எங்கள் உறவுக்காரப் பெண் வந்திருந்தாள். யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டது. அவள் போய்த் திறந்தாள். சித்தப்பாவின் நண்பர் வழக்கம் போல் "எங்கே மீசையைக் காணோம்?" என்று கேட்டார். "நான் மீசை வளர்த்துப் பார்த்திருக்கீங்களா? முன்னே பின்னே தெரியாத எங்கிட்ட எப்படி இப்படி ஒரு கேள்வி கேட்பீங்க?"

# சாறு இன்னும் வரவில்லையா?

## எங்கள் ஊரில் நடந்தது!

என்று கோபமாகக் கத்தினாள். சித்தப்பாவின் நண்பர் பரிதாபமாக நின்றார். நான் ஓடிப் போய் உறவுக்காரப் பெண்ணிடம் விஷயத்தை விளக்கினேன். அவளும் சித்தப்பாவின் நண்பரும் மாற்றி மாற்றி மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

**– ஆர். ஜெயவாணி, பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, அனந்தபுரம்.**



### கேலட்டு!

தீபாவளி நேரம். வீட்டிற்கு உறவினர் பையன் ஒருவன் வந்திருந்தான். திடீரென, "கேலட்டு வேணும்" என அழ ஆரம்பித்தான். எங்கள் அம்மா ஜாங்கிரி, மைசூர் பாகு எல்லாம் எடுத்துக் கொடுத்தார். அப்போதும் "கேலட்டு வேணும்" என அழுதான். "நான் லட்டு செய்யலையே! அதுவும் இனிஷியலோட லட்டு கேட்கறானே" என்றார் அம்மா. அவன் சமையலறை பக்கம் கைநீட்டி, 'கேலட்டு' என்றான். அம்மா அவனைத் தூக்கிக் கொண்டு போய் ஒவ்வொன்றாகக் காட்டி, 'என்ன வேண்டும்?' என்றார். அவன் கேரட்டைக் காட்டினான். பிறகுதான் புரிந்தது அவனுக்கு, 'ர, ற' வராது என்று!




**– ஏ. எஸ். யோகானந்தம், ஔவையார் பாளையம்.**


### சில்லரை இருக்கா?

அப்பா தம்பியிடம் ஐம்பது ரூபாயைக் கொடுத்து கடையில் சில்லறை வாங்கி வரும்படி கூறினார். கடைக்குச் சென்று விட்டு சிறிது நேரத்தில் திரும்பியவன், "சில்லறை கிடைக்கலை" என்றான். அது அப்பாவின் நண்பர் கடை. "எனக்கே இல்லைன்னு சொல்லிட்டானா? நான் போய்க் கேட்கறேன்" என்று கிளம்பினார் அப்பா. "அப்பா! நீங்க போக வேண்டாம். அவர் கிட்டே ஐம்பது காசுக்குச் சில்லறை கேட்டேன். இல்லை என்றார். சரி! ஐம்பது காசுக்கே சில்லறை வைத்துக் கொள்ளாதவர் ஐம்பது ரூபாய்க்கா சில்லறை தரப் போகிறார் என்று நினைத்துத் திரும்பி விட்டேன்" என்றான். அப்பாவுக்கு வந்ததே கோபம்!

**– அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.**


வெள்ளைக் காகங்கள்!
கதை: சஞ்சீவி சிவசு
படம்: சசி
அம்மாவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தன குஞ்சுகள்.
தாய், குஞ்சுகளுக்கு உணவூட்டியது. "அம்மா! எல்லா பறவைகளும் அழகான நிறத்தில் இருக்கும் போது நாம் ஏன் இப்படி?" என்றது ஒரு குஞ்சு.
பெருமூச்சு விட்ட தாய், "நாமும் முன்னொரு காலத்தில் மின்னலடிக்கும் வெண்மையாகத்தான் இருந்தோம்."
"நம் முன்னோர் செய்த தவறால் இப்படி ஆகி விட்டோம்" என்றது தாய். "அம்மா, அதைப் பற்றிச் சொல்லுங்கள்" என்றன குஞ்சுகள்.
ஒருநாள் காட்டில் உள்ள பறவைகள் எல்லாம் வனதேவதைக்கு விழா எடுத்தன.
அப்போது அழகிப் போட்டி நடந்து கொண்டிருந்தது. பனிச்சென்று வெண்மையாக இருந்த காகங்களுக்குத்தான் அழகிப் பட்டம் கிடைக்கும் என மற்ற பறவைகள் பேசிக் கொண்டன.
இதைக் கேட்ட காகங்களுக்குக் கர்வம் வந்து விட்டது. மேடையில் வந்து நின்ற பறவைகளைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தன.
மற்ற பறவைகள் அழுது கொண்டே வந்து வனதேவதையிடம் புகார் செய்தன.


காகங்களிடம் வனதேவதை. "பிறரை இகழாதீர்கள்" எனக் கேட்டுக் கொண்டது.
காகங்கள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. "இந்தக் கண்களை வச்சிட்டு அழகிப் போட்டிக்கு வரணுமா?" என்றன ஆந்தைகளைப் பார்த்து.
அவமானம் தாங்காமல் கோபத்துடன் பறந்து சென்றன ஆந்தைகள்.
அன்றிரவு ஆந்தைகளின் தலைவன், "காகங்களுக்குத் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்" என்று கூற மற்ற ஆந்தைகளும் சம்மதித்தன.
நள்ளிரவு. காகங்களின் இருப்பிடத்தை அடைந்தன ஆந்தைகள். வெள்ளையாக இருந்ததினால் இருளிலும் சட்டென தென்பட்டன காகங்கள்.
உடனே ஆந்தைகள் பறந்துசென்று காகங்களின் உடலைக் கொத்த ஆரம்பித்தன.
மற்ற பறவைகளும் காகங்களின் மேல் உள்ள கோபத்தால் உதவி செய்ய மறுத்தன.


மறுநாளும் இது தொடரவே காகங்கள்
வனதேவதையிடம் சென்று அழுதன.
"எங்க உடலெல்லாம் புண் ஆகி விட்டது. நாங்கள்
செய்தது தப்புத்தான்! காப்பாற்றுங்கள்."
"நான் சொன்னதை நீங்களே
கேட்கலை. ஆந்தைகள்
கேட்கக்கூடிய மனநிலையில்
இல்லை."
"எப்படியாவது இந்த
வேதனையிலிருந்து
எங்களைக்
காப்பாற்றுங்கள்."
"சரி! நீங்கள் வெள்ளையாக
இருக்கிறதாலதான் நடு
இரவில் கூட அடையாளம்
தெரியுது. கறுப்பா
மாத்திடறேன்."
உடனே காகங்கள், கறுப்பு நிறமாக மாறின.
தேவதைக்கு நன்றி கூறின.
அன்றிரவு காகங்களைத் தேடிய ஆந்தைகள்
ஏமாற்றத்துடன் சென்றன. காகங்கள்
நிம்மதியடைந்தன.

✉ கோகுலம் கழல் கோப்பை யாருக்கு? என்ற தவிப்பை ஜனவரி இதழ் முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. ஆண்டிப்பட்டி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு மனமார்ந்த பாராட்டுகள்!

**– கே.ஆர். பரமேஸ்வரன்,**
**கள்ளியாக்குறிச்சி,**
**ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்.**

✉ கடந்த இரண்டு வருடங்களாக கோப்பையைக் கோட்டை விட்டு விட்டோம். இரண்டாயிரமாவது ஆண்டின் கழல் கோப்பை எங்களுக்கே என பணிவுடன் சபதம் ஏற்கிறோம்!

**– மாணவர்கள்**
**ஞானாம்பிகா உதவித் தொடக்கப் பள்ளி, கருப்பம்புலம்.**

✉ கோகுலத்திற்கு நான் புதிய வாசகன். இந்த ஆண்டு எங்கள் பள்ளிக்கு கோப்பையை வாங்கிக் கொடுத்து பெருமை சேர்க்கப் போகிறேன். கடினமான விஷயம்தான். இருந்தாலும் என் முயற்சியை இப்போதிலிருந்தே தொடங்குகிறேன்.

**– அ. சரண்சிவன்,**
**பதினோராம் வகுப்பு,**
**கந்தசாமி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,**
**வேலூர்.**

✉ தமிழக முதல்வரின் குழந்தைப் பருவம் பற்றிய கட்டுரை மிகவும் அருமை! இதைப் போல வாழ்வில் வெற்றியின் சிகரத்தைத் தொட்ட அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோரது குழந்தைப் பருவங்களை வெளியிட்டு எங்களை ஊக்கப்படுத்துங்கள். பிருந்தாவனம் பகுதிக்குக் கூடுதல் பக்கங்களை ஒதுக்கி எங்கள் பொது அறிவு வளர உதவுங்கள்.

**– எஸ். துர்கா காத்யாயனி,**
**எட்டாம் வகுப்பு,**
**புனித அலாய்சியஸ் பள்ளி, தூத்துக்குடி.**

## அசத்தலான போஸ்!

✉ இயற்கையின் படைப்புகள் ஒவ்வொன்றும் விந்தையான விஷயங்கள்தான். அதிலும் பச்சோந்தி நிறம், கண், நாக்கு என பல்வேறு விந்தைகளை ஒருங்கே பெற்ற அதிசய விலங்காகவே எனக்குத் தோன்றுகிறது. படங்கள் அற்புதம்!

**– கா. சந்தியா, ஒன்பதாம் வகுப்பு,**
**மதுராந்தகம்.**

✉ 'கொழுக்கட்டைக்கு வால் உண்டா?' கதை படிக்க சுவாரசியம். ஓவியர் லலிதா குட்டிப் பெண்ணை அழகாக வரைந்திருந்தார். "தலைவலி வார்டு எங்கே?' என்ற கதை நேரடியாக அறிவுரை சொல்லாமல் மறைமுகமாகக் கூறியது என்னைக் கவர்ந்தது.


**– மா. ஆனந்தன், பத்தாம் வகுப்பு,**
**அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,**
**திருச்சி.**

✉ மானாமதுரையைப் பற்றி எழுதிய கட்டுரையைப் படித்ததும் அந்த ஊருக்குச் செல்ல ஆசை ஏற்பட்டது.

**– கே. மரகதம், ஆத்தூர்.**

✉ வாழ்த்து அட்டை செய்வதற்கும் புதிய காலண்டருக்காகவும் ஜனவரி கோகுலத்தை ஆர்வத்துடன் எதிர்பார்த்தேன். வாழ்த்து அட்டை செய்யப் பூக்கள், செடிகளைச் சேகரித்து வருகிறேன். காலண்டரில் கறுங்குரங்கும் வெண் கரடியும் அசத்தலாக போஸ் கொடுத்திருந்தன.

**– பா. ராகவி, பா. கிருஷ்ணன்,**
**பா. மாலதி,**
**திருப்பத்தூர்.**








# நாய் வாலாட்டுவது

**ம**னிதர்கள் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை தோழனாகவும் காவல்காரனாகவும் செயல்பட்டு வரும் விலங்கு நாய்தான்! உலகில் எல்லா இடங்களிலும் மக்கள் இதைச் செல்லமாக வளர்த்து வருகின்றனர்.



மனிதன் நாயை எப்போது நண்பனாக்கிக் கொண்டான் என்று சரியாகச் சொல்ல முடியாது. ஆனால் மிகப் பழங்காலக் குகைச்சுவர் ஓவியங்களில் மனிதன் வேட்டையாடும் காட்சிகளில் நாய் போன்ற பிராணியும் உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஓநாய், குள்ள நரியின் உறவினர்தான் நாய்கள். ஓநாயிலிருந்தே நாய் உண்டாகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஆதிகால மக்கள் ஓநாய்க் குட்டிகளைத் தங்கள் குகைக்குக் கொண்டு வந்து வளர்த்திருக்கலாம். அப்படி வளரும்போது ஓநாய் மனிதன் உண்ணும் உணவையே உண்டு காலப் போக்கில் பரிணாம வளர்ச்சியடைந்து ஓநாயின் இயல்புகளை இழந்து நாயாக மாறி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

நான்காயிரம், ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாய்களில் பல இன வகைகள் உண்டாகிவிட்டன. இன்று 225 வகை நாய்கள் உள்ளன.

**நா**ய்க்கு நன்றாக வடிவமைந்த தலை, நீண்டு கூராக முடியும் முகம், நிமிர்ந்த பெரிய காதுகள், முதுகிலிருந்து கீழ் நோக்கி ஆழமாக தாழ்ந்துள்ள மார்பு, உள்ளொடுங்கியுள்ள வயிறு, கச்சிதமாகத் தசை கட்டமைந்த உடல், தசை முறுக்கேறிய மெல்லிய கால்கள், முடியடர்ந்த வால் ஆகியன உண்டு. நாய் மட்டுமின்றி இவற்றின் முன்னோர்களான செந்நாய்,







குள்ளநரிக்கும் இதே போன்ற உடலமைப்புதான்!

முன் கால்களில் ஐந்து விரல்களும் பின் கால்களில் நான்கு விரல்களும் இருக்கின்றன. மங்கலான சாம்பல், மஞ்சள், பழுப்பு, வெள்ளை, கறுப்பு நிறங்களில் காணப்படும்.

இரையை விரைந்து பிடிக்கும் வகையில் நாயின் கால்கள் அமைந்துள்ளன. பற்களும் தாடைகளும் இரையை இறுக்கிப் பிடித்துக் கொள்ள உதவுகின்றன. மேற்பற்களின் சந்துகளில் கீழ் பற்கள் பொருந்துமாறு அமைந்திருக்கின்றன.

# ஏன்?

அசைவப் பிராணியாக இருந்தாலும் சைவ உணவுகளையும் உண்ணும்.

மோப்ப சக்தியும் கேட்கும் சக்தியும் அதிகம். கண் பார்வை நன்றாக அமைந்திருந்தாலும் நாய்களுக்கு நிறங்களை உணர முடியாது.

நாய்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் நம்முடன் வாழ்ந்து வந்தாலும் இன்றும் சில பழக்கங்களை மாற்றிக் கொள்ளாமல் பின்பற்றுகின்றன. இரையை அவசரமாக விழுங்குவது, எலும்பை மண்ணுக்குள் புதைத்து வைப்பது, மரம், தந்திக் கம்பம், சுவர் முதலியவற்றின் மீது சிறுநீர் கழிப்பது போன்றவை காடுகளில் ஓநாய்களாக இருந்தபோது உண்டாகிய பழக்கங்கள்.

நாக்கை வெளியில் நீட்டி அதிலிருந்து நீர் வடிந்தபடி நாய் காட்சியளிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது ஏன் தெரியுமா? நம்மைப் போன்று நாய்களுக்கு வியர்ப்பதில்லை. உடலில் இருக்கும் அதிகப்படியான வெப்பம் நாவின் மூலம் வியர்வையாக வெளியேறுகிறது.

நாய் மகிழ்ச்சியுடன் இருக்கும்போது வால் இங்கும் அங்கும் ஆடும். பயம் ஏற்படும்போது இரு கால்களுக்கிடையில் வாலை மடித்துக் கொள்ளும். எதிரியிடம் சண்டையிடும்போது வால் நிமிர்ந்து நிற்கும்.

தாய், குட்டியை 63 நாட்கள்வரை வயிற்றில் சுமக்கும். ஒரு தடவைக்கு

எஸ். சுஜாதா





குறைந்தது நான்கு குட்டிகள் வரை போடும். சில நாய்கள் பத்துக்கு மேற்பட்ட குட்டிகளைக் கூட போடக் கூடியவை.

குட்டிகள் பத்து நாட்களில் கண் திறக்கின்றன. நான்கு முதல் எட்டு வாரம் வரை தாய்ப்பால் குடிக்கும். பிறகு சில காலம் தாயுடன் திரியும் குட்டி. ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சி பெற்று குட்டி போடும் நிலையை அடைந்து விடும். ஆரோக்கியமான சூழ்நிலைகளில் வளரும் நாய் இருபது ஆண்டுகள் வரை உயிர் வாழும். சாதாரணமாக பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளே உயிர் வாழ்கின்றன.

**ம**னிதனுக்குப் பல வழிகளில் நாய் உதவி செய்து வருகிறது. வீட்டைப் பாதுகாக்கிறது. வேட்டையாடும்போது மான் போன்ற பிராணிகளை மடக்குவது மற்றும் இறந்த பிராணிகளைத் தூக்கிக் கொண்டு வருவது போன்ற வேலைகளைச் செய்கிறது.

துருவப் பிரதேசங்களில் வாழும் நாய்கள் ஆபத்துகளில் மாட்டிக் கொண்ட மனிதர்களுக்கு உதவும் பணியையும் வண்டிகளை இழுக்கவும் செய்கின்றன.

பார்வையற்றவர்களுக்குச் சில நாய்கள் வழி நடத்திச் செல்ல உதவுகின்றன.

போலீஸ் நாய்கள் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் பணியில் பெரும் பங்கு வகிக்கின்றன.

துருவப் பிரதேச ஆராய்ச்சிகள் மற்றும் விண்வெளி ஆராய்ச்சிகளில் விஞ்ஞானிகளுக்கு உதவுகின்றன.

இன்று நாய் கண்காட்சிகள், பந்தயங்கள்கூட நடக்கின்றன.

**நா**ய் புத்திசாலி மட்டும் அல்ல. மிகவும் நன்றியுடைய பிராணி. ஒருமுறை உணவிட்டால் உடனே நண்பனாகி விடும்.

உடலமைப்பு, நிறம், பழக்கம் போன்ற விஷயங்களில் பல்வேறு வகை நாய்களும் வித்தியாசப்படுகின்றன.

அல்சேஷன், டாஷண்ட், டால்மேஷியன், புல்டெரியர், புல்டாக், பாக்ஸ் டெரியர், பாக்ஸ் ஹவுண்ட், பாமரேனியன், ஆஸ்திரேலியன் டெரியர் போன்ற நாய்கள் பிரசித்திபெற்றவை.

தமிழ்நாட்டில் கோம்பை, இராஜபாளையம் என்ற இரு வகை நாய்கள் பிரபலமானவை.

கோம்பை தேனி மாவட்டத்தில் உள்ள பெரிய குளத்தைச் சுற்றி வளர்க்கப்படும் செந்நிற நாய்.

இராஜபாளையம் நாய் உயரமானது.

**நா**ய்களுக்கு உண்டாகும் சில நோய்கள் மனிதர்களையும் தாக்கக் கூடியவை. அதில் முக்கியமானது வெறி நாய்க்கடி.

வெறி பிடித்த நாய்களின் சுவாசம், எச்சில் மனிதர்களின் காயங்களில் பட்டால்கூட மனிதனுக்கு அந்த நோய் பரவும். வெறி நாய்க்கடிக்கு லூயி பாஸ்டியர் மருந்து கண்டுபிடித்தார்.



# பெலிகன் வரையுங்கள்!


கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் பெலிகன் கிடைத்து விடும்.

இறக்கை: Q3 →N6→N11→ M12→K11→ J11→J12→ L16

தலை மற்றும் கழுத்து: L18→J17→H17→ F15→G14→H14→G13→G12→I12→J13→ J14→H15→ K14

அலகு: B11→G12; B11→G14; B11→G13

வால்: N18→O19→R18→S19→W20→ V19→U19→W18→U17→ R17→S16→ S15




நன்றி: லிட்டில் ஆர்க்




முதல் பரிசு
எம். மணிகண்டராமன்,
ஈத்தாமொழி,
குமரி மாவட்டம்.


இரண்டாம் பரிசு
பி. பிரகாஷ்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா பாலமந்திர் ஆண்கள்
உயர்நிலைப்பள்ளி,
சேலம்.



# ஓவியப் போட்டி முடிவுகள்




**மூன்றாம் பரிசு**
சி. ஜெ. திருமகள்,
ஆறாம் வகுப்பு,
கே.சி.ஏ.டி.சி.ஜி.எம். பள்ளி
சாத்தூர்.




**ஆறுதல் பரிசு**
வி. வைஷ்ணவி,
ஆறாம் வகுப்பு,
பாரதிய வித்யா பவன்,
கோவை.

டிசம்பர் கோகுலத்தில் மிக்கிமௌஸ் என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.

**ஆறுதல் பரிசு**
ஆர். தியாகராஜன்,
பதினோராம் வகுப்பு,
முத்தையா அழகப்பா
மெட்ரிகுலேஷன் பள்ளி,
கோட்டையூர்.





## இது யாருடையது?


கணித ஆசிரியை வகுப்பிற்குள் நுழைந்து பாடம் நடத்த ஆரம்பித்தார். திடீரென பேனாவைக் கையில் பிடித்தபடி சற்று கோபமாக, "இது யாருடையது?'' என்று கேட்டார். நாங்கள் பேனாவைத்தான் கேட்கிறார் என்று நினைத்துக் கொண்டு, "உங்களுடையது டீச்சர்" என்றோம். "பேனா என்னுடையதுன்னு நீங்க சொல்லித்தான் தெரியணுமா? இதை யார் இங்கே போட்டது?" என்றார். பயந்தபடி மெதுவாக எழுந்து பார்த்தோம். அங்கே என் தோழியின் செருப்பு இருந்தது. "டீச்சர் என்னோடதுதான்! பிரேயருக்குப் போகும் போது அவசரமாகக் கழற்றிப் போட்டு விட்டேன். திரும்ப எடுப்பதற்குள் நீங்க வந்துட்டீங்க" என்றாள். "முதலில் எடுத்துட்டுப் போ" என்றார் ஆசிரியை.


– எம். எஸ். உம்மு அம்மாரா,
இமாம் கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை.

## எப்படி நீந்தினான்?

ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். குற்றாலீஸ்வரன் சின்னஞ்சிறு

வயதிலேயே எப்படி கடலில் நீந்தி சாதனை படைத்தான் என்பதைப் பற்றிய பாடம். "குற்றாலீஸ்வரன் எப்படி நீந்தினான் என்றால்..." என்றபடி பாதியிலேயே நிறுத்தினார் ஆசிரியர். நாங்கள் புரியாமல் விழித்தோம். சிறிது இடைவெளி விட்டு, "குற்றாலீஸ்வரன் கடலில் நீந்துவது இருக்கட்டும். இப்ப ஒருத்தன் கனவுலகில் நீந்திக் கொண்டிருக்கிறான். எல்லோரும் பாருங்கள்'' என்றார். நாங்





கள் திரும்பிப் பார்த்து சிரிக்கும் வரைக்கும் அவன் தூங்கிக் கொண்டே இருந்தான். ஆசிரியர் மேஜை மீது பிரம்பால் தட்டவும் திடுக்கிட்டு விழித்தான்.


– பா. கவிதா, பத்தாம் வகுப்பு,
ஷ்ரைன் வேளாங்கண்ணி பள்ளி,
தி. நகர், சென்னை.

## லாபமா, நஷ்டமா?

கணித ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ''ஒரு பொருளை வாங்கிய விலையை விடக் குறைவாக

# எங்கள் பள்ளியில் நடந்தது!

விற்றால் நஷ்டம் வரும். அதிகமாக விற்றால் லாபம் கிடைக்கும். புரிந்ததா?" என்றார். எல்லோரும் தலையாட்டினோம். "சரி ஒரு பொருளின் வாங்கிய விலை ஐம்பது ரூபாய். விற்ற விலை நாற்பத்தி எட்டு ரூபாய். அப்ப என்ன கிடைக்கும்?" என்றார் ஆசிரியர். ஒரு குறும்புக்கார மாணவி எழுந்து, "விடை கிடைக்கும்" என்றாளே பார்க்க



## சுண்ணாம்பு எதற்கு?

லாம்! ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

**– சிவகண்மணி, நான்காம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப்பள்ளி, கருப்பம்புலம்.**

### இது எதற்கு?

தமிழ் ஆசிரியர், "இனிமேல் தமிழ் வகுப்பில் தமிழில் மட்டும்தான் பேச வேண்டும்" என்றபடி பாடம் நடத்தினார். இடையில் சாக்பீஸ் தீர்ந்து போய் விட்டது. ஒரு மாணவனை அழைத்து, "சுண்ணக்கட்டி வாங்கிட்டு வா" என்றார். பத்து நிமிடம் கழித்து வகுப்பிற்குள் நுழைந்தான் அந்த மாணவன். "சுண்ணக் கட்டி கொண்டு வர இவ்வளவு நேரமா?" என்றார் ஆசிரியர். "சார்! கண்ணாம்பு பாக்கெட்டை கடையில் இருந்து வாங்கிட்டு வர நேரமாயிடுச்சு" என்று கூறினான். "இது எதுக்கு? வெற்றிலை போடவா கேட்டேன்? எழுதுவதற்கு சுண்ணக் கட்டி அதாவது சாக்பீஸைக் கேட்டேன்" எனவும், "சார் இப்படி புரிகிற மாதிரி சொல்லியிருக்கலாமே" என்றான் அவன்.

**– கோ. பிரியா, பதினோராம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, பெரியதச்சூர்.**

# பெட்டியில் நடந்த திருமணம்!

அயோத்தி அரசன் அஜனுக்கும் இந்துமதிக்கும் மகனாகப் பிறந்தவர் தசரதர். எட்டு திசைகளோடு ஆகாயம், பாதாளம் சேர்த்து பத்து திசைகளிலும் ரதம் ஓட்டிச் சென்று வெற்றி பெற்றதால் (தசம் - பத்து) தசரதர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்.

கோசல ராஜன் மகள் கௌசல்யையை தசரதருக்கு மணம் பேசி முடித்தார் அஜன்.

இலங்கையை ஆண்டவன் இராவணன். அவனது சபைக்கு நாரதர் வந்தார். இராவணன் அவரை ஆர்ப்பாட்டமாக வர வேற்றான்.

இராவணனது கொடுமைகளுக்கு ஒரு முடிவு கட்டத் தீர் மானித்தார் நாரதர்.


"இராவணா! தோற்றவர்களின் முதுகில் மிதிப்பது வீரமா? நெஞ்சில் மிதிப்பது வீரமா?" என்று கேட்டார்.

எதுவும் புரியாத இலங்கேஸ்வரன், "சொல்வதை திருத்தமாகச் சொல்லும்" என்றான்.

"கேட்டதற்குப் பதில் சொன்னால் புதிர் விடுபடும்" என்று நாரதரும் விட்டுக் கொடுக்காமல் பேசினார்.

"சே, முதுகில் மிதிப்பவன் கோழை" என்றான் இராவணன்.

"நீ வீராதி வீரன் என்பது உலகறிந்த விஷயம். இந்திரனின் சிம்மாசனத்திற்கு ஏழு படிகள். உனக்கோ நவக்கிரகங்களே படிகள். உன்னிடம் தோற்று உனது அடிமைகளாய் தொண்டு செய்கிறார்கள். இவர்களை முதுகில் மிதித்து ஏறுவது வீரத்துக்கு இழுக்கல்லவா? நெஞ்சில் மிதித்து ஏறுவதல்லவோ புகழ்!" என்று வஞ்சகமாய்ப் புகழ்ந்தார்.



இராவணன் உடனே, "நவக்கிரகங்களே! திரும்பிப் படுங்கள்" என்று கர்ஜித்தான். நவக்கிரகங்கள் பயந்து கொண்டே திரும்பிப் படுத்தன.



'நாரதர் கலகம்' என்று சும்மாவா சொன்னார்கள்! என்று முணுமுணுத்தான் சூரியன்.

"நம் துன்பம் அவருக்கெப்படித் தெரியும்?" என்று வெறுப்புடன் பதிலளித்தான் சந்திரன். மற்றவர்கள் விரக்தியில் பேசவே இல்லை.

கர்வத்தோடு நவக்கிரகங்களின் நெஞ்சில் மிதித்து ஏறினான் இராவணன். சனியின் பார்வை இராவணன் மீது விழுந்தது கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி விடைபெற்ற நாரதர் நேரே அயோத்தி சென்றார்.

பிரம்மாவை வரவழைத்தான் இராவணன். பிரம்மா இராவணனின் பாட்டன்.

ஆர். பொன்னம்மாள்

"தாத்தா! எல்லோருடைய தலையிலும் எழுதுபவர் தாங்கள். என் தலையில் யாரால் மரணம் என்று எழுதி இருப்பீர்கள்! ஒளிவு மறைவு இல்லாமல் அதை இப்போதே உங்களது ஞானக்கண்ணால் பார்த்துச் சொல்ல வேண்டும்" என்றான் இலங்காதிபன்.

பிரம்மா படித்தார். பிறகு, "இராவணா! நாளை மறுநாள் அயோத்தி இளவரசன் தசரதனுக்கும் கோசல ராஜகுமாரி கௌசல்யைக்கும் திருமணம் நடக்கப் போகிறது. அவர்களுக்குத் திருமாலே மகனாகப் பிறப்பார். அந்த மானிட தெய்வமே உன் மரணத்தை ஏற்படுத்துவார்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

இராவணன் திருமணத்தை நடக்காமல் நிறுத்தத் திட்டமிட்டான். தசரதனைக் கொன்று கௌசல்யையைத் தூக்கி வந்து அந்தப்புரத்தில் அடைக்கத் தீர்மானித்தான். அவளை அடைக்க ஒரு பெட்டியை புஷ்பக விமானத்தில் ஏற்றினான். நம்பிக்கையான ஒரு மாயாவி அசுரனையும் அழைத்துக் கொண்டு புஷ்பக விமானத்தில் புறப்பட்டான்.

**நா**ரதரை வரவேற்று மகன் திருமணச் செய்தியைச் சொன்னார் அஜன் மகாராஜா.

"வேந்தே! கல்யாணச் செய்தியை இராவணன் சொல்லக் கேட்டு பதறிப் போய் ஓடி வருகிறேன். 'கல்யாணம் எப்படி நடக்கிறதென்று பார்க்கிறேன்' என்று அவன் சூளுரைத்திருக்கிறான்" என்று கொக்கிப் போட்டார் நாரதர்.

அஜன் அமைச்சர்களுடனும் ஆன்றோர்களுடனும் கலந்து பேசினார். கோசல ராஜனையும் யோசனை கேட்டார். எல்லோரும் கலந்து பேசி ஒரு கப்பலில் தசரதரையும் அவரது நண்பர்களையும் ஏற்றுவதென்றும், மற்றொரு கப்பலில் கௌசல்யையும் அவள் தோழிகளும் செல்வதென்றும், பின்னர் ஒரு கப்பலில் அஜன், இந்துமதி குலகுரு வசிஷ்டர் மற்றும் முக்கியமானவர்கள் வருவதென்றும் ஏற்பாடானது. நடுக்கடலில் நங்கூரம் பாய்ச்சி கப்பல்களை நிறுத்தித் திருமணத்தை முடிப்பதென்று தீர்மானித்தனர்.

இராவணன் அயோத்திக்கும் கோசல நாட்டுக்கும் சென்று ஏமாற்றத்தோடு திரும்பி விடுவான் என்று கணக்கிட்டனர்.

நடுக்கடலில் மூன்று கப்பல்கள் நிற்பதைக் கண்ட இலங்காதிபன் மாயாவியை அனுப்பி பார்த்து வரச் சொன்னான்.

மாயாவி திரும்பி வந்து, "இராவணன் அயோத்தி சென்று ஏமாந்து போவான்" என்று தசரதர் தன் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்ததாக கப்பலைச் சுட்டிக்காட்டிக் கூறினான்.

இராவணன் ஆத்திரத்தோடு கீழிறங்கி அக் கப்பலைத் தகர்த்தான். இரவில் திசை தெரியாமல் தசரதரும் அவரது நண்பர்களும் நடுக்கடலில் தத்தளித்தனர். அடுத்து இன்னொரு கப்பலை நோக்கிச் சென்றான் இராவணன். மாயாவியும் உடன் சென்றான்.

**எ**ல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தனர்.


"மாயாவி! இந்த சப்ரமஞ்சக் கட்டிலில் உறங்கும் பெண்தான் மணப்பெண்ணாக இருக்க வேண்டும். இவளை உன் மாயா சக்தியால் பெட்டியில் அடைத்து விடு" என்று உத்தரவிட்டான்.

கௌசல்யையைத் தொடாமலே தன் மாயையால் புஷ்பக விமானத்தில் பெட்டியில் அடைத்தான் மாயாவி. ஒரு மலைத் தீவில் மாயாவி அரக்கனை இறக்கி, "இப் பெட்டியைக் காத்து வா. இதை இலங்கை கொண்டு சென்றால் வீண் பிரச்னை வரும்" என்று சொல்லிச் சென்றான் இராவணன்.

கப்பலின் உடைந்த பாகத்தைப் பிடித்துக் கொண்டு தசரதரும் அவரது நண்பர் சுமந்திரனும் பெட்டி இருந்த மலைத் தீவில் கரையேறினர்.

பெட்டியைக் காத்து வந்த அரக்கனுக்குப் பசியெடுத்தது. திமிங்கலமாகி கடலில் குதித்து பிணங்களைத் தின்று பசியாறினான். ஏற்கெனவே பிணங்களை வேட்டையாடிய திமிங்கலம் ஒன்று மாயாவித் திமிங்கலத்தோடு சண்டையிட்டது. சண்டை மும்முரத்தில் தீவிலிருந்து வெகு தூரம் போய் விட்டான்.

அனாதரவாய் இருந்த பெட்டியை தசரதரும், சுமந்திரனும் திறந்து பார்த்துத் திகைத்




**"பலாப்பழ வியாபாரி பையன் எப்படிப் படிக்கிறான்?"**
**" 'சுளை, சுளையாய்' மார்க் எடுக்கிறான்."**
**— பாளை பசும்பொன்**

தனர். கௌசல்யைக்கும் தான் எப்படி பெட்டிக்குள் அடைபட்டோம் என்று புரிய வில்லை!

பொழுது விடிந்தது.

சுமந்திரன், "இன்றுதான் உங்களுக்காகக் குறிக்கப்பட்ட மணநாள். இனி நாம் உதவிக் கப்பல் வந்து எப்போது ஊர் போய்ச் சேர் வோமோ? நீங்களிருவரும் காந்தர்வ முறைப் படி மோதிரம் மாற்றிக் கொள்ளுங்கள். ஊர் திரும்பியதும் விமரிசையாய் விழா நடத்திக் கொள்ளலாம்" என்றார்.

காட்டுப் பூக்களைத் தூவி சுமந்திரன் வாழ்த்த தசரதரும் கௌசல்யையும் மோதி ரம் மாற்றிக் கொண்டனர். பஞ்சபூதங்களை யும், எண் திசை அதிபர்களையும் பிரார்த்தித்து வணங்கினர்.

பின்னர் சில பழங்களைப் பறித்து உண்டு பசியாறினர். சுமந்திரன், "தசரதா! இளவரசி யைப் பெட்டியில் அடைத்தவன் அரக்கனா யிருக்கலாம். அவன் திரும்பி வந்து நம் இருவரையும் கண்டால் வெட்டித் தின்று விடுவான். இந்தப் பெட்டியை மூடினால் தானே பூட்டிக் கொள்ளும் தானியங்கிப் பெட்டி இது. நிறைய பழங்களை இதில் போட்டிருக்கிறேன். நாம் மூவரும் இதற்குள் தாராளமாக உட்கார முடியும்" என்றான். தசரதருக்கு அது தக்க யோசனையாகத் தோன்றவே கௌசல்யையுடன் உட்புகுந் தார். சுமந்திரரும் உள்ளே சென்றதும் மூடி யைத் தள்ளினர். பெட்டி பூட்டிக் கொண் டது.

திமிங்கலத்தைக் கொன்று பசி தீர்ந்த மாயாவித் திமிங்கலம் கரைக்கு வந்தது. பெட்டியைக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

இலங்கைக்கு வந்த இராவணன் பிரம் மாவை மறுபடி வரவழைத்தான். இடி இடித் தது போல் எக்காளமாகச் சிரித்தான்.

"தாத்தா! நீங்கள் எழுதிய விதியை நான் மாற்றி விட்டேன். கப்பலை உடைத்தேன். தசரதன் நடுக் கடலில் திமிங்கலத்துக்கு இரையாகி இருப்பான். ஜன சஞ்சாரமற்ற தீவில் பெட்டியில் அடைபட்டுக் கிடக் கிறாள் கல்யாணப் பெண். கல்யாணமே நடக்காத போது பிள்ளை எப்படி பிறக்கும்? எனக்கு இனி மரணமே கிடையாது" என்று கெக்கலித்தான்.

"திருமணம் எப்படி நடக்குமோ என்று கவலை அடைந்தேன். உன் உதவியால் சிறப்பாக நடந்தது" என்று சாவகாசமாகச் சொன்னார் பிரம்மா.

இராவணன் திகைத்தான். மலைத் தீவுக் குச் சென்று பெட்டியைத் தூக்கி வரும்படி ஏவலர்களை அனுப்பினான். பெட்டி வந்தது.

திறக்கச் சொன்னான். மூவரும் வெளி வந்தனர். ஒருவரை அடைத்த பெட்டியில் மூவரா என திகைத்தான்.


ஆத்திரத்தோடு அவர்களை வெட்ட கத்தியை ஓங்கினான். பிரம்மா அவனைத் தடுத்து, "இராவணா, நில். ஆத்திரத்தில் மரணத்தை வரவழைத்துக் கொள்ளாதே! பிறருக்கு இன்னல் விளைவிக்காமல் நீயும் சந்தோஷமாயிருந்து மற்றவர்களையும் வாழ விடு. மரணம் வரும் போது வரட்டும். குரு பகவானை தினம் பிரார்த்தித்துக் கொள். தசரதனுக்கு புத்திர பாக்கியம் தள்ளிப் போகும்" என்று சொல்லிச் சென்றார்.

இராவணன் சமாதானமாகி ஒரு கப்பலில் தசரதர், கௌசல்யை, சுமந்திரர் மூவரையும் அயோத்திக்கு அனுப்பி வைத்தான்.

இறந்து விட்டார்கள் என்று நினைத் தவர்கள் திரும்பி வந்தது கண்டு இருவரது பெற்றோரும் மனம் பூரித்து சிறப்பாக மண விழா நடத்தினர்.

மதிநுட்பமுள்ள நண்பன் சுமந்திரனை, தந்தைக்குப் பின் அரியணை ஏறிய தசரதர் முதல் அமைச்சராக்கிக் கொண்டார்.

இராவணன் தவமிருந்ததால் வெகுகாலம் புத்திரபாக்கியமில்லாதிருந்தார் தசரதர். பிறகு புத்திர காமேஷ்டி யாகம் செய்து ஸ்ரீராம, லட்சுமண, பரத சத்ருக்னர்களைப் புத்திரர் களாக அடைந்தார்.





"என்ன கோபமா இருக்கே?"

"பின்ன என்னம்மா, 'ஈ'க்கெல்லாம் மரி யாதை கொடுத்து ஈ-மெயில் வச்சிருக்காங்க. நம்ப சுறுசுறுப்புக்கு 'எறும்பு மெயில்' வெச்சி ருக்கலாம்ல!"


– எஸ். விஜயா சீனிவாசன்


சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!
அமைப்பு : விஜி
படம் : லலிதா
15
இருள் சூழ்ந்தது.
எவ்வளவு பெரிய பறவை!
ருக் பறவைகள் வந்து விட்டன. சீக்கிரம் கப்பலில் ஏறுங்க.
கப்பல் கிளம்பியது.
நல்ல வேளை தப்பித்தோம்.
அதோ பாருங்கள். பாறாங் கற்களை வீசுகின்றன.


கப்பல் ஆட்டம் கண்டது.
ஐயோ! இப்படி ஆடுதே கப்பல்.
என்ன செய்வது?


மிகப் பெரிய பாறாங்கல் ஒன்று கப்பலை உடைத்தது.
வம்பை விலைகொடுத்து வாங்கிவிட்டனர். எல்லோரும் சாகப் போகிறோம். எவ்வளவு கொடுமை?


மரக்கட்டையைப் பிடித்தபடி வந்த சிந்துபாத் ஒரு தீவில் ஒதுங்கினான்.


மறுநாள் காலை—
நான் மட்டும் தப்பிவிட்டேனா! அதோ! ஒரு கிழவர் உட்கார்ந் திருக்கார். நல்லவேளை மனிதர்கள் வசிக்கும் தீவிற்குத்தான் வந் திருக்கேன்.
எழுந்து நடந்தான்.
ஐயா! என் பெயர் சிந்துபாத். நீங்கள் எனக்கு உதவ வேண்டும்.
கிழவன் சைகையின் மூலம் தன்னை முதுகில் ஏற்றிக் கொண்டு அக்கரைக்குச் செல்லச் சொன்னான்.


சிந்துபாத் முதுகில் ஏற்றிக் கொண்டான். திடீரென—
ஐயோ! ஏன் இப்படி அடிக்கறே?
நாட்கள் சென்றன.
இந்தக் கிழவன் என்னை அடிமை ஆக்கிவிட்டானே! இவனிடமிருந்து எப்படி தப்பிப்பது?
ஒருநாள் கிழவன் திராட்சை ரசம் கேட்டான்.
இதுதான் சமயம். இந்தத் திராட்சை ரசத்தில் விஷ விதைகளைப் போட்டுக் கொடுத்துட வேண்டியதுதான்!
குடிச்சிட்டு மயங்கிட்டான்! அப்பாடி! இங்கேயிருந்து ஓடிடலாம்.
அப்போது—
— தொடரும்

# GOKULAM

The monthly magazine for children

## SPORTS DAY FUN

## CRYING WOLF — Short story

## OYSTERS AND PEARLS - In the wild



PUZZLES

SNIPPETS

PENPALS

AND LOTS MORE

February 2000

Rs. 6/-

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097

# வானமும் கடலும் நீலநிறமாக இருப்பது ஏன்?

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28 ஆம் நாளை தேசிய அறிவியல் நாளாகக் கடைபிடிக்கிறோம். தேசிய அறிவியல் நாள் சர்.சி.வி. ராமன் கண்டறிந்த ராமன் விளைவின் நினைவாக உருவாக்கப்பட்டது.

சி.வி. ராமனின் முழுப் பெயர் வெங்கட் ராமன். 1888 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்திலுள்ள மாங்குடி எனும் சிற்றூரில் பிறந்தார்.

இளம் வயதிலேயே ராமனுக்கு கல்வியின் மீதும் ஆராய்ச்சிகளின் மீதும் ஆர்வம் ஏற்பட்டது. அவரது தந்தையிடமிருந்த அறிவியல் நூல்களைக் கற்று அறிவை வளர்த்துக் கொண்டார்.

தாம் படித்த நூல்களில் இருக்கும் பரிசோதனைகளைச் செய்து காட்டுமாறு தந்தையிடம் கேட்பார். சில நேரங்களில் தாமே பல பரிசோதனைகளைச் செய்து பார்த்திருக்கிறார்.

பதினாறு வயதிலேயே சென்னை மாநிலக் கல்லூரியில் இயற்பியலை முதன்மைப் பாடமாக எடுத்துக் கொண்டு பட்டம் பெற்றார்.

கல்கத்தா, பர்மா, ரங்கூன், நாகபுரி என பல இடங்களில் பணியாற்றினார். ஆனால் இவர் மனம் விஞ்ஞான ஆராய்ச்சியையே நாடியது. 1917 ஆம் ஆண்டு கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

**வா**னமும் கடலும் நீலநிறமாகக் காட்சியளிப்பது ஏன் என்ற கேள்விக்கு இன்று நாம் சுலபமாகப் பதில் சொல்லி விட முடியும். இதைக் கண்டறிந்தவர் ராமன்தான்! ஒளிச் சிதறல் பற்றி ஏழு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தார்.

சூரியனின் ஒளிக்கதிர்கள் காற்றினூடே செல்லும் போது காற்றிலுள்ள மூலக்கூறுகளால் பிரிந்து சிதறுகின்றன. அப்படிச் சிதறும் போது அதன் ஒளியில் அடங்கியுள்ள எல்லா நிறக் கதிர்களும் சம அளவில் சிதறுவதில்லை. மற்றக் கதிர்களை விட நீல நிறக் கதிர்களே மிகுதியாகச் சிதறுகின்றன. எனவே நீலக் கதிர்கள் எங்கும் பரவி கடலையும் ஆகாயத்தையும் நீலநிறமாக்குகின்றன.




இந்த உண்மைக்கு 'ராமன் விளைவு' என்று பெயர்.

1930 ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு சி. வி. ராமனுக்கு வழங்கப்பட்டது. நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

1933 ஆம் ஆண்டு பெங்களூர் அறிவியல் கழகத்தின் தலைவரானார். 1949 ஆம் ஆண்டு 'ராமன் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்'டை நிறுவினார். அறிவியல் ஆராய்ச்சி நூல்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார்.

பல்கலைக்கழகங்களும் அறிவியல் கழகங்களும் பல பரிசுகளும் பட்டங்களும் அளித்து சிறப்பித்தன. ஆங்கில அரசு 'சர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1954 ஆம் ஆண்டு நமது அரசு 'பாரத ரத்னா' விருதை அளித்துப் பாராட்டியது.

இந்திய விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இன்றளவும் முன்னோடியாக விளங்கும் சி.வி. ராமன் 82 ஆம் வயதில் காலமானார்.

**— பா. மைதிலி, பத்தாம் வகுப்பு, மானாமதுரை.**

# திருவழுத்தான்

“**சா**க்லெட் கொடுத்தால்தான் பள்ளிக் கூடம் போவேன்” முதுகில் புத்தகப் பையை மாட்டிக்கொண்டு கோபிகா சொன்னாள்.

வயது ஆறு. இப்படித்தான் ஏதாவது சாக்கு வைத்து சீருடை, ஷூக்கள் மாட்டிக்கொண்ட பிறகு சண்டித்தனம் செய்வாள்.

“இதோ பாரு, கோபிகா. இப்படி எல்லாம் பிடிவாதம் பிடிக்கக் கூடாது. நல்ல பெண் நீ. உனக்கு சாக்லெட்தானே வேணும்? வாங்கி வைக்கிறேன். சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும், தரேன்” அம்மா சொன்னாள்.

“ஹும்” உறுமினார் தாத்தா. அவர் உறுமும் போது, கண்ணாடிக்குப் பின்னே கண்கள் பெரிதாகத் தெரியும். அக் கண்களைக் கண்டால், கோபிகாவுக்குப் பயம்.

தாத்தாதான் அவளையும், அண்ணா கோகுலையும் அழைத்துச் சென்று அடுத்த வீதியில் காலை மணி 8.40க்குச் சரியாக வந்து நிற்கும் பள்ளி பஸ்ஸில் பத்திரமாக ஏற்றி அனுப்புவார்.

நிமிர்ந்து தாத்தாவின் முகத்தைப் பார்த்த கோபிகா, முகத்தை உம் என்று வைத்துக் கொண்டு, லொங்கு லொங்கு என்று வாசலைப் பார்க்க நடந்தாள்.

**ப**டிகளில் இறங்கினாள். அப்போது அந்த அதிசயம் நிகழ்ந்தது. சின்ன எலுமிச்சம் பழம் அளவுக்கு ஒரு கோலி குண்டு உருண்டு வந்து அவளுடைய காலடியில் நின்றது.

லஞ்ச் கூடையை வைத்துவிட்டு குனிந்து அந்தக் கோலிகுண்டை எடுத்தாள். நீல நிறமான கோலி குண்டு அதனுள் அழகான, மலர்ந்த சின்ன ரோஜாப் பூ. வியப்போடு அந்தக் கோலிகுண்டை உள்ளங் கையில் வைத்துப் பார்த்தாள்.

அவளுடைய முகம் மீண்டும் வாடியது. ‘இந்த கோலிகுண்டு எதுக்கு? இதை வைத்து நான் விளையாடப் போகிறேனா? எனக்கு இப்போ சாக்லெட் வேணும்’ கையைத் தாழ்த்தி விரல்களிடையே கோலி குண்டை உருட்டினாள்.

ஆச்சர்யம்! டக் என்று லஞ்ச் கூடையுள் ஓசை. பார்த்தாள். சாக்லெட். ஊதா நிறக் காகிதம் சுற்றிய சாக்லெட். கை அகல சாக்லெட்.

எடுத்து கோகுலிடம் தந்



தான். "ஏது?" வியப்போடு கேட்டான்.

"கொடுத்தால் வாங்கிக்க. ஏது, என்னன்னு கேட்காதே" என்றாள் அவனிடம்.

ஸ்கர்ட்டின் வலது பையுள் கோலிகுண்டைப் போட்டுவிட்டு, இன்னொரு சாக்லெட்டை எடுத்துக்கொண்டாள்.

பின்புறம் தாத்தா வந்து விரட்டினார். "புறப்படு, புறப்படு. பஸ்ஸுக்கு நேரமாச்சு" என்று சொல்லியபடி முன்னால் நடந்தார்.

கோபிகா தொடர்ந்தாள். நடக்கும்போதே, சாக்லெட்டின் காகிதங்களைப் பிரித்து எறிந்தாள். வில்லை வில்லையாகச் சேர்ந்து இருந்த சாக்லெட்டைக் கடித்துச் சுவைத்தாள்.

அவள் தயங்கியபடி நடந்து வருவதை உணர்ந்த தாத்தா, நின்று திரும்பினார். "என்ன தின்னறே?" கேட்டார்.

"சாக்லேட்."

"சாக்லேட்டா! ஏது?" வியப்புடன் கேட்டார்.

"கோலிகுண்டு கொடுத்தது."

"கோலிகுண்டா?"

"ஆமா. கோலிகுண்டு" உதடுகளை நாவால் தடவிக் கொண்டாள்.

"கோலிகுண்டு சாக்லெட் கொடுத்ததா?"

"ஆமா. கோலிகுண்டு சாக்லெட் கொடுத்தது"

"கோலிகுண்டு எப்படி சாக்லெட் கொடுக்கும்?"

"ஆமா. கோலிகுண்டு எப்படி சாக்லெட் கொடுக்கும்?"

தாத்தா குழம்பிப் போனார். நடந்தார். கோபிகாவும் கோகுலும் தொடர்ந்தனர்.

# கோலிகுண்டு கோபிகா!



**ப**ள்ளி பஸ்ஸில் வழக்கம் போலக் கூட்டம். பெரிய மாணவர்கள் சிறுவர்களுக்கு உட்கார இடம் தர வேண்டாமோ? அப்படியான பழக்கம் எல்லாம் இந்த பஸ்ஸில் கிடையாது. மாணவர்களில் சிலர் உட்கார்ந்து கொண்டு, பக்கத்து இருக்கையில் தங்கள் புத்தகப் பையை வைத்துக்கொண்டு விடுவார்கள். அடுத்த நிறுத்தத்தில் அவர்களுடைய நண்பர்கள் ஏறி அமர, ரிஸர்வ் செய்து வைத்திருக்கிறார்கள். கேட்பார் கிடையாது. பாவம், கீழ் வகுப்பு சிறுவர், சிறுமியர் இருக்கைகளின் சாய்மானத்தைப் பிடித்துக் கொண்டு நிற்பர். பஸ்ஸின் கண்டக்டரும் கண்டு கொள்ள மாட்டார். ஏறுபவர்களை உள்ளே தள்ளுவதும், இறங்குபவர்களை அவசரமாக வெளியே தள்ளுவதும்தான் தன் வேலை என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தார்.

பஸ்ஸில் ஏறிய கோபிகா உட்கார இடம்

கிடைக்குமா என்று சுற்று முற்றும் பார்த்தான். ஒரு பையன் தன் நண்பனுக்குப் பக்கத்து இருக்கையை ரிஸர்வ் செய்திருந்தான். பஸ் புறப்பட்டது.

"பையை எடு. நான் உட்காரணும்" என்றாள் கோபிகா அவனிடம்.

முறைத்துப் பார்த்தான். இந்தச் சின்னப் பெண் தன்னை அதிகாரம் செய்வதாவது என்பதாக இருந்தது அவன் பார்வை.

"எடுக்கப் போறியா, இல்லையா?"

பேசாமல், பஸ் ஜன்னலுக்கு வெளியே பார்த்தான்.

ஸ்கர்ட் வலது பையுள் கையை விட்டாள் கோபிகா. கோலிகுண்டு விரல்கள் இடையே உருண்டது.

இரண்டு விநாடிகள் கழிந்திருக்கும். அந்தப் பையன் 'ஆ' என்று அலறி எழுந்தான். பின்புறத்தைத் தேய்த்து விட்டுக் கொண்டு, உட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தான். ஏதும் இல்லை.

அவன் காலி செய்த இருக்கையில் கோபிகா உட்கார முயன்றாள். உடனேயே அந்தப் பையன் அவளை ஒதுக்கிவிட்டு, மீண்டும் அந்த இடத்தில் உட்கார்ந்தான். உட்கார்ந்த அதே விநாடியில் அலறியபடி எழுந்தான். முகத்தில் வேதனை. அச்சத்தோடு கோபிகாவைப் பார்த்தான். கோபிகா உட்கார்ந்து கொண்டாள். பக்கத்து இருக்கையில் இருந்த அவனுடைய புத்தகப் பையைத் தூக்கி அவனிடம் மரியாதையோடு கொடுத்தாள்.

"இரு, இரு. உன் பின்னாலேயும் முள் நறுக்குன்னு குத்தும்" என்றான் எரிச்சலுடன்.

"குத்தாது" என்று கூறிய கோபிகா, நின்று கொண்டிருந்த ஒரு எல்.கே.ஜி. சிறுமியை அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டாள்.

**வீ**ட்டில் ஒரு பூனை வளர்ந்து வந்தது. அது பெயர் டிக்கி. கோகுலின் செல்லப் பூனை அது.

பூனையைக் கொஞ்சும்போது, கோகுல் அதனுடன் பேசுவது உண்டு. "என் கண்ணுக்கு என்ன வேணும்? பால் வேணுமா? பசிக்கிறதா?" என்பதாக எல்லாம் கேட்பான். அதன் பதிலை அவன் எதிர்பார்ப்பதில்லை. டிக்கியும் அவனுடன் உரசிக் கொண்டு, கோலிகுண்டு கண்களால் திருதிரு என விழிக்கும்.

அன்றைய மாலை நேரத்தில் விளையாடி விட்டு வந்த கோகுல், வீட்டு வாசல் படிகளில் களைப்போடு உட்கார்ந்தான். எங்கிருந்தோ டிக்கி மெதுவாக நடந்து வந்து அவன் அருகில் படுத்தது. இடது கையால் அதன் தலையைத் தடவினான்.



"இன்னிக்கு கிரிக்கெட்டுலே எத்தனை ரன் எடுத்தேன் தெரியுமா?" கோகுல் பூனையிடம் கேட்டான்.

உட்புறம் தரையில் உட்கார்ந்து வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருந்த கோபிகா, சட்டென்று கோலிகுண்டை எடுத்துக் கை விரல்களிடையே உருட்டினாள்.

பூனை கேட்டது, "எத்தனை ரன் எடுத்தாய்?"

"என்னது! நீயா பேசறே?"

"ஆமாம்! சொல்லு"

"முப்பத்தேழு ரன்" என்றான் கோகுல்.

"இது பிரமாதமாக்கும்? என்னவோ செஞ்சுரி அடித்தவன் போலப் பெருமை பட்டுக் கொள்கிறாயே!"

"உனக்கு என்ன தெரியும்! மத்தப் பசங்க எல்லாம் அதுகூட எடுக்கலே. நான் தான் அத்தனை ரன் எடுத்தேனாக்கும்!"

"பௌலிங் பண்ணி இருப்பாயே?"


"பண்ணினேன்."

"சோர்வுடன் சொல்கிறாய். எவரையும் அவுட் ஆக்க முடியவில்லையா?"

"ஒருத்தனைத்தான் அவுட் ஆக்க முடிஞ்சது"

"ஏன்? பௌலிங் பண்ணத் தெரியாதா?"

"தெரியாதான்னா கேட்கறே? ஒரு மாட்ச்சுலே ஆறு விக்கெட் எடுத்திருக்கேனாக்கும். இன்னிக்கு பேட் பண்ணினதுலே களைச்சுப் போயிட்டேன்.



அதனாலே பௌலிங்போது, ஒண்ணுக்கு மேலே விக்கெட் எடுக்க முடியலே."

அந்தச் சமயம், வெளியே போன அப்பா திரும்பி வந்தார். கோகுலின் பேச்சு அவருடைய காதுகளில் விழுந்திருக்க வேண்டும். நெருங்கி வந்து பார்த்தார். அவனும் பூனையும்தான் வாசல்படியில் உட்கார்ந்திருந்தார்கள்.

"யாரோடு பேசிக் கொண்டிருந்தாய்?" அப்பா கேட்டார்.

"பூனையோடு பேசிக் கொண்டிருந்தேன்."

அப்பா சிரித்தார். "அது என்ன சொல்லிச்சு?" கிண்டலாகக் கேட்டார்.

"எனக்கு நல்லா கிரிக்கெட் ஆடத் தெரியல்லேன்னு சொல்றது."

"பூனையா சொன்னது?"

"பின்னே இது என்ன நாயா?" பூனையைக் காட்டி கோகுல் சொன்னான்.

கோகுலை அப்பா ஒரு மாதிரியாகப் பார்த்தார். நெற்றியில் கை வைத்துப் பார்த்து, "உன் உடம்புக்கு ஒண்ணும் இல்லையே?" என்று கேட்டார்.

அப்பாவின் கையை கோகுல் தட்டி விட்டான்.

"சரி, சரி. நேரமாச்சு. போய் படி." என்று அவனிடம் சொல்லிவிட்டு, அப்பா வீட்டினுள் வந்தார்.

அவர் வந்ததைக் கவனிக்காதது மாதிரி கோபிகா சிரிப்பை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, வீட்டுப் பாடம் செய்வதில் முனைப்பாக இருந்தாள்.

இரவு மணி 9.30. படுக்கும் நேரம். அறையுள் கோகுல் கட்டிலில் படுத்து உறங்கி விட்டான்.

"கோபிகா" அம்மா அழைத்தாள்.

"வந்து பால் சாப்பிட்டு விட்டுப் போ."

"வேணாம்."

"பால் சாப்பிட முதற்கொண்டு தினமும் இவளோடு மல்லுக்கு நிற்கணும்" என்று கூறியபடி, அம்மா பால் டம்ளரை எடுத்துக்கொண்டு அறைக்கு வந்தாள்.

அறையில் கோபிகாவைக் காண வில்லை. அறையுள் சுற்று முற்றும் அம்மா பார்த்தாள். குனிந்து கட்டிலுக்கு அடியில் நோக்கினாள். அவளைக் காணவே காணோம். பின் எங்கிருந்து பதில் குரல் கொடுத்தாள்?

"கோபிகா, எங்கேடி இருக்கே?" கடுப்புடன் அம்மா கூவினார்.

"இங்கே"

"இங்கேன்னா எங்கே?"

"இப்படி மேலே பாருங்க."

அம்மா நிமிர்ந்து பார்த்தாள். மின் விசிறி ஓடிக் கொண்டிருந்தது. அதுக்கும் மேலே, அறையின் மூலையில் கோபிகா அந்தரத்தில் படுத்து, தலைக்கு உள்ளங்கையை முட்டுக் கொடுத்த நிலையில் இருந்தாள்.



''உனக்குத் தெரிந்த புதிய இடங்கள் இரண்டு சொல்லு!''

''நியூ'யார்க், 'நியூ'சிலாந்து!''

– கங்கா கணேசன்

அம்மாவின் முகத்தில் பீதி.

"அங்கே என்னடீ பண்ணறே?"

"படுத்துக் கொண்டு இருக்கறேன்."

"எப்படி அங்கே போனே?"

"ஒரு ஜம்ப் பண்ணினேன். இங்கே வந்துட்டேன்."

அம்மா அலறினாள். "ஐயோ! இங்கே வாங்களேன்! வந்து இந்தப் பெண்ணைப் பாருங்களேன்!" கை டம்ளரில் பால் ததும்பிக் கொட்ட, அம்மா அறையை விட்டு ஓடினாள்.

''என்ன, என்ன?'' என்று கேட்டு, தாத்தா, பாட்டி, அப்பா மூவரும் பரபரப்புடன் வந்தனர்.

"இந்தப் பெண் பண்ணற கூத்தைப் பாருங்க."

"எந்தப் பெண்?" அப்பா கேட்டார்.

"கோபிகாதான்."

"என்ன பண்ணறாள்?"

"உயரே அறை மூலையிலே படுத்துக் கொண்டு இருக்காள்."

பெரியவர்கள் மூவரும் ஏதும் பேசவில்லை. சற்றுநேரம் அம்மாவின் முகத்தைப் பார்த்தபடி இருந்திருக்க வேண்டும் என்று கோபிகா நினைத்துக் கொண்டாள்.

"என்ன சொல்றே? கோபிகா அறை உயரே மூலையிலே படுத்துக்கொண்டு இருக்காள்னா சொல்றே? அது எப்படி சாத்தியம்?'' தாத்தா கேட்டார்.

''படுத்துக்கொண்டு இருக்காளே!'' அம்மா சொன்னாள்.

"எங்கே, பார்க்கலாம்'' என தாத்தா சொல்லவும், நால்வரும் அறையுள் நுழைந்தனர்.

அவர்கள் பார்த்தபொழுது, அறையுள் கட்டிலில் கோபிகா, கோகுல் அருகில் அழகாகப் படுத்துக்கொண்டு கண்களை மூடியபடி இருந்தாள்.

''குழந்தை தூங்கறாளே'' என்றார் பாட்டி.

"ஆமா" என்றார் தாத்தா.

அம்மாவின் முகத்தை அப்பா ஒரு மாதிரியாகப் பார்த்தார். "உனக்கு என்ன ஆச்சு?" என்று கேட்டார்.

''இப்பத்தான் உயரே இருந்தாள். எப்போ இறங்கி கட்டிலுக்கு வந்து படுத்துக் கொண்டாள்?" அம்மா தடுமாறினாள்.

''இங்கே என்னவோ நடக்கறது. என்னன்னு புரியலே. கோகுல் பூனையோடு பேசிக் கொண்டு இருந்தேங்கிறான். நீயோ கோபிகா உயரே படுத்துக் கொண்டு இருந்தாள் என்கிறே!'' அப்பா கூறினார்.

"ஆமா. எனக்கும் புரியலே. காலைலே பஸ்ஸுக்குக் கூட்டிக் கொண்டுபோகும் போது, கோபிகா சாக்லெட் தின்று கொண்டு வந்தாள். ஏதுன்னு கேட்டேன். கோலிகுண்டு கொடுத்ததுன்னு சொன்னாள். என்னவோ நடக்கிறது. எனக்கும் புரியலே'' என்றார் தாத்தா.

மறுநாள் காலையில் படுக்கையிலிருந்து எழுந்ததும் கோபிகா தலையணைக்கு அடியில் கைவிட்டுத் தேடினாள். தட்டுப்படவில்லை. தலையணையைத் தூக்கிப் பார்த்தாள். காணோம். கோலிகுண்டு போயே போய்விட்டது. வந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டிருந்தது.

ரொம்ப வருத்தமாகப் போயிற்று அவளுக்கு. 'கோலிகுண்டைப் பார்த்தீர்களா?' என்று கேட்கலாம் என்றால், எந்தக் கோலிகுண்டு, ஏது கோலிகுண்டு, உனக்கு எங்கிருந்து கிடைத்தது என்பதாக எல்லாம் கேள்வி எழும். அதனால் அதைப் பற்றி யாரிடமும் அவள் மூச்சு விடவில்லை.

அல்லது கோலிகுண்டு வந்து போனது கனவோ என்றுகூட நினைத்துப் பார்த்தாள். இல்லையே! நேற்று நடந்தது எல்லாம் நிஜம் போலவே இருந்தது.

அன்று பள்ளி பஸ்ஸில் கோபிகா ஏறிய போது, அந்தப் பையன் அவள் உட்கார சட்டென்று எழுந்து இடம் தந்தான்.

# உங்கள் நூலகம்

# நாணயம் மாயமாக மறைந்தது எப்படி?

**ஸ்**வேதா, குமாரின் வீட்டுக்குள் நுழைந்தாள். அப்போது "இந்த நாணயத்தை மாயமா மறையச் செய்யப் போறேன்" என்று விமல், துர்காவைப் பார்த்துக் கூறிக் கொண்டிருந்தான் குமார்.

"ஏய், விமல், துர்கா என்ன பண்றான் குமார்?" என்றாள் ஸ்வேதா.

"மாஜிக் செய்துக்கிட்டிருக்கேன். நீயும் உட்கார்ந்து பார்" என்றான் குமார்.

"அட, நாணயம் மாயமா மறைஞ்சுருச்சே! என்ன பண்ணின சொல்?" என்றார்கள் ஸ்வேதாவும் விமலும்.

"அதெல்லாம் என்னோட தொழில் ரகசியம். யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்."

"ரொம்ப பிகு பண்ணாதே குமார். நீ வச்சிருக்கும் புத்தகத்தைப் படிச்சா எங்களுக்கும் விஷயம் புரிஞ்சிடப் போகுது" என்றாள் துர்கா.

"என்ன புத்தகம்? யார் வாங்கினது?" என்றாள் ஸ்வேதா.


"நேற்று நானும் குமாரும் புத்தகக் கடைக்குப் போனோம். அப்ப வாங்கினது தான் இந்த 'மந்திரமா தந்திரமா?' புத்தகம். அதைப் படிச்சிட்டுதான் இவன் மாஜிக் காட்டறான்" என்றாள் துர்கா.

"இதோ பார் ஸ்வேதா. தமிழ்நாடு அறிவியல் இயக்கத்திலிருந்து இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்காங்க. மந்திரம், மாயம் என்ற பெயரில் சிலர் நம்மை எப்படி மோசடி செய்யறாங்கன்னு இப்பத்தான் எனக்குப் புரிஞ்சது. மாஜிக் எப்படியெல்லாம் செய்யலாம் என்பதையும் அதற்கான அறிவியல் அடிப்படையிலான விளக்கத்தையும் இந்தப் புத்தகம் விளக்குது. சுலபமான பல மாஜிக்குகளை நாமே செய்து காட்டலாம். படவிளக்கமும் இருக்கு" என்றான் குமார்.

"இதை வச்சிக்கிட்டு கொஞ்ச நேரத்தில் கலக்கிட்டியே! சரி, நான் 'தப்பி ஓடிய வர்கள்' என்ற புத்தகத்தைப் படிச்சேன்"- ஸ்வேதா.

"என்னது! உன்னை மாதிரி ஆட்களிடம் இருந்து தப்பியவர்கள் பற்றிய செய்தியா?"

"குமார், கிண்டல் பண்ணினே புத்தகத்தைக் கண்ல



கூட காட்ட மாட்டேன். சத்திரபதி சிவாஜி, நேதாஜியிலிருந்து வரலாற்றுப் புகழ்பெற்ற தப்பிய ஓடிய 23 நபர்களைப் பற்றிய புத்தகம். ஒவ்வொருத்தரின் விஷயமும் ஒவ்வொரு விதத்துல விறுவிறுப்பா இருக்கு. சொல்ல மறந்துட்டேன். இதை எழுதியவர் நம்ம வாண்டுமாமாதான்!"

"நான் கூட பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டிருக்கிற விஞ்ஞானிகளைப் பற்றிய புத்தகங்களை வாங்கினேன்.

ஆனால் மைக்கேல்ஃபாரடே புத்தகத்தை மட்டும் தான் படிச்சேன். மற்றவற்றைப் பற்றி அப்புறம் சொல்றேன். சுருக்கமா சொல்லணும்னா சுரங்கத் தொழிலாளர் களுக்குப் பாதுகாப்பான விளக்கைக் கண்டுபிடிச்ச ஃபாரடேயின் வாழ்க்கை வரலாறும் போர் அடிக்காமல் ஒளி வீசுது" என்றான் விமல்.

"ஆமாம் துர்கா, பாண்டிச்சேரியி லிருந்து உங்க சித்தப்பா என்ன வாங்கிட்டு வந்தார்?"

"அரிமதி தென்னகன் எழுதிய மழலை யர் கதைப் பூங்கா புத்தகத்தை வாங்கிட்டு வந்தார். இதன் ஆசிரியரும் பாண்டிச் சேரிக்காரர்தான்! இதுல 60 குட்டிக் கதைகள் இருக்கு. ஒவ்வொரு கதைக்கும் ஒரு முழுப்பக்கப் படம். இது மத்திய அரசின் (NCERT) பரிசைப் பெற்றிருக் கிறது" என்றாள் துர்கா.

"விமல், ஸ்வேதா, துர்கா சீக்கிரம் வாங்க! அடுத்த மாஜிக்கைக் காட்டறேன்" என அழைத்தான் குமார்.

"நீ ஒண்ணும் காட்ட வேண்டாம். நாங்களே படிச்சு செய்து பார்த்துக்கு வோம்" என்று ஸ்வேதா சொல்ல விமலும் துர்காவும் ஆமாம் போட்டனர்.


— ரே

* மந்திரமா தந்திரமா? தொகுப்பு அ. வள்ளிநாயகம், த.வி. வெங்கடேஸ்வரன், ஏ.எஸ்.சூரியகாந்தம், பக்.112, ரூ.28/- அறிவியல் வெளியீடு, காமராசர் நகர், திருவான்மியூர், சென்னை – 41.

* தப்பி ஓடியவர்கள், வாண்டுமாமா, பக்.140, ரூ. 35/-, கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளன் தெரு, தி.நகர், சென்னை – 17.

* அறிவியல் அறிஞர் மைக்கேல் ஃபாரடே, தி. க. கலியபெருமாள், பக். 80, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14.

* மழலையர் கதைப் பூங்கா, அரிமதி தென்னகன், பக். 135, ரூ. 30/- இலக்குமி நிலையம், 53, கௌடியாமடம் சாலை, சென்னை – 14.






## கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ................................................................................................

முகவரி : ................................................................................................

................................................................................................

................................................................................................

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :


**சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)**
**47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.**


# புறாக்கள்

ஆழி

உலகெங்கும் உள்ள புறாக்களில் ௨௮௯ இனங்கள் இருக்கின்றன. இவை அனைத்தும் 'கொலம்பிடே' என்னும் பறவை இனத்திலிருந்து உருவானவை.

சிலவகை புறாக்கள்:







கூடு கட்டுவதற்கு
ஆண் புறா
குச்சிகளைக்
கொண்டு வந்து
சேர்க்கும். பெண் புறா
கூடு கட்டும்;
ஏப்ரல் மாதத்தில்
முட்டைகள் இடும்!
ஆனால்,
ஆண் புறாதான்
அடை காக்கும்!




'ஸ்டோக் டவ்' என்னும் செந்நிறப் புறாக்களுக்குக் கூடுகட்டத் தெரியாது! மரப் பொந்துகளிலும் மற்ற பறவைகளின் கூடுகளிலும் அணில்கூடுகளிலும் முட்டையிடும்!




'ராக் டவ்' என்னும் மலைப்புறா அதிக முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இது வீடுகளிலும் வளர்க்கப் படுகிறது. இது செங்குத்தான பாறைகளில்கூட கால்களை ஊன்றிப் பற்றிக்கொண்டு நிற்கும்! இதைச் 'சுவரொட்டிப் புறா' என்றும் சொல்வார்கள்.




புறாக்கள், தாங்கள் தின்று, பாதி செரித்த இரையை மீண்டும் வாய்க்குக் கொண்டுவந்து குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றன! இந்த இரைக்குப் 'பீஜியன் மில்க்' என்று பெயர்.




ஒரு ஜோடிப் புறாக்களில், ஆணோ பெண்ணோ இறந்துவிட்டால்தான் அது வேறு புறாவுடன் ஜோடி சேரும்! தவிர, வீட்டில் வளர்க்கப்படும் ஒரு புறா, வழிதவறிப் போனாலும் பல நாட்களுக்குப் பிறகும் திரும்பி வந்துவிடும்!




புறா இனங்களில் வேகமாகப் பறக்கக் கூடியது 'ஹோமிங் பீஜியன்' என்னும் புறா., முன்பெல்லாம் செய்தி அனுப்புவதற்கு இந்தப் புறாக்களைத்தான் பயன்படுத்துவார்கள். செய்திகளை மெல்லிய காகிதத்தில் எழுதிச் சுருட்டி இவற்றின் கால்களில் கட்டி அனுப்புவார்கள்.




புறாக்களுக்குத் திசைகள் பற்றிய உணர்வுகள் அதிகம். இரை தேடி எவ்வளவு தூரம் பறந்து சென்றாலும் சரியாகத் தன் கூட்டுக்குத் திரும்பி வந்துவிடும்! புறாக்களின் தலையில் காந்த சக்தி இருப்பதால்தான் சென்ற வழிகளைத் தெரிந்து கொள்கின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள்!




வீட்டுப்புறாக்கள் பறக்கும் வேகம் மணிக்குச் சுமார் 65 கி.மீ. ஆனால், இவை ஒரே சமயத்தில் எங்கும் தங்காமல் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்களுக்கு மேல் பறக்கக்கூடியவை.




புறாக்கள் சோர்வில்லாமல் பறப்பதற்குக் காரணம் என்ன? ஒரு புறாவின் மொத்த எடையில் கால் பகுதி அதன் மார்பில் இருக்கிறது! தவிர, இறக்கைகளைத் தாங்கி நிற்கும் வலுவான தசைகளும் காரணம்.



பறவைகளில் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கக் கூடியது புறா மட்டும்தான்! புறா இரை, தண்ணீர் இல்லாமல் 10 நாட்கள் வரை உயிர் வாழும்! புறாக்களின் ஆயுள் 15 முதல், 20 ஆண்டுகள்!





அமெரிக்காவில், 1845-ஆம் ஆண்டு, ஒரு புறா 5400 மைல்கள் ( 8440 கி.மீ.) தூரம் பறந்தது ஒரு சாதனை. ஆனால், அதன் இருப்பிடத்தை அடைவதற்கு 1 கி.மீ. தூரம் இருக்கும்போதே அது இறந்து விட்டது!

உலகிலேயே மிக அதிகமான விலைக்கு விற்கப்பட்ட புறா இதுதான். இதன் விலை ரூ.32 லட்சம்! இதை வாங்கியது பந்தயப் புறாக்களை வளர்த்துப் பயிற்சி யளிக்கும் பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று. இந்தப் புறா, பல போட்டிகளில், சுமார் 21000 பந்தயப் புறாக்களை வென்றிருக்கிறது!

பந்தயப் புறாக்களை வளர்ப்பவர்களுக்கு ஒரு சங்கம் இருக்கிறது. அவர்கள், புறாவின் கால்களில் அடையாள வளையங்களை மாட்டியிருப்பார்கள்.

அக்பர் சக்கரவர்த்தியிடம் 20,000 புறாக்கள் இருந்தன! அவற்றில் கடிதங்களைக் கொண்டு செல்வதற்காக 12,000 புறாக்களைப் பழக்கி வைத்திருந்தார் அவர்!





புறாவின் எதிரி வல்லூறு. அது புறாவைப் பிடித்து அதன் வயிற்றைக் கிழித்துக் கொன்று தின்று விடும்! வல்லூறுவின் மற்றொரு பிரிவான 'பைரி'யும் அதன் எதிரிதான்.



வட அமெரிக்காவில், 'பயணப் புறா' என்று ஓர் இனம் சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு ஏராளமாக இருந்தது. இப்போது முற்றிலுமாக அழிந்துவிட்டது! கடைசியாக இருந்த ஒரே ஒரு பயணப்புறாவும் 1914-இல், வட அமெரிக்கா சின்சினாட்டி மிருகக் காட்சிச் சாலையில் இறந்துவிட்டது. அப்போது அதன் வயது 26. அதன் படம்தான் இது:

# மன்னனே சிறந்த முட்டாள்!

எம். மல்லிகா

கோமேதக நாட்டின் மன்னர் மகுடபதிக்கு திடீரென ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

அந்தச் சந்தேகம் இரண்டு கேள்விகளாக உருபெற்று அவர் மனத்தை அரிக்கத் தொடங்கியது.



'இந்த உலகில் உயர்ந்தவர் யார்?'

'இந்த உலகில் சிறந்த முட்டாள் யார்?'

இவைதான் அவர் மனதை நெருடிக் கொண்டிருந்த இரண்டு கேள்விகள்.

இந்தக் கேள்விகளுக்கு விடை காண்பது எப்படி?

யோசிக்கத் தொடங்கினார் மன்னர்.

அதன் விளைவு –

ஊரெங்கும் முரசு ஒலிக்கப்பட்டது.

"நாளை மக்கள் சபை கூடும். மன்னரின் இரண்டு கேள்விகளுக்கும் சரியாக யார் பதிலளிக்கிறார்களோ அவருக்கு இளவரசி தெய்வானையை மணம் முடித்துத் தரப்படும். இது அரசர் ஆணை."

கூடியிருந்த கூட்டம் முரசு ஒலிப்பவனின் இந்த அறிவிப்பைக் கேட்டு வியந்து நின்றது.

இளவரசியை மணந்து கொள்ள யாருக்குத்தான் ஆசையிருக்காது?

மறுதினம் பலர் அரச சபைக்குச் செல்லத் தங்களைத் தயார்படுத்திக் கொண்டனர்.

மறுநாள்.

அரச சபை கூடியது.

அமைச்சர் எழுந்தார்.

அரியணையில் அமர்ந்திருந்த மன்னர் மகுடபதியையும் மகாராணியையும் அவர்களுக்கருகே அமர்ந்திருந்த இளவரசி தெய்வானையையும் வணங்கிவிட்டு கூட்டத்தைப் பார்த்துப் பேசினார்.

"அரசர் மனத்தில் இரண்டு கேள்விகள் உள்ளன. உலகில் உயர்ந்தவர் யார்? இது முதல் கேள்வி. உலகில் சிறந்த முட்டாள் யார்? இது இரண்டாம் கேள்வி. முதல் கேள்விக்குச் சரியான பதிலைச் சொல்பவர் அடுத்த கேள்விக்குப் பதில் கூற அனுமதிக்கப்படுவர். இரண்டு கேள்விகளுக்கும் சரியான பதில் சொல்பவருக்கு கேட்கும் பரிசுகள் தரப்படும். தவிர இளவரசி தெய்வானையையும் மணம்முடித்துத் தரப்படும்..."

சொல்லிவிட்டு அமைச்சர் அமர்ந்தார்.

போட்டி தொடங்கியது.

வரிசையாகப் பலர் மன்னரின் கேள்விக்குப் பதில் சொல்லத் தொடங்கினர்.

ஊஹூம்!

எந்தப் பதிலும் மன்னருக்குத் திருப்தி அளிக்கவில்லை.

அப்போது -

இடையில் முழங்கால் அளவு உடையுடன், சட்டையின்றி கரத்தில் நீண்ட கம்புடன் மன்னரின் முன்னே வந்து நின்றான் ஒருவன்.

"அரசே, வணக்கம்! ஆயர்பாடி ஏழை இளைஞன் நான். என் பெயர் வீரபத்ரன். நான் தங்கள் கேள்விக்குப் பதில் கூறலாமா?"


தயக்கத்துடன் கேட்டான் வீரபத்ரன்.

"எல்லா குடிமக்களும் எனக்கு ஒன்றே. உன் பதிலை தயங்காமல் சொல்" என்றார் மன்னர்.

"நன்றி மன்னா" என்ற வீரபத்ரன், "இந்த உலகில் உயர்ந்தவர் தாய்தான்" என்றான் நிதானமாக.

"விளக்கம் தேவை" என்றார் மன்னர்.

"சொல்கிறேன் மன்னா" என்ற வீரபத்ரன் தொடர்ந்தான் : "இந்த உலகில் நம்மை அவதரிக்கச் செய்பவள் தாய்தான். தாயை தெய்வமாக பூஜிக்கும் பண்பாடு நம்முடையது. அனைத்தையும் நாம் அன்னை உருவிலேயே பார்க்கிறோம். நாட்டை நாம் தாய் நாடு என்கிறோம். நம் மொழியை நாம் தாய்மொழி என்கிறோம். இந்தப் பூமியை நாம் நம் அன்னை பூமி என்கிறோம். நதிகளைக்கூட நாம் தாயெனக் கருதி பெண் பெயரால் யமுனா, கங்கா, காவிரி என அழைக்கிறோம். அவ்வளவு ஏன்? வாய் பேசத் தெரியாத பசுவை நாம் தெய்வமாக வணங்குகிறோம். அந்தப் பசுவுக்குத் தெரிந்த ஒரே வார்த்தை 'அம்மா'தான்..."




"சபாஷ் வீரபத்ரா" என்று உற்சாகத்தில் கூவிய மன்னர், "சரியான விடையைச் சொன்னாய். இருப்பினும் எனக்கு ஒரு சந்தேகம்" என்று மன்னர் கூறவும் வீரபத்ரனுக்கு எதுவும் புரியவில்லை.

"என்ன மன்னா?"

"மாடு மேய்க்கும் ஆயர்பாடி இளைஞனான நீ குருகுலத்தில் பயின்றாயா?"

"இல்லை மன்னா! மாடு மேய்த்துக் கொண்டே, குருகுல மாணவர்கள் படிப்பதைக் கேட்பேன். எல்லாம் கேள்வி ஞானம்தான்."

"நல்லது. என் இரண்டாவது கேள்விக்கான பதிலைச் சொல்."

"மன்னர் அவர்கள் என் மேல் சினம் கொள்ள மாட்டீர்கள் என்று உறுதி தந்தால் பதில் சொல்வதில் எனக்குத் தயக்கமேதும் இல்லை."

சற்றே சிரித்தார் மன்னர்.

பின், "சினம் கொள்ள மாட்டேன் வீரபத்ரா! தைரியமாகப் பதிலைச் சொல்!" என்றார்.

"நீங்கள்தான்" என்றான் வீரபத்ரன்.

"என்ன?"

**கோ**பத்தோடு இடத்தை விட்டு எழுந்தார் மன்னர்.

"மன்னா! இப்போதுதான் கோபம் கொள்ள மாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்தீர்கள்..."

"ஆமாம்... ஆமாம்..." என்று சினம் தணிந்து அமர்ந்த மன்னர், "விளக்கம் தேவை" என்றார்.

"அரசே! தவமிருந்து பெற்று, சீராட்டி நீங்கள் ஆளாக்கிய பெண்தான் இளவரசி தெய்வானை. இல்லையா?"

"ஆமாம்."

"தன்னுடைய வாழ்க்கையை முடிவு செய்ய வேண்டியது இளவரசி அவர்கள் தான். அந்த உரிமை அவர்களுக்கு மட்டுமே உண்டு. இல்லையா?"

"ஆமாம்."

"ஏதோ இரண்டு கேள்விகளுக்குப் பதில் கேட்பதன் மூலம், வீம்புக்காக, இளவரசியின் திருமண விஷயத்தில் தலையிட உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? சரியான பதிலைச் சொன்ன ஒரே காரணத்துக்காக, அந்த நபருக்கு இளவரசியை மணம்முடித்துத் தருவதாக நீங்கள் சொன்னது எந்தவிதத்தில் நியாயம்? இளவரசியின் ஒப்புதல் கேட்காமல் இப்படி நீங்கள் முடிவு செய்தது ஏன்? சரியான பதிலைச் சொன்ன நான் இளரவசியை மணந்து கொள்ள முடியுமா? எனவே, இப்படி அவசரப்பட்டு முடிவு எடுத்த நீங்களே உங்களது இரண்டாவது கேள்விக்குப் பதிலாகிறீர்கள்."

வீரபத்ரன் பேசி முடித்தான்.

"**ச**பாஷ் வீரபத்ரா! சபாஷ்! உன் அறிவுத் திறமையை மெச்சினோம். உன் விளக்கம் என் கண்களைத் திறந்து விட்டது. உனக்கு என்ன வேண்டும்? கேள்."

மகிழ்வோடு கேட்டார் மன்னர் மகுடபதி.

"மன்னா! அரசகுலத்தில் மாப்பிள்ளை பார்த்து இளவரசிக்கு மணம் முடித்து வையுங்கள்."

"ஆகட்டும். அப்புறம்?"

"இனி இந்த மாதிரி போட்டி அறிவிப்பதில்லை என தாங்கள் உறுதி கூற வேண்டும். வேறு எதுவும் எனக்கு வேண்டாம்" என்றான் வீரபத்ரன்.

"நீ சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். வாய்ப்புக் கிடைத்தும் பயன்படுத்திக் கெள்ளாத உன் பெருந்தன்மைக்கு எனது அன்புப் பரிசு. பெற்றுக் கொள்."

"நன்றி மன்னா!" என்று கூறிவிட்டு பரிசுடன் நடந்தான் வீரபத்ரன்.


---


"எங்க அப்பாவை சுத்தி எப்போதும் மருந்து, மாத்திரையா இருக்கும்."

"ஏன் உடம்பு சரியில்லையா அவருக்கு?"

"இல்லை. மருந்துக் கடையிலே வேலை பார்க்கறாரே!"

– பா. ஜெயக்குமார்





"அமெரிக்கா எங்கே இருக்குன்னு அவனைக் கேட்டதுக்கு தெரியாதுன்னு சொல்லிட்டுப் போறான்."

"அவனைத்தான் 'உலகம் தெரியாதவன்'னு சொல்வாங்களே! அவன்கிட்டே எதுக்குக் கேட்டே?"

– ஒரியூர் கே. சேகர்.

# கோகுலம் சுழல் கோப்பை



கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம்பெறுகின்றனவோ அப் பள்ளிக்கு கோகுலம் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையை உங்கள் பள்ளிக்கு நீங்கள் வாங்கிக் கொடுக்க விரும்பினால் உடனே படைப்புகளைத் தொடர்ந்து அனுப்பி வையுங்கள். இன்னும் பத்து மாதங்களே உள்ளன. விரைவாகச் செயல்படுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!

---


# கோகுலம்




1. உலகிலுள்ள தீவுகளுள் மிகப் பெரியது ______________
2. டெல்லியில் உள்ள வானியல் ஆராய்ச்சி மண்டபம் ______________
3. தொலைவில் உள்ள பொருட்களை பெரிதாகக் காட்டும் கருவி ______________
4. சுரங்கங்களில் வேலை செய்வோருக்கு உதவும் வகையில் காப்பு விளக்கைக் கண்டறிந்தவர் ______________
5. பூச்சிகளுக்கு ______________ கண்கள்
6. கல்கத்தா ______________ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
7. பறக்கும் பாலூட்டி ______________
8. திருக்குறளில் ______________ குறட்பாக்கள் உள்ளன.
9. தமிழ்நாட்டில் ______________ யில் முத்து கிடைக்கிறது.
10. அந்தமானின் தலைநகர் ______________

இந்தப் பத்து கேள்விகளுக்கும் விடைகளைக் கண்டுபிடித்து எழுதியனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதி, முகவரி கூப்பனையும் ஒட்டியனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முடிவு தேதி 29.2.2000.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 97.





# கோயில்களின்

சரித்திரத்தில் இடம் பெற்று சிறப்புடன் விளங்கிய நகரங்கள் பல உண்டு. அதில் பல நகரங்கள் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன. ஆனால் அதே காலத்தில் பொலிவுடன் விளங்கிய காஞ்சிபுரம் இன்றுவரை நிலைத்த புகழுடன் நிற்கிறது. வேகவதி ஆற்றங்கரையில் காஞ்சி மாநகரம் அமைந்துள்ளது. சங்க காலத்திலேயே தொண்டை நாட்டின் தலைநகராக இருந்த புகழ் மிகு காஞ்சி இன்றளவும் பெருமையுடன் திகழ்கிறது. இங்கு எண்ணிலடங்கா கோயில்கள் உள்ளன. கோயில்களில் இருக்கும் சிற்பங்களையும் எண்ணி மாளாது. தவிர, காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்கும் பெயர் போனது!

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையிலிருந்து 75 கி.மீ தூரத்தில் காஞ்சிபுரம் இருக்கிறது.

நகரை ஒட்டிய பாலாற்றில் வெள்ளம் வந்தால் நகரிலுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயரும். பாலாற்றில் ஆண்டில் சில நாட்கள் மட்டுமே வெள்ளப் பெருக்கு இருக்கும். மற்ற நாட்களில் மணற் பரப்பை மட்டுமே பார்க்க முடியும்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் தலங்களாக ஐந்து நகரங்கள் போற்றப்படுகின்றன. அவற்றில் முதலாவதாக உள்ள நிலத்தின் தலமாக காஞ்சி புகழப்படுகிறது.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் 'காஞ்சி மாநகர் புக்க காதை' என்ற தனியான படலமே இருக்கிறது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பக்திப் பாடல்களில் காஞ்சி நகரைப் பற்றியும் இங்குள்ள கோயில்களைப் பற்றியும் பாடப்பட்ட பாடல்கள் எண்ணிலடங்காது. அந்த அளவுக்குப் பெருமை பெற்ற தலம் காஞ்சி.

தொண்டை நன்னாடு சான்றோருடைத்து என்பது முதுமொழி. கல்வியில் கரையில்லாத காஞ்சி என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் பாடியுள்ளார். பல்லவர்கள் ஆட்சிக் காலத்திலேயே கல்வியில் காஞ்சி சிறந்து விளங்கியுள்ளது. இங்கு பல்கலைக் கழகமும் இருந்துள்ளது. அர்த்த சாஸ்திரம் என்னும் முதலாவது அரசியல் நூலை எழுதிய சாணக்கியர் காஞ்சி நகரத்தவரே. காஞ்சி மாநகரில் மிக அதிக அளவில் பள்ளிகள் இருக்கின்றன.

எங்கள் ஊரில் மிகவும் பெயர் பெற்ற கோயில் பெரிய காஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு ஏகாம்பர நாதர் திருக்கோயில் ஆகும். இங்கு சிற்பங்கள் அதிகம். இங்கு ஒரு அதிசயம் என்னவென்றால் ஒரு






# ஊர்!

காஞ்சிபுரத்தில் அதிகம் பட்டு உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். பட்டு, ஜரிகையைக் கொண்டு நெசவு செய்து சேலையை உருவாக்குகிறார்கள். காஞ்சிபுரம் பட்டு என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். இங்கு எல்லோரும் சுத்தமான ஜரிகை கொண்டு நெசவு நெய்கின்றனர். காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் தமிழ்நாடு மட்டுமல்லாமல் நாடு முழுமையும் பாராட்டி மகிழும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. நகர மக்களுக்கு வாழ்வளிக்கும் முக்கிய தொழில் இதுவே. தமிழ்நாட்டிலேயே நெல் உற்பத்தியில் முதல் இடம் வகிப்பது காஞ்சி மாவட்டமே. தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்ற பெயரை

சிவலிங்கத்தில் 1008 சிவலிங்கம் இருக்கும் சிறப்புடையது சிற்பம். கோயிலைச் சுற்றி 108 சிவலிங்கங்கள் உள்ளன. இங்கு ஆயிரம் தூண்கள் உடைய மண்டபம் இருக்கிறது. ஏகாம்பரநாதர் கோயிலின் 192 அடி உயர கோபுரமும் மிகவும் அருமையாக இருக்கும். இத் தலம் காமாட்சி தவம் இருந்த தலம். இதுவே இத் தலத்தின் முக்கிய சிறப்பாகும். கைலாச நாதர் கோயில் இங்கு உண்டு.

காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி என்று சொல்லப்படுபவைகளில் முதன்மையாக விளங்குவது காஞ்சி காமாட்சியே. 32 அறங்களைச் செய்து மன்னுயிர்களைக் காத்த திருத்தலம். அம்பாள் அமர்ந்த திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறாள். தங்கத்தால் ஆன கோபுரம் உள்ளது. இதைக் காண பல நாடுகளிலிருந்தும் வருகின்றனர்.



தஞ்சை மாவட்டத்திடமிருந்து காஞ்சி மாவட்டம் பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

காஞ்சி மாநகரம் மூவாயிரம் ஆண்டுகளாக எழில் குன்றாமல் இருந்து வருகிறது. இந் நகரிலுள்ள கோயில்கள், பூங்காக்கள், குளங்கள் ஆகியவை மக்களின் சொத்தாகும். நாங்கள் ரசிக்கும் காஞ்சிபுரத்தை நீங்களும் ஒருமுறை வந்து பார்க்கலாமே!

– **பி. கிருஷ்ணகுமாரி,**
**காஞ்சிபுரம்.**

## காந்தி வந்த ஊர்!

ஒவ்வொரு ஊருக்கும் தனித்தனி சிறப்பு உண்டு. எங்கள் ஊருக்கும் உண்டு. கோவை மாவட்டம் அவினாசி வட்டம் அன்னூர் அருகிலுள்ள சொக்கம்பாளையம்தான் எங்கள் சிறு கிராமம். 'தேச பிதா' காந்தியடிகள் பொற்பாதம் பதிந்த ஊர். நாம் சுதந்தரம் வாங்குவதற்கு முன்னரே 6.2.1934ல் அவர் வந்து சென்ற ஊர். அவர் நினைவாக அவர் காலடி பதித்த இடத்தில், காந்தி – கஸ்தூரிபா நூற்பு ஆலையும் காந்தி திருமண மண்டபமும் அமைத்து அவருக்கு இன்றளவும் பெருமை சேர்க்கின்றோம். சுதந்தரத்திற்காக போராடிய தியாகிகள் இன்றும் எங்கள் மண்ணில் வாழ்ந்து எங்களை வழி நடத்துகின்றார்கள்.

காந்திஜி அரசு மேனிலைப் பள்ளி, தேசிய வித்யாசாலை ஆரம்பப் பள்ளி ஆகியன அருகிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் கல்வி பயில வசதியாக உள்ளது. சுற்றுப்புற ஊர்களில் வசிக்கும் வசதியற்ற மாணவ மாணவியருக்கென தங்கிப் படிக்க இலவச அரசு மாணவ – மாணவியர் விடுதிகள் உண்டு. அது ஒன்று இரண்டல்ல, தமிழகத்தில் – எந்தவொரு கிராமத்திலும் இல்லாத அளவு ஐந்து விடுதிகள் உள்ளன. எங்கள் பள்ளியும் ஆண்டு இறுதித் தேர்வில் ஆண்டுதோறும் 85% தேர்ச்சி பெற்று எங்கள் வட்டத்திலேயே நல்ல திறனுடன் செயல்படுகிறது.



மருத்துவ வசதிக்கென்று அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் அனைத்து தரத்து மக்களின் வசதிக்கென்று இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கியின் கிளையும் அமைந்துள்ளன. ஓய்வு நேரத்தில் பொழுதை வீணாக்கா வண்ணம் அறிவை வளர்க்கவும் செய்திகள் அறிந்திடவும் நூலகமும் உண்டு. பேருந்து வசதியும் உங்களுக்காகவே நல்ல முறையில் செயல் படுகின்றது.


ஒருமுறை சொக்கம்பாளையம் வந்து செல்லுங்கள்!

– **எஸ். சுப்புலட்சுமி,**
**எட்டாம் வகுப்பு,**
**சொக்கம்பாளையம்.**

# 100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

திருச்சி, பெரம்பலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவாகவும் நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

இந்த மாதப் போட்டி : பொன்மொழிகள். உங்களுக்குத் தெரிந்த பொன்மொழிகளை எழுதியனுப்புங்கள். விரைவில் மற்ற மாவட்ட வாசகர்களுக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கும். காத்திருங்கள்!



## கோகுலம் க்விஸ் முடிவு

டிசம்பர் கோகுலம் க்விஸ் போட்டியில் ஆர்வத்துடன் நிறைய பேர் பங்கேற்றனர். சரியான விடைகளை எழுதிய இருபது பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:**

1. ஆர். கீர்த்திவாசன், ஐந்தாம் வகுப்பு, குமாரவாடி கிராமம், காஞ்சி மாவட்டம்.
2. டி.ஜி.சிவப்ரியா, மூன்றாம் வகுப்பு, காஞ்சிபுரம்.
3. வி. குணசேகரன், காட்டுச்சேரி.
4. பா. பிரியதர்ஷினி, மதுரை.
5. க. வெங்கடேஷ், செக்காலை, காரைக்குடி.
6. வி. அஜய்ராஜா, இராமநாதபுரம்.
7. இரா. செண்பகப் பூங்குழலி, கோவை.
8. எஸ். சந்தோஷ்குமார், நெய்வேலி.
9. பி. ரமேஷ், புலிவலம்.
10. க. ஹரிணி, எட்டாம் வகுப்பு, வேப்பம்பட்டு கிராமம், திருவள்ளூர்.
11. எம்.கே. நாகலக்ஷ்மி, ஒன்பதாம் வகுப்பு, விக்கிரமசிங்கபுரம்.
12. வி. சுகவனேஸ்வரி, ஜலகண்டபுரம்.
13. எஸ். ராதிகா, திருச்சி.
14. சே. வினோத் பாண்டியன், மானாமதுரை.
15. ஆர். ரேணுகா, ஒன்பதாம் வகுப்பு, ராணிப்பேட்டை.
16. ஆ. சுகந்தா, ஒன்பதாம் வகுப்பு, திருநெல்வேலி.
17. என். கிருத்திகா, வாலாஜாபேட்டை.
18. எம். முஹம்மது நூருல்லாஹ், அரங்கக்குடி.
19. திவ்யா சௌந்தர், கோவை.
20. சி. முத்துகுமார், தாம்பரம்.

**சரியான விடை:**

1. மாமல்லபுரத்தை நிறுவியவர் நரசிம்மவர்மர்.
2. பவளம் ஒரு கடல் பிராணி.
3. தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி நெய்வேலியில் வெட்டி எடுக்கப்படுகிறது.
4. நமக்கு மூன்று வகை பற்கள் உள்ளன. வெட்டுப் பற்கள், கோரைப் பற்கள், கடவாய்ப் பற்கள்.
5. பாண்டியரின் கொடியில் உள்ள சின்னம் மீன்.
6. அண்மையில் ஓய்வுபெற்ற ஜெர்மனியின் டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராஃப்.
7. ஜப்பானின் தலை நகரம் டோக்கியோ.
8. பத்ரிநாத் கோயில் உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ளது.
9. குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும்.
10. ஊசல் கடிகாரத்தைக் கண்டறிந்தவர் கிறிஸ்டின் ஹைஜென்ஸ்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

# கேட்கட்டுமா டாக்டர்?

● *தி. சே. அறிவழகன், திருப்புலிவனம்.*

*? கூன்விழக் காரணம் என்ன? கூன் விழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?*

! குழந்தைகளின் வளர்ச்சிப் பருவத்தில் வைட்டமின் - டி மற்றும் பாஸ்பரஸ் தாது குறைவாக இருக்குமானால், முதுகெலும்பின் வளர்ச்சி பாதிக்கப்படும். இதன் விளைவாக வயது ஏற ஏற முதுகெலும்பு முன்பக்கமாக வளைந்து, கூன் விழும். முதுமையில் கால்சியம் தாது உடலில் குறையும் போது முதுகெலும்பு தேய்ந்து கூன் விழலாம். காசநோய்; புற்றுநோய் போன்றவை முதுகெலும்பை அரித்துக் கூன் விழச் செய்யலாம். முதுகுத் தண்டை நிமிர்த்திப் பிடித்திருக்கின்ற முதுகுத் தசைநார்கள் வயதின் காரணமாவோ, நோயின் காரணமாகவோ பலவீனமடைந்தால், கூன் விழுவதற்கு அதிக வாய்ப்புண்டு. கடைசியாக ஒரு காரணம் - ஃபுளோரைடு தாது ரத்தத்தில் அளவுக்கதிகமாக இருந்தால், அது எலும்புகளில் படிந்து கூன் விழச் செய்யும். கூன் விழுவதைத் தவிர்க்க விரும்புகிறவர்கள் முதுகுத் தசைகளுக்கும், எலும்புகளுக்கும் பலம் தரக்கூடிய உடற்பயிற்சிகளை சிறு வயதிலிருந்தே மேற்கொள்ள வேண்டும். நிமிர்ந்து உட்காருவது, நிமிர்ந்து நடப்பது ஆகியவையும் கூன் விழுவதைத் தடுக்க உதவும். குழந்தைப் பருவத்தில் பால், முட்டை, மீன், காய்கறிகளை அதிகம் சாப்பிட வேண்டும்.

● *ஆர். ரவிவர்மன், கபிஸ்தலம்.*


*? என் அம்மாவுக்குத் தண்ணீரில் நின்றால் கால்களில் அரிப்பு ஏற்படுகிறது. இது எதனால், டாக்டர்? இதைக் குணப்படுத்த ஒரு வழி சொல்லுங்கள்.*

! காளான் கிருமிகள் கால் பாதங்களைப் பாதித்திருந்தால் இவ்வாறு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைக் குணப்படுத்தக் காளான் கொல்லிக் களிம்புகள் உதவும். தினமும் காலை, இரவு இரு வேளைகளில் சோப்புத் தண்ணீரில் கால்களைச் சுத்தப்படுத்தி, ஈரத்தைத் துடைத்து விட்டு, காளான் கொல்லிக் களிம்பைத் தடவ ஒரு வாரத்தில் அரிப்பு நின்றுவிடும்.

● *க. பிரஸாத், திருவானைக் கோவில்.*

*? மூளைக் காய்ச்சல் என்றால் என்ன? ஏன் ஏற்படுகிறது?*

! மூளை மற்றும் மூளைச் சவ்வுகளில் பாக்டீரியா அல்லது வைரஸ் கிருமிகள் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தும்பொழுது அங்கு அழற்சி தோன்றி காய்ச்சல் உண்டாகும். இது தான் 'மூளைக் காய்ச்சல்' (Brain Fever) என்று அழைக்கப்படுகிறது. இந்த நோய் இரு வகைப்படும். நோய்க் கிருமிகள் மூளைத் திசுக்களை மட்டும் தாக்கும் போது வருகின்ற காய்ச்சல் 'மூளை அழற்சிக் காய்ச்சல்' (ENCEPHALITIS) என்றும், மூளைச் சவ்வுகள் மட்டும் பாதிக்கப்படும் போது வருகின்ற காய்ச்சல் 'மூளையுறைக் காய்ச்சல்' (MENINGITIS) என்றும் கூறப்படுகின்றன. பொதுவாக பாக்டீரியா கிருமிகள் தொண்டை வழியாக உடலுக்குள் நுழைந்து, ரத்தத்தில் கலந்து, மூளைக்குச் சென்று மூளைக் காய்ச்சலை ஏற்படுத்தும். பெரும்பாலும் சிறு குழந்தைகளும் சிறுவர் சிறுமியரும்தான் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். குழந்தைப் பருவத்தில் இந்த நோய்க்குரியத்








**டாக்டர். கு. கணேசன்**

# எவ்வளவு நேரம் தூங்க வேண்டும்?



தடுப்பூசியை முறைப் படி போட்டுக் கொண் டால் மூளைக் காய்ச் சல் வருவதில்லை.

● **பி. ரவிச்சந்திரன், பெண்ணாகரம்.**

***?** நாம் சராசரி எவ் வளவு நேரம் தூங்க வேண்டும்? அதிக நேரமோ, குறைந்த நேரமோ தூங்கினால் ஏதாவது நோய் வருமா, டாக்டர்?*



! பிறந்த குழந்தைகள் தினமும் 16 மணி நேரம் தூங்குவார்கள். மூன்று மாதத்திலிருந்து ஒரு வயது வரை 12 மணி நேரம் தூங்கு வார்கள். அதற்குப் பிறகு அனைவருக் குமே எட்டு மணி நேரம் தூக்கம் அவசி யம். அதிக நேரம் தூங்கினால் குழந்தை கள் படுக்கையை நனைப்பார்கள். பெரிய வர்களுக்கு தொப்பை விழும்; இதய ரத்த நாள நோய்கள் வரும். குறைவாகத் தூங்கி னால் களைப்பு, தளர்வு, உடல் பல வீனம், ஆற்றல் குறைவு, தசைவலி போன்ற தொல்லைகள் வரும். சிறுவர் சிறுமியர் பாடங்களில் சரிவர கவனம் செலுத்த இய லாது; படித்தது மறந்து போகும்; மனப்பாட சக்தி குறையும்; படிப்பி லும் ஆர்வம் குறையும்; பகலில் தூக்கம் வரும்.



● **இராம. ஜெயகாந்தன், துத்திப்பட்டு.**

***?** மே '95 கோகுலம் இதழில் ஒரு கேள் விக்கான பதிலில் தண்ணீரை விட, எண் ணெய்யின் அடர்த்தி அதிகம் என்று உள் ளது. என் புத்தகத்தில் 'அடர்த்தி குறைந்த பொருள் அடர்த்தி அதிகமுள்ள பொருளில் மிதக்கும்' என்று உள்ளது. அப்படியென் றால் எண்ணெய்யின் அடர்த்தி அதிகமா, குறைவா?*

! உன் புத்தகத்தில் உள்ளதுதான் சரி, ஜெய காந்தன். தண்ணீரை விட எண்ணெய்யின் அடர்த்தி குறைவு. அதனால்தான் தண்ணீரில் எண்ணெய் மிதக்கிறது.

● **அ. அருண்குமார், கோட்டூர்.**

***?** டாக்டர், மெட்ராஸ்-ஐ என்றால் என்ன? இது எவ்வாறு பரவுகிறது? இதற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டது, ஏன்?*

! அடினோ வைரஸ் (Adeno Virus) எனும் கிருமிகள் கண்களின் வெண்படலத்தைப் பாதிப்பதால் 'சென்னைக் கண் நோய்' வரு கிறது. நோயாளியின் விழிவெண் படலத் திலும் பீளையிலும் கிருமிகள் இருக்கும். நோயாளியோடு நெருங்கிப் பழகும் போது அல்லது அருகில் இருக்க நேரிடும்போது மற்ற வர்களுக்கும் இந்த நோய் பரவிவிடும். நோயாளி பயன்படுத்திய துவாலை, கைக் குட்டை, துணிகள், பொருள்கள் முதலிய வற்றை அடுத்தவர்கள் பயன்படுத்தும் போது அவர்களுக்கு இந்த நோய் பரவிவிடும். சென் னைக் கண் நோய் வந்தவர்கள் கண்களைக் கசக்கி விட்டு, கையைச் சுத்தம் செய்யாமல் கதவுப் பிடிகளைப் பிடித்தாலோ, தண்ணீர்க் குழாய்களைத் திருகினாலோ, தொலைக்காட் சிப் பெட்டியை இயக்கினாலோ, வாகனங் களின் கம்பிகளைப் பற்றினாலோ அவற்றின் மூலமாக அடுத்தவர்களுக்குக் கிருமிகள் பரவி சென்னைக் கண் நோயைப் பரப்பிவிடும். முதன் முதலில் இந்த நோய் சென்னையில்தான் பரவி யது. இந்த நோய்க்குரிய கிருமிகளும் சென்னை யில்தான் அடையாளம் காணப்பட்டன. ஆகவேதான் இதற்குச் சென்னைக் கண் நோய் என்று பெயரிடப்பட்டது.



• ஸ்டீவ்வாஹ்



• சச்சின்

# சாதனை மன்னர்கள்!

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் மூன்று டெஸ்ட் மற்றும் ஒரு தினப் போட்டிகளில் விளையாட உள்ளனர். டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்து விட்டன. மூன்றிலும் வெற்றி பெற்று ஆஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் விளையாடிய முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவ்வாஹ் ஒரு சாதனை புரிந்தார். டெஸ்ட் போட்டிகள் விளையாடும் அனைத்து நாடுகளுக்கும் எதிராகச் சதமடித்த முதல் வீரர் இவர்தான்! இதுவரை இந்தியாவுடன் மட்டும்தான் டெஸ்ட் போட்டிகளில் அவர் சதம் அடிக்காமலிருந்தார். அந்தக் குறை இந்தப் போட்டியில் நீங்கியது.

இத்தகைய பெருமையை இவரின் சகோதரர் மார்க்வாஹ் பெற இருந்தார். ஆனால் சமீபத்தில் நடந்த ஜிம்பாப்வேக்கு எதிரான டெஸ்டில் 90 ரன்களில் ஆட்டம் இழந்ததால் வாய்ப்புப் பறிபோனது. இவர் ஜிம்பாப்வே தவிர்த்து அனைத்து நாடுகளுக்கு எதிராகவும் சதமடித்திருக்கிறார்.

சகோதரர்கள் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்!

ஆஸ்திரேலிய அணியில் பிரெட் லீ என்ற புதிய ஆட்டக்காரர் சேர்க்கப்பட்டிருக்கிறார். இவர் பௌலிங்கில் வெளுத்து வாங்குகிறார். இந்தியாவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் ஐந்து விக்கெட்டுகளை சாய்த்து தொடரை வெல்ல உதவியிருக்கிறார்.

ஆஸ்திரேலிய டெஸ்ட் போட்டியில் தொடரைக் கைப்பற்றாவிட்டாலும் இந்திய கேப்டன் சச்சின் டெண்டுல்கரும் ஒரு சாதனை புரிந்திருக்கிறார். இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 22 வது சதத்தைப் பூர்த்தி செய்தார். இதற்கு முன் அசாருதீனும் சச்சினும் 21 சதங்கள் எடுத்து 2வது இடத்தில் சமநிலையில் இருந்தனர். இப்போது அசாருக்கு மூன்றாவது இடம். முதல் இடம் சுனில் கவாஸ்கருக்கு. டெண்டுல்கர் 1999ல் மட்டும் டெஸ்ட் போட்டிகளில் ஆயிரம் ரன்களைக் குவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**
**Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621**
**Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-**
**Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-**

# பிருந்தாவனம்



பஞ்ச வர்ணக்
கிளிக்கு
வண்ணம்
தீட்டுங்கள்!




- ஈக்கள் சுமார் முப்பது வகையான நோய்களைப் பரப்புகின்றன.
- 100 கதவுகள் உள்ள நகரம் என அழைக்கப்படுவது எகிப்து.
- ஒரு கோழி சராசரியாக ஆண்டுக்கு 150 முதல் 300 முட்டைகள் வரை இடும்.
- 'கராத்தே' என்ற வார்த்தைக்கு 'வெறும்கை' என்று பொருள்.

தொகுப்பு: நாகூர் ஆர். லோகநாதன்

தொடர்பில்லாத
பொருள் எது?





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 " Registered as a Newspaper in Srilanka

